கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



கம்பியின் மேல்...

KALKI • 17.05.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



- நடித்து வளர்த்த கருணாநிதி!
- விஜயகாந்தின் ஹோட்டல் ஃபார்முலா!
- பறக்குது ரயில்; தெறிக்குது செய்தி!

தேர்தல் ஸ்பெஷல்-2

உதகை மாவட்டச் சிறப்பிதழ் கூப்பன் உள்ளே...


Expressions of Taste
B Natural®
Juices
For The First Time In India
MIRUNA™
Pineapple Drink
AAMRAS
125 ml
Apple Drink
B Natural™
PREMIUM JAMUN
NO PRESERVATIVES
Jamun Juice
(Specially good for diabetics)
MIRUNA
AAMRAS
200 ml
1 Ltr
500 ml
330 ml
B Natural
PREMIUM ORANGE MANGO
B Natural
PREMIUM ROSE LYCHEE
B Natural
ORANGE JUICE
B Natural
PREMIUM MIXED FRUIT
B Natural
PREMIUM MANGO
B Natural
PREMIUM PINK GUAVA
B Natural
PREMIUM POMEGRANATE
B Natural
PINEAPPLE JUICE
B Natural
APPLE JUICE
Balan Natural Food (P) Limited, For Trade & Consumer Enq: 044 - 4232 8080



கல்கி
17.05.2009

அசத்தும் ஆங்கிலெட்ஸ்!

"ஃபேஷன் ஆக்ஸஸரீஸில் உங்களுக்கு மிகவும் பிடித்த பொருள் என்ன?'' என்று எந்தப் பெண்ணிடம் கேட்டாலும் பட்டென்று பதில் வரும் 'ஆங்க்லெட்ஸ்' என. அதென்ன என அப்பாவியாக முழிக்கும் ஆண்மகன்கள் அறிக... கொலுசுதான் ஆங்க்லெட்ஸ். மாடர்ன் பெண்கள் வெள்ளியில் போடாமல் கிரிஸ்டல், மணி, விதவித பீட்ஸ், கயிறு... என போட்டு அதகளம் பண்ணுகிறார்கள். விலையும் மலிவு. அவர்களுக்குச் சில டிப்ஸ்.



★ ஸ்டைலாக, கலர்ஃபுல்லாக, ட்ரெண்டியாக இருக்கிறதா எனப் பார்க்கவும். லைட் வெயிட்தான் பெஸ்ட்!

★ பெசன்ட் நகர் பீச் பக்கம் போனால் குறத்திகளிடம் இருக்கும் மணி, பீட்ஸ்களிலிருந்து நீங்களே செலக்ட் பண்ணி புது ஸ்டைலில் போடலாம். பல சமயம் குறத்திகள் காலில் மாட்டியிருக்கும் ஆங்க்லெட்ஸையே, ''வாவ், ஸச் எ யுனிக் டிஸைன்'' என பீட்ஸாவைக் கடித்துக் கொண்டு, வாங்கிப் போய்விடும் பெண்களும் உண்டு.

★ ஆங்க்லெட்ஸ் கரெக்டாக கணுக்காலில் இருப்பதுதான் ட்ரெண்ட்.

★ கேப்ரீஸ் மற்றும் ஷார்ட்ஸுடன் ஆங்க்லெட்ஸ் போட்டால் பிரமாதமாகத் தெரியும்.


★ ஷார்ட் ட்ரஸ்ஸுடன் சிம்பிள் செயின் அல்லது கயிறு டிஸைன் ஆங்க்லெட் போட்டால் சூப்பர்.

★ ஹிப் ஹாப் பார்ட்டி அல்லது பீச் பார்ட்டி என்றால் நீலம், பச்சை, மோவ் கலர்களில் வரும் பீட்ஸ் ஆங்க்லெட் போட்டால் அட்டகாசம்!

★ ஸ்டாக்கிங்ஸ் உள்ளே ஒரு நாளும் கொலுசைப் போடாதீர்கள். டைட்டாக இருக்கும் ஸ்டாக்கிங்ஸ் கிழிந்து போகும்.

★ மெட்டாலிக் ஷூஸ் போட்டு அதனுடன் கொலுசைப் போடாதீர்கள். பளபள காலணி, பளபள கொலுசு- இரண்டுக்கும் எடுபடாது. சிம்பிளான டைட் கயிறு





போன்ற டிஸைன் ஆங்க்லெட் போடலாம்.

★ ஒரு சிம்பிள் டிப்ஸ் - கால்களில் அட்டகாசமான ஆங்க்லெட்ஸ் இருந்தால் காலணி சிம்பிளாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஹைலைட்டாகும்.

★ கால்கள் பளிச்சென்று இருக்க வேண்டும். மாதம் ஒரு முறை கண்டிப்பாக பெடிக்யூர் செய்ய வேண்டும்.

★ அடிக்கடி நெயில் பாலீஷ் போடவும். பளிச் பாதங்களில்தான் ஆங்க்லெட்ஸும் மின்னும்.

★ பர்ஃப்யூம், சாக்லேட், பூக்கள், கார்ட்ஸ் என காதலிகளுக்கு கிஃப்ட் தந்து அசத்தும் ஆண்கள் இனி ஆங்க்லெட்ஸ் வாங்கிக் கொடுக்கலாம். (அல்வா மாத்திரம் கொடுக்காதீங்க).

ஆங்க்லெட்ஸ் ஒற்றைக் காலிலும் போடலாம். (''ஒரு கால் கொலுசை, எங்கே தொலைச்சே'' என அம்மாக்கள் இனி ஹை வோல்டேஜில் கத்தவே மாட்டார்கள்.)

சிங்கம் சிங்கிளா வர்ற மாதிரி சிங்கிள் ஆங்க்லெட்ஸுக்கு டபுள் வெல்கம்!

- லதா சேகர்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்
தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)
தொலைநகல் : **044 - 4343 8899**
மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்கள் :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com
சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ.3,800/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

'படாத பாடுபட்டு, படிக்கிறதுக்கு வீட்டுல பர்மிஷன் வாங்கி வந்து காலேஜுல சேர்றதே ஒரு கின்னஸ் சாதனைதான். இதுக்குப் பிறகு வர்ற ஒவ்வொரு மூவ்மெண்ட்டும் அடிஷனல் ரெக்கார்டுதான்' என்று சொல்லும் காயல் பட்டினம் வாவு வஜிஹா (Wavoo wajeeha) கல்லூரியின் பர்தா பறவைகளைப் பேச வைத்ததே பெரும்பாடுதான். அந்த இளம் குயில்களின் இனிப்பு கலாட்டாவில் பூத்த பூந்தி பிட்ஸ்கள்...



இனிப்பு

சிங்கிள் ஒற்றுமை

ப்ரண்ட்ஸுகளுக்கும் கடிகார முள்ளுக்கும் ஆறு வித்தியாசம் இருந்தா இருந்துட்டுப் போகட்டும். ஒரே ஒரு ஒற்றுமையைச் சொல்லுங்க. என்ன 'பே'-ன்னு முழிக்கறே. 'எங்க சுத்தினாலும் ஒரு இடத்துல மீட் பண்ணியே ஆகணும். சரிதானே!

- ஃபாஹிரா



உடம்புச் சூட்டை உதைச்சு அனுப்ப... கடற்பாசி ஜெல்லி

அக்னி நட்சத்திரமாட்டம் கொதிக்கிற வாணலியில (என்ன வானவில்லா? டமாரம் கிழிஞ்சிடுச்சா... வானிலையுமில்ல வானவில்லும் இல்ல. வாணலிப்பா மெட்ராஸ் பாஷையில சொன்னா 'சட்டி') 2 லிட்டர் தண்ணீரை ஊற்றி 20 கிராம் கடற்பாசியைப் போட்டு நல்லா கொதிக்க வெச்சா குச்சி ஐஸ் மாதிரி கரைஞ்சுடும். அதுல 2 கப் சர்க்கரையைக் கொட்டு. அது கரைஞ்சதும் அப்புறம் ஒரு எலுமிச்சை பழத்தைச் சாறு எடுத்து ஊற்று. அடுத்து சின்னச் சின்ன கிண்ணங்களில் நிரப்பி சூடு ஆறியதும் ஃப்ரிஜ்ஜில் வைத்து 'சில்'லுன்னு குளிர்ந்ததும் சாப்பிடு. அம்புட்டுதான்.



பஸ் ஓட்டச் சொல்வாங்களா?

- ரிஜ்வானா

சக்ஸஸ் ஃபார்முலா

எட்டு மணி நேரம் தூங்கு; எட்டு மணி நேரம் வேலை செய்!

ஒண்ணு மட்டும் உஷாரா பாத்துக்கோ... அது ரெண்டும் ஒரே எட்டு மணிநேரமா இல்லாம பார்த்துக்கோ.

- ஆயிஷா பீவி

நோ யூஸ் பேக்

மார்க்கெட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போக முடியாத பை எது?

தொப்'பை'தானே!

- ஸாரா ஃபசிஹா

தொகுப்பு : ஆர்.பாலா

ஓடாம கேளு ஒரு தத்துவம் சொல்றேன்

ஹோட்டல்ல காசு கொடுக்க லேன்னா

மாவாட்டச் சொல்வாங்க.

பஸ்ல காசு கொடுக்கலேன்னா

(சாப்பிட்டு வாய் ஒட்டிக்கலைன்னா சொல்லுங்க... நாங்களும் ட்ரை பண்றோம்)

ஃபைனல் டிப்ஸ்:

கடையில கடற்பாசிய சைனா கிராஸ்ன்னு கேட்டா கிடைக்கும். கவர்ச்சிக்குக் கொஞ்சம் கலர் சேர்த்துக்க லாம். இளநீரில் செஞ்ச நமீதா மாதிரி எக்ஸ்ட்ரா குளிர்ச்சியா இருக்கும்.

- ஐதுருஸ்மா



ஞாபகப்பரண்

உணர்ந்திருப்பேன்
உனது ஆளுமையை;
உன் மீதான என் காதல்
முடமாக்கப்படாமல்
இருந்திருந்தால். இப்போதும்...
துளிர்க்கிறது கண்ணீர்
என் ஞாபகப் பரணில்
தூசி தட்டும்போதெல்லாம்.

- பி.கே.ராஜேஸ்வரி

தமிழகத்தின் மற்ற தொகுதிகளோடு ஒப்பிடும்போது, 'சபாஷ்... சரியான போட்டி' என்று சொல்ல வைப்பது சிவகங்கை தொகுதிதான். எட்டாவது முறையாக இங்கே போட்டியிடும் ப.சிதம்பரத்துக்குக் கடும் சவாலாக இருக்கிறார் அ.தி.மு.க. வேட்பாளரான ராஜ கண்ணப்பன். பதின்மூன்று ஆண்டு காலம் வனவாசம் போயிருந்த கண்ணப்பன், அ.தி.மு.க.வில் மீண்டும் இணைந்த பிறகு ஜெ. கொடுத்திருக்கும் வாய்ப்பு. தொகுதியில் கணிசமாக இருக்கும் யாதவர் வகுப்பைச் சேர்ந்தவர் கண்ணப்பன். மிகவும் மைனாரிட்டியாக இருக்கும் நாட்டுக் கோட்டை செட்டியார் வகுப்பைச் சேர்ந்த சிதம்பரம் பல முறை வென்றதற்குக் காரணம், ஜாதிகளை மீறிய அவரது தனிப்பட்ட இமேஜும், செல்வாக்கும் தான். ஆனால் இந்த முறை சிவகங்கை அவருக்கு கண்ணாமூச்சி காட்டுகிறது என்கிறார்கள்.

''தொகுதிக்கு அவர் ஒன்றும் செய்யவில்லை'' என்று பரவலாக ஒரு பேச்சு இருக்கிறது. தொகுதியில் பெயர் சொல்லும்படி ஒரு தொழிற்சாலை இல்லை. நிறைய கிராமங்களில் குடிதண்ணீர்ப் பிரச்னை. மொட்டையன் வயலைச் சேர்ந்த மெய்யப்பன், ''எங்க ஊர்ல குடி தண்ணீர்ப் பிரச்னை கடுமையாக இருக்கு. ஆனால் சிதம்பரம் ஒன்றுமே செய்யவில்லை'' என்கிறார். பாமர மக்களுடன் தோளோடு தோள் நின்று அவர்களது சுக துக்கங்களில் பங்கு கொள்ளத் தயங்குகிறார் சிதம்பரம் என்ற பேச்சும் இருக்கிறது.


● கார்த்தி



என்னதான் உள்ளூர் பிரச்னைகள் தலைவிரித்து ஆடினாலும், இறுதியில் தமது இமேஜ் தம்மைக் கரை சேர்த்துவிடும் என்று சிதம்பரம் நம்புகிறார். இதற்கு உதாரணமாக 1998ல் காளிமுத்துவை எதிர்த்துப் போட்டியிட்டதைச் சொல்கிறார்கள். சரிக்குச் சமமான, வலுவான கூட்டணி சார்பாகப் போட்டியிட்ட காளிமுத்து, இறுதியில் ஐம்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் சிதம்பரத்திடம் தோற்றார். எனவே இந்த முறையும் லோக்கல் எதிர்ப்புகளை மீறி வெற்றி நிச்சயம் என்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் இந்தத் தொகுதியில் தீவிரமாக அமுல் செய்யப்பட்டதால், மக்கள் காங்கிரஸுக்குத்தான் வோட்டுப் போடுவார்கள் என்றும் அக்கட்சி நம்புகிறது. தமது பிரசாரத்தில் ப.சிதம்பரம், ''மீண்டும் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் 150 நாட்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படும்'' என்பதை முக்கியமாகச் சொல்கிறார். ''என்மேல் எந்த வழக்கும் இல்லை. என்னால் தொகுதிக்கு எந்த இழுக்கும் இல்லை'' என்று கண்ணப்பனை இழுக்கிறார். தே.மு.தி.க. வாக்குகளைப் பிரிப்பது தமக்குப் பெரிய அளவில் உதவும் என்றும் நம்புகிறார் ப.சிதம்பரம். ஆனால் இந்த நம்பிக்கைக்கு வேட்டு வைக்கிறார், ''சிதம்பரத்திடம் இருந்து சிவகங்கையை மீட்போம்'' என்ற இயக்கம் நடத்தும் மருது அழகுராஜ். ''சிதம்பரம் ஏழைகளுக்குப் பயன்படாத குரோட்டன்ஸ் செடி'' என்கிறார் அவர்! தொகுதி முழுக்க தே.மு.தி.க. தொண்டர்களைச் சந்தித்து ''உங்கள் வாக்கை வீணடித்து விடாதீர்கள். விஜயகாந்துக்குப் போடுகிற வோட்டு,

கம்பி மேல் சிதம்பரம்! - சிவகங்கை சாகசம்



வேரில்லா செடிக்குத் தண்ணீர் பாய்ச்சுகிற வேலையாக அமைந்துவிடும். விரக்தியின் அடிப்படையில் வாக்களிக்காதீர்கள்'' என்று வலியுறுத்தி வருகிறார் மருது அழகுராஜ்.



* செல்வி, மெடில்டா

தொகுதியில் பெண்கள் உட்பட எல்லோருக்கும் அறிமுகம் ஆகியிருப்பது சிதம்பரத்தின் பிளஸ் பாயிண்ட். அரியக்குடியில் நாம் சந்தித்த செல்விக்கும் மெடில்டாவுக்கும் சிதம்பரத்தை நன்கு தெரிகிறது. எதிரணி வேட்பாளரைத் தெரியவில்லை.

''ப.சிதம்பரத்தின் பலம் அவரிடம் உள்ள பணம்; அவரது பலவீனம், தொகுதியெங்கும் அவருக்கு உள்ள எதிர்ப்பு'' என்று சிதம்பரத்தை மதிப்பிடுகிறார் கண்ணப்பன். மங்கலம் கிராமத்தில் நாம் சந்தித்த செல்லம்மா பாட்டி, ''ஜெயலலிதா சொல்லுற ஆளுக்குதான் அய்யா வோட்டு'' என்கிறார். அடித்தட்டு மக்களிடையே இரட்டை இலைக்கு உள்ள செல்வாக்கு கண்ணப்பனுக்குப் பலம். கட்சிக்கு மீண்டும் வந்திருக்கிற கண்ணப்பன் ஜெயித்துவிட்டால், 'தாங்கள் ஓரங்கட்டப்படுவோம்' என்று அ.தி.மு.க. பொறுப்பாளர்கள் பயப்படுவதால், சில உள்ளடி வேலைகள் நடப்பதாகச் சொல்கிறார்கள்.

''அது சரியல்ல. நாங்கள் முழு மனத்தோடு கண்ணப்பன் வெற்றி பெற உழைக்கிறோம்'' என்கிறார் அ.தி.மு.க. பிரமுகரான காட்டாம்பூர் முருகேசன். ''வறுமை தாண்டவமாடும் தொகுதியில் வங்கிகளைத் திறப்பதால் யாருக்கு லாபம்?'' என்று கேட்கிறார் அவர்.

''ரொம்ப வெறுப்பா இருக்குங்க. 49ஓவைப் பயன்படுத்தலாம் என்று தோன்றுகிறது. விஜயகாந்த் கொஞ்சம் நம்பிக்கை தருகிறார்'' என்கிறார் திருப்பத்தூர் செந்தில்குமார்.



* செந்தில் குமார்



* மருது அழகுராஜ்



* மெய்யப்பன்



* முருகேசன்



* செல்லம்மா

இந்த முறை அப்பாவுக்கு வெற்றி வியூகத்தை வகுக்க முற்பட்டிருப்பவர் கார்த்தி சிதம்பரம். ''ஐ.மு. அரசின் ஐந்து வருட சாதனைகள் எங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும்'' என்கிறார் கார்த்தி.

விலைவாசி, மின்வெட்டு, வேலையில்லாத் திண்டாட்டம், அரசுக்கு எதிரான பொதுவான அதிருப்தி, கலைஞர் குடும்ப பாலிடிக்ஸ் அலர்ஜி போன்றவற்றால் கையில் கம்புடன் கம்பி மேல் நடக்கிறார் ப.சிதம்பரம்!

- ப்ரியன்

படங்கள் : **குமார்**

மதுரையைப் 'போட்ட' சுந்தரபாண்டியன்!

கல்கி 19.4.2009 இதழில் அறிவித்த பாலிடிக்ஸ் போட்டி-1ல் ஃபிட்டாபட் பட்டங்களை மிகச் சரியாகப் பொருத்தி குலுக்கல் முறையில் செலக்ட் ஆன வாசகச் செல்லங்களுக்கு குல்பி ஐஸ் கணக்கா வாழ்த்துகள்...

தலா ரூ. 100/- பரிசு பெறும் ஜெயிச்சவங்க லிஸ்ட்:

1. மல்லிகா அன்பழகன், சென்னை-78.
2. பி.கே.ராஜேஸ்வரி, கோவை.
3. எஸ்.சரிதா, திருப்பூர்.
4. அயன்புரம் த.சத்தியநாராயணன், சென்னை
5. அமுதா பிரகாஷ், தஞ்சாவூர்.
6. அ. சுஹைல் ரஹ்மான், திருச்சி
7. எஸ்.கண்ணன், நெய்வேலி.
8. எஸ். செல்வி, திருவண்ணாமலை.
9. எஸ்.ஏ. விஜயலக்ஷ்மி, தஞ்சாவூர்
10. பி. சப்தரிஷி, மும்பை

பாலிடிக்ஸ் போட்டியில் மிஞ்சிய தலைவர்: மு.க.அழகிரிக்கு கெஞ்சவைக்கும் பட்டம் சூட்டிய ரூ. 1000/- பரிசுபெறும் வாசகி பி.விஜய லட்சுமி, புதுக்கோட்டை.

சூட்டிய பட்டம்:
மதுரையைப் 'போட்ட' சந்தரபாண்டியன்



பாலிடிக்ஸ் போட்டி - 1 முடிவு

''தேர்தல் நேரத்துல சரவெடிகளைக் கொளுத்திப் போடுவாருன்னு ஆசையா வந்தோம். அவரோட பேச்சு, மழையில நனைஞ்ச ஊசிப்பட்டாசு போலாயிடுச்சு.''

திருச்சியில் மே தினத்தன்று கலைஞர் கருணாநிதி பேசிய பின், உடன்பிறப்பு ஒருவர் அடித்த கமெண்ட்தான் இது. நாற்பது ஆண்டுகளாக தி.மு.க.வின் தனித்துவம் மிக்க தலைவராகத் திகழ்பவரின் பேச்சா இது என்ற சந்தேகம் பொது மக்களுக்கும் ஏற்பட்டதில் ஆச்சர்யமில்லை. முப்பது நிமிடப் பேச்சில் தேசிய அளவிலான பிரச்னை என்ன இருந்தது எனப் பார்த்தால் ஏமாற்றமே!

தென்னூர் உழவர் சந்தை திடலில் ஐம்பத்து ஆறாயிரம் பிளாஸ்டிக் சேர்களும் நிரம்பியிருந்தன. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உபயத்தால் பெரும்பான்மையான பெண்கள் பங்கேற்று இருந்தனர். மைதானத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த பதினைந்து மெட்டல் டிடெக்டர் நுழை வாயில் வழியாகத்தான் திடலுக்குள் போக முடியும். டைட் செக்யூரிட்டி! ''மத நல்லிணக்கத்துடன் ஆன மதச்சார்பற்ற அரசு தற்போது நடந்து வருகிறது. என் உடல் நலம் பேண என்னுடன் மூன்று மருத்துவர்கள் வந்துள்ளார்கள். ஒருவர் சலீம். இன்னொருவர் சார்லஸ். மற்றொருவர் கோபால் என்கிற இந்து பிராமணர். இதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது இதுதான். என் உடல் நலம் காத்து வருவது மத நல்லிணக்கமே'' என்று கூற, காட்டம் குறைச்சலா இருக்கே என்று



உடன்பிறப்பு யோசிக்கும்போதே, ''மருத்துவத்துறை நிபுணர் டாக்டர் ராமதாஸ் அவர்கள், நான் ஏதோ நாடகமாடுவதாகக் கூறி வருகிறார். நாடகத்தில் நடித்துதான் இந்த இயக்கத்தை வளர்த்தோம். உதய சூரியன், காகிதப்பூ போன்ற நாடகங்களில் நடித்தவன் நான்'' என்று பழைய பெருங்காய டப்பாவைத் திறந்து காட்ட, 'உஷ்' உதடுகள் முணுமுணுத்தன.

''என் வீட்டுப் பையன், தலித் வீட்டுப் பெண்ணை மணமுடித்துள்ளார். அந்த வகையில் திருமாவளவன் எனக்குச் சம்பந்தி!'' இப்படியே பேசிக் கொண்டு போக, கூட்டத்திடம் சலிப்பும் சலசலப்பும் கண்கூடாகக் காண முடிந்தது.

பேச்சில் தூள் கிளப்பும் தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவாவின் பேச்சு சூடு பிடிக்கும் முன்னரே அவரை முடித்துக் கொள்ளச் சொன்னது, கழகக் கண்மணிகளை இன்னும் வெறுப்பேற்றியது.

தொல்.திருமாவளவன் இலங்கைப் பிரச்னை பற்றிப் பேசியபோது, கலைஞரின் சைகையினால் கூடுதல் நேரம் அனுமதிக்கப்பட்டது.

கலைஞரின் பேச்சுக்குப் பின் ரீ-ஆக்ஷன் அறிய வலம் வந்தோம்.

''கலைஞரோட பிரசார வேகம் வேணா குறைந்து போயிருக்கலாம். இருந்தாலும் எப்பவுமே எங்க வாக்கு தி.மு.க.வுக்கே!'' எனக் கூறினார் இல்லத்தரசியான கோகிலா.

''கடந்த பார்லிமெண்ட் தேர்தலைப் போல, கூட்டணிக் கட்சிகள் பலம் தி.மு.க.வுக்கு இப்ப இல்ல. கூட்டணியிலும் பின்னடைவு. பிரசாரத்திலும் பின்னடைவை நோக்கிப் போயிட்டிருக்கு

நடித்து வளர்த்த கருணாநிதி!



✱ கோகிலா




✱ முத்துகுமார்





✱ ராமச்சந்திரன்



✱ செந்தில்குமார்

தி.மு.க. இதுக்கு நேர்மாறாக அ.தி.மு.க.வின் ஜெயலலிதா தேர்தல் பிரசாரம் முன்னிலை நோக்கி சென்று கொண்டிருக்கு!'' என்றார் பா.ஜ.க. எம்.ராமச்சந்திரன்.

''ஸ்டாலின் மட்டும்தான், பல ஊர்களிலும் பிரசாரம் செய்து வருகிறார். தி.மு.க.வின் இளந்துருக்கியரான தயாநிதி மாறன், காங்கிரசின் நட்சத்திரச் சொற்பொழிவாளர் ப.சிதம்பரம் இருவரும் அவரவர் தொகுதிக்குள் முடங்கிப் போய்விட்டது துரதிர்ஷ்டம்தான்'' என்றார் ஸ்ரீரங்கம், காங்கிரஸ் முன்னாள் கோட்டத் தலைவர் டி.எம்.முத்துக்குமார்.

''அ.தி.மு.க.வில் ஜெ.வை விட்டால் வேறு தலைவர் இல்லை. தி.மு.க. - காங்கிரஸ் - விடுதலைச் சிறுத்தைகள் கூட்டணியில் அப்படி இல்லை. சில இடங்களில் மட்டுமே தி.மு.க. தலைவரின் தேர்தல் பிரசாரம் என்பதால், இதனைப் பெரும் பின்னடைவாகக் கருதத் தேவையில்லை. கூட்டணி நிச்சயம் ஜெயிக்கும்'' என்றார் அக்கட்சிப் பிரமுகர் என்.செந்தில்குமார்.

கலைஞரின் பேச்சுக்கு மக்களிடம் சுனாமியாக எழும் அலை இந்த முறை சுணங்கிப் போயுள்ளது

மொத்தத்தில் கலைஞரின் பேச்சுக்கு மக்களிடம் சுனாமியாக எழும் அலை, இந்த முறை சுணங்கிப் போயுள்ளது.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



''தலைவருக்குப் பொது அறிவே இல்லப்பா...''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''ரஹ்மான் 'ஆஸ்கார்' வாங்கிருக்கார்னு சொன்னா, 'எவ்வளவு செலவு ஆனாலும் பரவால்ல... நாமளும் அந்தக் காரை வாங்கணும்'னு சொல்றாரே...''

- திருமாளத்து அம்பி



''எதிர்காலம் குறித்து
கவலையென்ன இருக்கப் போகிறது
மாயமானைத் துரத்தும் மனசுக்கு'' - என்கிற கவிதை வரிகளை உள்ளடக்கிய 'புறவழிச்சாலை' எனும் கவிதைத் தொகுப்புக்கு சமீபத்தில் நொய்யல் விருதை அளித்திருக்கிறது, கோவை இருகூரில் இயங்கும் நொய்யல் இலக்கிய அமைப்பு. கவிதை ஏரியாவில் 'புறவழிச் சாலை'யைப் போட்டிருக்கும் கவிஞர் தமிழ்மணவாளனோடு நிகழ்ந்த சந்திப்பி லிருந்து...

எது கவிதை? கவிதைக்கேற்ற வடிவம் எது?

''கவிதையின் வடிவத்தைக் கவிதை தான் தீர்மானிக்கிறது. அதற்கு கவிஞனின் அப்போதைய சூழல் நெருக்கடி முக்கியக் காரணியாகிறது. எளிமையான கவிதை என்று 'நடந்து போகும் மாடு சிறுநீர் கழிப்பதுபோல' எழுதிப் போவதும், இறுக்கமான கவிதையென்று 'காற்றுப் புகா சாளரம் அந்தக் கற்குகையாய்' மாற்றி வார்த்தை வன்முறை யாக்குவதும் சரியான தல்ல. கவிதை ஊனப்படுவது யாதெனில்-கவிதை. அவ்வளவு தான்.''

இன்றைய சூழலில் பரிசுகளின் நிலைப்பாடு என்ன?


''ஏதேனும் ஒரு கரையில் இருந்தால் அந்தக் கரையின் குழு கிரீடம் சூட்டும். இரு கரையிலும் நிற்காமல் நதியிலேயே நீச்சலிட்டுக் கொண்டிருக்கும் என்னைப் போன்றோருக்கு, விருதுகளில் அநீத அக்கறை இல்லை. இந்த 'நொய்யல்', இஸம், குழு சாராத இயக்கம். எனவே அதன் அங்கீகாரம் உற்சாக மருந்துதான்.''

கவிதையைத் தவிர்த்து இலக்கியச் செயல்பாடுகள் என்ன?

''முனைவர் பெ.கோவிந்தசாமி ஆய்வு நெறிப்படுத்தலில் 'நவீன தமிழ்க் கவிதை களில் நாடகக் கூறுகள்; காலமும் வெளி யும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து கொண்டிருக்கிறேன். 'வைகறை' என்ற அமைப்பு மூலம் நவீன நாடகங்களை அரங்கேற்ற இருப்பதும் இப்போதைய இயக்க அட்டவணை.''

தமிழின் முக்கியமான கவிஞரை அடையாளம் காட்ட முடியுமா?

''ஒவ்வொரு இதழும், ஒவ்வொரு குழுவும், ஒவ்வொரு சாதியும் அவரவர்க்கு சாதகமான ஒருவரை அடையாளம் காட்டு கிறது. அந்த முக்கியக் கவிஞர் சிறந்த கவிஞராக இருப்பதில்லை. இருக்க வேண்டிய அவசியமுமில்லை.''



''கவிதைதான் தீர்மானிக்கிறது!''



கல்கி



2009 மே 17
விரோதி வைகாசி 3
மலர் : 67
இதழ் : 42

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

வரலாறு காணாத விதி மீறல்கள்!

ராணுவ ஊழியர்களின் ஓய்வூதிய சீரமைப்பைச் சிபாரிசு செய்தது ஆறாவது ஊதியக் குழு. இத்தனை நாட்களாக அல்லாமல், வட மாநில நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு ஒரு சில தினங்களே இருக்கையில், அச்சிபாரிசுகளை அமுல்படுத்த முன்வந்துள்ளது மத்திய அரசு! நான்காவது கட்டத் தேர்தலில் வாக்களித்த அந்த வட மாநிலங்களி லிருந்துதான் ராணுவத்தில் அதிகபட்ச ஊழியர்கள் சேர்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசின் இந்தத் தேர்தல் விதிமீறல் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி யிருக்கிறது. பா.ஜ.க. தனது தேர்தல் அறிக்கையில், ராணுவத்தினருக்குப் பல சலுகைகள் அறிவித்துள்ளதால், அக்கட்சியின் ஆதாயத்தைப் பறிப் பதற்காகவே மத்திய அரசு செயல்பட்டிருப்பதாகவும் கருதப்படுகிறது!

அனைத்து கட்சிகளுமே இத் தேர்தலில் போட்டி போட்டுக்கொண்டு விதிமுறைகளை மீறியுள்ளன. எனினும், ஆட்சியில் உள்ள கட்சிகளே அந்த மீறல்கள் மூலம் அதிக ஆதாயம் அடைகின்றன.

தமிழகத்தில் தி.மு.க. பஸ் கட்டணங்களைக் குறைத்து, பரிதாபகர மான சிக்கலில் மாட்டிக்கொண்டது. அந்த நடவடிக்கையை ரத்து செய்ய வைத்தது தேர்தல் கமிஷனுக்குப் பெருமை; ஆனால், ரத்து செய்ய நேர்ந்தது தமிழக அரசுக்கும் அதற்குப் பொறுப்பான தி.மு.க.வுக்கும் தலைகுனிவுதான்.

பஸ் கட்டண உயர்வு ஆணையைப் பிறப்பித்த அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கூறியிருப்பதும் நியாயமே. ஆனால், அந்த அதிகாரிகளை இயக்கும் ஆதிக்க சக்தியான கட்சி அரசியலை தேர்தல் கமிஷனால் நேரடியாகத் தண்டிக்க முடியாது. அதைப் புரிந்துகொண்டு வாக்களிக்கும் பொறுப்பும் உரிமையும் மக்கள் கையில்தான் இருக்கிறது.

தேர்தல் கமிஷனின் நடவடிக்கைகளோ, கண்டனங்களோ, விதிமீறல்களில் ஈடுபடும் அரசியல் வாதிகளைப் பாதிப்பதாகத் தெரியவில்லை. சென்னைக்கு வந்த மத்திய தேர்தல் கமிஷன் உறுப்பினர் கள் முன்னிலையில் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொண்டு புகார் படிக்கும் அரசியல்வாதிகள், தேர்தல் களத்துக்குத் திரும்பியதுமே ஜனநாயக மரபுகளை அடியோடு பறக்க விட்டுவிட்டுப் பணநாயகவாதிகளாகி விடுகிறார்கள்!


மதுரையில் வாக்காளர்களுக்கு ஐந்நூறு ரூபாய் விநியோகம்; அப்பகுதியில் வாக்காளர் பட்டியலில் சேர ஆயிரக்கணக்கில் போலி விண்ணப்பங்கள் என்று பகிரங்கமான விதிமீறல்கள் அரசியல்வாதி களின் தர வீழ்ச்சியைப் பறைசாற்றுகின்றன.

இன்று நிலவும் சூழலில், தனி மெஜாரிடி கிடைக்காது என்ற பயம் அனேகமாக அனைத்து கட்சிகள் / கூட்டணிகளுக்கும் இருக்கிறது. வரலாறு காணாத விதி மீறல்களுக்கு இதுவும் ஒரு காரணம்.

இதே காரணத்தால்தான், தேர்தலுக்குப் பிறகான செயல்திட்டம் குறித்து எல்லா தலைவர்களுமே பூசி மெழுகிக் கொண்டிருக்கிறார்கள்! தனி நபர் வழிபாடும் கட்சி சின்னங்கள்பால் குருட்டு அபிமான மும் இனி வாக்குகளை நிர்ணயிக்காது என்பதையே இந்த நிலைமை உணர்த்துகிறது.

'நாம் வாக்களித்து எதை மாற்ற முடியும்?' என்ற சோர்வை உதறி, பணநாயகவாதிகள் வீசும் வலைகளில் சிக்காமல், நேர்மைத் திறமுள்ள வேட்பாளர்களுக்கே ஆதரவு தர வேண்டும்.

வலிமையான ஆட்சி முக்கியம்தான்; ஆனால், அது சுயநலம் மிக்க ஊழல் ஆட்சியாக இருந்தால், ஜனநாயக முறையில் உருவான கொடுங்கோல் ஆட்சியாகிவிடும்!


தேர்தல் களம்
தனிநபர் தாக்குதல்
அவதூறு வார்த்தைகள்!
நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு
விதிமீறல்களின் பேரால் தேர்தல் கமிஷன் நடவடிக்கை
கருணாநிதி உடல்நிலை பாதிப்பு
மே-6 சோனியா வருகை ரத்து
நீ காய் விட்டாலும் நான் உன் பேச்சு பழம்
அப்ப நான் உன் பேச்சு கா!
யாருக்கு வேணும் உன் அழுகின பழம்

‘அரசியலைத் தள்ளி நின்று பார்க்கிற அளவுக்குப் பக்குவம் வந்திருக்கு’ன்னு விஜய் சொல்லியிருக்கறதே அவர் அரசியலுக்கு வர்றதுக்கு அச்சாரங்ணா! சீக்கிரமா வந்துடுங்ணா!!

- ப.கோபி, கிருஷ்ணகிரி

‘‘உண்ணாவிரதம் உஷார்! உஷார்!’’ வெறும் ஒரு பக்கத் தலையங்கம் மட்டுமல்ல... நல்லதொரு படிப்பினையும்கூட!

- ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்

ஹோட்டல் வழக்கை வாபஸ் பெற்றது ஏன் என்று ஆர்.எஸ்.பாரதி தமிழக அரசு சார்பாக வக்காலத்து வாங்கியிருப்பது, ‘நொண்டிக் குதிரைக்கு நூறு சாக்கு’ என்ற பழமொழியை நினைவுபடுத்தியது.

- அ.சு.கிருஷ்ணன், புதுச்சேரி-4

கோவையில் நம் ராணுவ வண்டி மற்றும் பத்திரிக்கைகாரர்களைத் தாக்கிய கும்பலை தா.பாண்டியன் போன்றோர் ஆதரிப்பது வேதனை. இந்தக் கூட்டணி வெற்றிபெற்றால் நாட்டு நிலைமையும் மோசமாகிவிடும்.

- வெங்கட், திருநகர்

சீக்கிரமா வந்துடுங்ணா!



வட்டமேஜை

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கோபப்பட்ட சம்பவத்தையும், கல்கி சதாசிவம் அவர்களது கோபம் பற்றியும் படிக்கும்போது, திகில் கலந்த சுவாரஸ்யமாக இருந்தது. 70 முதல் 7 வரை செம விறு விறு.

- தெய்வசிகாமணி, சென்னை - 82

எஸ்.ராஜம் அவர்கள் கர்நாடக இசையில் ஜாம்பவான் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், பூஜை அறையிலும், வாசலிலும் அவரது அம்மா போட்ட விதவிதமான கலர்ஃபுல் கோலங்கள்தான், அவரைத் தூரிகை பிடிக்க வைத்து ஓவியத்தில் பேரிகை கொட்ட வைத்தன என்ற செய்தி ஆச்சரியம்!


- எஸ்.முரளி, ஸ்ரீரங்கம்

‘எங்கே போகிறது இந்து மதம்?’ மூலம் தனது நியாயமான ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் சுகி.சிவம்.

- ஆர்.விஸ்வநாதன், சென்னை - 78

கி.சொக்கலிங்கத்தின், ஓவியப் பாட்டியின் முக வரிகளில் அவளின் அனுபவங்களையும் படித்தேன்.

- என்.கோமதி, நெல்லை - 7



முள்ளின் மனம்

கார்த்திகா

வேடிக்கையான
விளையாட்டுப் பொருளானது
என் கைக்கடிகாரம்
குழந்தைக்கு.

காதருகே வைத்துக் கேட்டும்
கையில் கட்டிப் பார்த்தும்
கொஞ்சிப் பேசியவாறும்
முத்தம் கொடுத்துக் கொண்டும்
நட்பாகிவிட்டது கடிகாரத்தோடு.

வருத்தப்படாதவாறுதான் - அதைத்
திருப்பி வாங்கிக்
கட்டிக்கொண்டு வந்தேன்.

வருத்தமில்லையென்று
யார் சொன்னது என்றது
ஓடாமல் நின்ற கடிகார முள்.

பின்
ஓடத் துவங்கியது
எனது எந்த சமாதானத்துக்கும்
செவி கொடாமல்
வட்டப் பாதையினின்று குதித்து
குழந்தையின் வீடு நோக்கி.

மருத்துவம்


வேட்பாளர்களே... வாக்காளர்களே...



சுட்டெரிக்கும் வெயில். அக்னி நட்சத்திரத்தைவிட அதிக அளவு அனல் தெறிக்கும் தேர்தல் பிரசாரங்கள் உலா வரும் நேரம் இது. 'கடுமையான கோடைக் காலத்தில், இத்தகைய சூறாவளி சுற்றுப்பயணப் பேச்சுக்கள் அரசியல் தலைவர்களின் குரலையும், தொண்டையையும் பாதிக்காதா? இதற்காக மேற்கொள்ள வேண்டிய சிகிச்சை என்ன?' என்ற கேள்விகளோடு காது, மூக்கு, தொண்டை நிபுணர் டாக்டர் பி.ப.ரகுவைச் சந்தித்தோம்.

''சமீப நாட்களாக என்னிடம் அதிகம் வரும் நோயாளிகள், அரசியல் துறை சம்பந்தப்பட்டவர்கள் தான். இதில் வட்ட, மாவட்ட அளவிலான தலைவர்களும், கட்சித் தொண்டர்களும்தான் அதிகம். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறிப்பிட்ட ஒரு தொகுதிக்குள் வருவதற்கு முன், நீண்ட நேரம் உரத்த குரலில் இவர்கள் பிரசாரத்தில் ஈடுபடுவார்கள். அப்படி இடைவிடாது உரையாற்றுவதால் குரல் வளையத்தில் (vocal cord) நடுப்பகுதி அதிக அளவு பாதிப்புக்கு உள்ளாகி, வீக்கம் ஏற்பட்டு, சில சமயம் ரத்தக் கசிவு கூட ஏற்படும். தொண்டையில் இடைவிடாத வலி, குரலில் மாற்றம், எதுவுமே பேச முடியாத ஒரு நிலைமை, உணவு கூட உட்கொள்ள முடியாத ஒரு தவிப்பு இவை எல்லாமே ஏற்படும். முதலில் வீக்கத்தில் துவங்கி பின் படிப்படியாக நீர் கட்டி, vocal nodules அல்லது singer nodules என்றழைக்கப்படும் சதை வளர்ச்சி, குரல் வளையத்தில் ஏற்பட்டு விடும்.

அடுத்து, laryngitis என்றழைக்கப்படும் மூச்சுக் குழாயை ஒட்டி ஏற்படும் புண்ணும், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஏற்படும். இதற்கு முக்கியமான காரணம், தொடர்ந்து பேசிக் கொண்டே இருப்பது, உச்சி வேளையில் வெயிலில் அதிகமாக வெளியில் போவது, கண்ட கண்ட இடங்களில் தண்ணீர் மற்றும் குளிர்பானங்கள் அருந்துவது, புகைப்பிடிப்பது, மது அருந்துவது மற்றும் அசுத்தமான காற்றைச் சுவாசிப்பது எல்லாமாகச் சேர்ந்து புண்ணை வரவழைத்து விடும். இதைத் தவிர்க்க செய்ய வேண்டியவை: குரலுக்கு முழு ஓய்வு கொடுப்பது, புகைப்பிடிக்காமல் இருப்பது மற்றும் வெந்நீர் குடிப்பது.''



* டாக்டர் பி.பா.ரகு



வேட்பாளர்களுக்குச் சரி, வாக்காளர்களான மக்களுக்கு?

''வெந்நீர் குடிப்பது அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல; பொதுமக்களுக்கும் இக்கோடை காலத்தில் அவசியம். கலர் சோடாக்கள், குளிர் பானங்கள், குளிர்சாதனப்பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீரைவிட, பன்மடங்கு தாகத்தைத் தணிக்கும் சக்தி வெந்நீருக்கு உண்டு. ஐஸ்க்ரீம்களை இவ்வெயில் காலத்தில், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே விரும்பிச் சாப்பிடுவார்கள். இந்த ஐஸ்க்ரீம் நம் தொண்டையில் இருக்கக்கூடிய பாக்டீரியாக்களுக்கும் மிகவும் பிடிக்கும். அதனால் நாம் சாப்பிடும் ஐஸ்க்ரீம் நமது தொண்டையில் இருக்கக்கூடிய டான்சிலில் தங்கிவிடும். அங்கு பாக்டீரியாக்கள் அதிகம் வளர ஆரம்பிக்கும். Tonsillitis என்ற வியாதியை உருவாக்கும். இதனால் தொண்டைகட்டுவது, ஜுரம், காது வலி என ஒவ்வொன்றாக வர ஆரம்பிக்கும். ஆகவே, கூடிய வரை ஐஸ்க்ரீம் சாப்பிடுவதைத் தவிர்க்கவும் அல்லது ஐஸ்க்ரீம் உண்ட உடனேயே வெந்நீர் குடித்து விட்டால், அந்த ஐஸ்க்ரீம் துகள்கள் தொண்டைக் குழிகளில் உட்காராமல் உருகிவிடும்.

அதைப்போலவே, சாலை ஓரங்களில் விற்கப்படும் துண்டுபோட்ட தர்பூசணியும், கிர்ணியும் தொண்டைக்குச் சற்றும் உதவாதவை. இவற்றில் படிந்துள்ள தூசும் கிருமிகளும் தொண்டையை பாதிக்கும். முழு பழமாக வாங்கி அவற்றை வீட்டுக்கு வந்து துண்டு போட்டு, குளிர்சாதனப் பெட்டியில் வைக்காமல் உடனடியாக உட்கொண்டு விட்டால் தொண்டையைக் குறிபார்க்கும் பாக்டீரியாக்களுக்கு 'பை பை' சொல்லிவிடலாம்'' என்கிறார் டாக்டர் ரகு.

- நளினி சம்பத்குமார்





திசை மாறிய நதி!

'முதலில் பெற்றோர் பக்தி. பிறகுதான் இறைபக்தி கூட' என்பது போல் நடந்துகொண்டான் புண்டலீகன். 'கொஞ்சம் தண்ணீர் வேண்டும்' என்றார் தந்தை. இதோ என விரைந்து சென்று நீர் அளித்தான். பின்னர் தந்தையும் தாயும் கண்ணயரத் தொடங்க, இதமாக அவர்களின் பாதங்களைப் பிடித்துவிட்டான். அவர்கள் உறங்கியபின் மெல்ல சத்தமின்றித் திரும்பிப் பார்த்தான்.

யூகித்திருந்தான் என்றாலும் கண்ணனைத் தரிசித்தபோது பரவசம் எல்லை கடந்தது. தன்னை நாடி இறைவனே வருவதா? ஆக தன் பாவங்கள் களையப்பட்டு விட்டனவா? இறைவனின் காலில் மகிழ்ச்சிப் பெருக்கில் விழுந்தான் புண்டலீகன்.

''புண்டலீகா, உனக்கு என்ன வரம் வேண்டும்? தயங்காமல் கேள்'' என்றான் இறைவன்.

புண்டலீகன் கேட்டான். வரம் கிடைத்தது - அவனுக்கு அல்ல, நமக்கு.

''நீங்கள் எப்போதும் இதே கோலத்தில் இங்கு எழுந்தருள வேண்டும். ஞானிகள் மட்டுமல்ல, சாதாரண மக்களுக்கும் உம்மைத் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டவேண்டும்.''

ஏற்றுக்கொண்டான் விட்டலன் - அதாவது செங்கல்லின் மீது ஏறிநின்று அருள்பாலிப்பவர். ஆம், 'விட்' என்றால் மராத்திய மொழியில் செங்கல் என்று பொருள்.

* சற்றே தயக்கத்துடன் வார்த்தையைத் திருத்திக் கொண்டான் புண்டலீகன்....



சயன ஆரத்தி என்பது தனியொரு அனுபவம்.

முதலில் பாண்டுரங்க தரிசனம் செய்தபிறகு பக்தர்களை அருகில் உள்ள ருக்மணி மண்டபத்துக்கு அனுப்பினார்கள். நாங்கள் சென்றிருந்தபோது சேலத்திலிருந்து ஒரு யாத்திரை கோஷ்டி பேருந்திலிருந்து இறங்கியிருந்தது. அவர்களும் சயன ஆரத்திக்காகக் காத்திருந்தனர். ''நாளை காலையில் பண்டரிபுர சாலைகளில் நடந்தபடியே பஜனை செய்வதாக இருக்கிறோம்'' என்றார் அவர்களில் ஒருவர்.

விட்டலனின் சன்னிதியை முழுவதுமாகச் சுத்தம் செய்த பிறகு அதற்கெதிரே உள்ள பகுதியில் அமர அனுமதித்தனர். அப்போது மணி இரவு சுமார் பதினொன்றரை.

விட்டலனின் ஆடம்பர உடை களையப்பட்டு எளிமையான உடை அணிவிக்கப்பட்டது. திருமேனியின் மீது கம்பளி ஒன்றும் போர்த்தினார்கள். பிறகு மணிமுடியை நீக்கி மராத்திய மண்ணுக்குரிய தலைப்பாகையை அணிவித்தனர். கருவறையில் இருந்து சயன அறைக்குச் செல்லும் பாதை சுத்தம் செய்யப்பட்டது. பின் அந்தப் பாதையில் கோலம் இடப்பட்டு, அதன் மீது வஸ்திரம் விரிக்கப்பட்டது. தீப்பந்தத்தோடு ஒருவர் உடன் வர, விட்டலன் பாவனையாகச் சயன அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.



* அலங்காரங்கள் அற்ற எளிய விட்டலன்

பின்னர் அந்த விரிப்பு மடிக்கப்பட்டுப் பக்தர்களுக்குக் காட்டப்பட, அனைவரும் கண்களில் ஒற்றிக் கொண்டோம். அதையடுத்து நாம சங்கீர்த்தனம், ஸ்தோத்திரம், கற்பூர ஆரத்தி என்று வைபவங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறின.

அன்று வழக்கத்தை விட அதிக நேரம் ஆனது என்றார்கள். சயன ஆரத்தி முடிய இரவு (விடியற்காலை?) மணி இரண்டாகி விட்டது. அவ்வளவு நேரம் தொடர்ந்து உட்கார்ந்திருப்பதில் அங்கிருந்த பலருக்கும் சங்கடம். முன்பெல்லாம் தொடர்ந்து நின்றால் தான் கால் வலிக்கும். இப்போது தொடர்ந்து உட்கார்ந்திருந்தால்தான் கால் வலிக்கும் எனும் அளவுக்கு நவீன வாழ்க்கை முறை மாறிவிட்டதே!

'அது மட்டுமா மாற்றம்? முன்பெல்லாம் பிள்ளைகள்தான் பிரிந்து தனிக்குடித்தனம் செல்வார்கள். அதுவும் அரிதாகவே இருந்தது. இப்போதெல்லாம் பெற்றோரை அல்லவா முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். ஆக, புண்டலீகன் உணர்ந்து கொண்ட உண்மையை தற்போதைய இளைய சமுதாயத்தினரும் உணர வேண்டும். பெற்றோரை மதிக்கவேண்டும். இதற்காகத்தானே நான் கால்கடுக்க நின்று கொண்டிருக்கிறேன்.' இப்படிக் கூறாமல் கூறுவது போலிருந்தது பாண்டுரங்கனின் முகத்தில் தெரிந்த மாயப்புன்னகை.

அடுத்த நாள் காலையில் எழுந்து சந்திரபாகா நதியில் ஸ்நானம் செய்தோம். ஆலயத்திலிருந்து வெகு அருகில் இருக்கிறது அந்த நதி. ஐந்து நிமிடங்களில் அடைந்து விடலாம். அங்கு படகுச் சவாரி உண்டு. ''கோபால் புரிக்குப் படகில் சென்று வரலாமே'' என அழைத்தனர் படகோட்டிகள். வேறு திட்டம் இருந்ததால் அப்படிச் செல்லவில்லை. (கோபால் புரி பயணம் பற்றிப் பிறகு).

நதியின் கரையோரத்தில் காணப்பட்ட புண்டலீகனின் சிறிய நினைவாலயத்தைக் கண்டபோது விட்டலன் - புண்டலீகன் தொடர்பான மற்றொரு சுவாரஸ்யமான சம்பவம் நினைவுக்கு வந்தது.

'பக்தர்கள் பயன்பெறும் வகையில் நீ இங்கேயே எழுந்தருள வேண்டும்' என்று பொதுநலனுக்காக வரம் கேட்ட புண்டலீகனிடம், ''உனக்காக வேறொரு வரம் கேள்'' எனப் பணித்தான்

அருண் சரண்யா

அபங்க அமுதம் -5

தன்யதே பண்டரீ தன்ய பீமாதீர
ஆணியேலே ஸார புண்டலிகே
தன்ய தோ ஹா லோக அவகா
தைவாசா
ஸுகாள ப்ரேமாசா கரோகீ
தன்ய தே ஹீ பூமி தன்ய தே தருவா
தன்ய தே ஸரோவா தீர்த ரூப

- பக்த துகாராம்

''இந்தப் பண்டரிபுரம் புண்ணியமானது. பீமா நதி (சந்திரபாகா நதி) புனிதமானது. ஏனெனில் இது வேத, சாஸ்திர, புராண சாரமான விட்டலனை, புண்டலீகனின் பெற்றோர் பக்தி அழைத்துவந்த தலமாகும். இங்கு வசிக்கும் பாக்கியமுள்ள அனைவரும் அதிர்ஷ்டசாலிகள். இங்குள்ள எல்லா வீடுகளும் வளம் பெற்றுள்ளன. இங்குள்ள மரங்கள் புனிதம் நிறைந்தவை. இங்குள்ள நீர்நிலைகள் சிறப்புப் பெற்றவை.''

பாண்டுரங்கன்.

சிறிது யோசித்த புண்டலீகன், ''இந்தக் குடிலிலிருந்து சந்திரபாகா நதி சற்றுத் தொலைவில் இருக்கிறது. தாயையும் தந்தையையும் ஒரு பெரிய தராசு போன்ற அமைப்பின் இரு தட்டுக்களிலும் வைத்து தினமும் அவர்கள் ஸ்நானம் செய்ய அழைத்துச் செல்கிறேன். அவர்களைச் சுமந்து செல்வது எனக்கு ஆனந்தம்தான். ஆனாலும் அப்படிச் செல்லும்போது அவர்கள் உடலில் சில நோவுகள் உண்டாகின்றன. எனவே சந்திரபாகா நதியை...'' சற்றே தயக்கத்துடன் வாக்கியத்தை நிறுத்திக் கொண்டான் புண்டலீகன்.

''அவ்வளவுதானே'' என்ற பாண்டுரங்கன் அடுத்த கணமே தன் அருட்பார்வையை அந்த நதியை நோக்கித் திருப்பினார். நேராகச் சென்று கொண்டிருந்த அந்த நதி சற்றே தன் திசையை மாற்றிக்கொண்டு புண்டலீகன் இருப்பிடத்துக்கு அருகாக வளைந்து தன் பயணத்தைத் தொடர்ந்தது.




* சந்திரபாகா நதிக்கரை

'பக்தர்கள் பயன்பெறும் வகையில் நீ இங்கேயே எழுந்தருள வேண்டும்' என்று பொதுநலனுக்காக வரம் கேட்ட புண்டலீகனிடம், "உனக்காக வேறொரு வரம் கேள்" எனப் பணித்தான் பாண்டுரங்கன்.

சந்திரபாகா நதியிலிருந்து விட்டலனின் ஆலயத்தை நோக்கி வரும் சாலையில் தென்பட்டது மல்லிகார்ஜுனரின் ஆலயம். அந்த சிவாலயத்தின் வாசலிலிருந்து பார்த்தால் பாண்டுரங்கன் ஆலயம் வெகு அருகில் தெரியும். இரு ஆலயங்களையும் மாறி மாறிப் பார்த்தபோது பக்த நாஹரியின் வாழ்க்கை நினைவுக்கு வந்தது.

படம்: ஸ்ரீஹரி
சித்திரம்: வேதா



தேர்தல் ரீமிக்ஸ் பாட்டு படும் பாடு!

ஏ.ஆர்.ரஹ்மானின் 'ஜெய் ஹோ' ஆஸ்கரை வென்றாலும் வென்றது; காங்கிரஸ், பி.ஜே.பி. கைகளில் சிக்கி ரீ மிக்ஸாய் திண்டாடுகிறது. இங்கே தமிழ்ப்படுத்தியுள்ளோம். படித்துவிட்டு வடக்கு வாக்காளர்கள் படும் அவஸ்தையை நீங்களும் அனுபவியுங்கள்.

காங்கிரஸின் ஜெய் ஹோ!

சராசரி மனிதன் படிப்படியாக வளர்ந்து கொண்டு இருக்கிறான்... ஜெய் ஹோ (ஜெயித்துக் காட்டுவோம்)

ஒவ்வொரு படியிலும் இந்தியாவும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

வா வா நாம் காங்கிரஸுடன் கை கோத்துச் செல்வோம்... ஜெய் ஹோ

பாரு பாரு, நல்ல இதமான பருவ நிலை புதிய சாலைகளைப் பாரு

உங்களது ஒளிமயமான வாழ்க்கைக்கு எங்களை நம்பு...

கார், உயர் கல்வி, நல்ல ஆரோக்கியம் எல்லாம் அளித்தது காங்கிரஸ் ஜெய் ஹோ.

காங்கிரஸோடு சேர்ந்து சராசரி மனிதன் முன்னேறி வருகிறான்...

இந்தியாவும் முன்னேறி வருகிறது.



பி.ஜே.யின் பய் ஹோ!

பய் ஹோ! (துன்பப் பட்டுக் கொண்டிருக்கிறோம், ஆனால் நிச்சயம் முன்னேறுவோம்!)

தேச சர்வதேச அளவிலான அடுக்கடுக்கான பிரச்னைகளால், இந்தியா திக்குமுக்காடுது.

வெளிநாட்டு சக்திகள் நம்மிடையே அச்சத்தை உருவாக்குது

வாட்டி எடுக்கும் பசி இரவெல்லாம்
விழித்திருக்கச் செய்யுது.

எண்ணற்ற பொய்யான
வாக்குறுதிகளைக்
கேட்டு வாழ்க்கை வாழ்ந்தாச்சு!

மக்களே, குறிப்பாக இளைஞர்களே,
விழித்து எழுந்திருங்கள்!

வாருங்கள் தேசியவாதத்
தலைவர்களுக்கு வாக்களித்து
தாய்நாட்டைக் காப்பாத்துங்க.



தமிழாக்கம் : நளினி சம்பத்குமார்

வண்ணத் தூரிகை

ஞாபக வாசனை!

பௌர்ணமியன்று போனேன். சந்தேகம் உறுதியாயிற்று. முன் போலவே, சிறிது நேரத்துக்கெல்லாம் சிலம்பொலி கேட்டது. இம்முறை நான் எழுந்து போகவில்லை. என்னதான் நடக்கிறது என்று பார்க்கத் தீர்மானித்து உட்கார்ந்திருந்தேன். சிலம்பின் ஒலி நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. எனக்கு முன்னால் அதோ அந்தப் படியண்டை வந்ததும் சப்தம் நின்றது. அந்த ஒலி நெருங்கி வந்தபோது, ஓர் அபூர்வ பரிமள வாசனை பரவி வந்ததாகத் தோன்றியது. சந்தன வாசனை மாதிரி இருந்தது. ஆனால், மிக மிக இலேசாயிருந்தது. அது வாசனைதானா? அல்லது வாசனையின் ஞாபகமா? எனக்குத் தெரியவில்லை.


சிறிது நேரம் நான் மெய்மறந்து சிலை போல் உட்கார்ந்திருந்தேன்.

பிறகு, சற்றுமுன் நின்ற இடத்திலிருந்து மறுபடி சிலம்பின் ஒலி கேட்க ஆரம்பித்தது.

அது படிகளின் மீது ஏறுவது போலவும் எனக்குப் பின்னால் இருந்த மேல் படியில் வந்து நிற்பது போலவும் தோன்றியது. அந்த மிருதுவான சந்தன வாசனை என்னை முற்றும் சூழ்ந்துகொண்டது. தேகத்தின் ஒவ்வொரு ரோமத்துவாரம் வழியாகவும் நான் அந்த இன்ப மணத்தை அனுபவித்தேன். இப்படி எத்தனை நேரம் மதிமயங்கி இருந்தேனோ தெரியாது. என் தலைக்கு மேலே வெகு சமீபத்தில், இருதயத்தைப் பிளக்கும்படியான ஒரு விம்மல் சத்தம் கேட்டது. அடுத்த விநாடி என் மீது சலசல வென்று நீர்த்துளிகள் விழுந்தன. அளவிலாத திகில் கொண்டவனாய்த் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்திருந்தேன். அப்படி எழுந்திருந்தபோது என் மேலே மிக மிருதுவான பட்டுத் துணி உராய்வது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. பிறகு இவ்விடத்தில் நிற்பதற்குத் தைரியமில்லாமல், அவசரமாய்ப் படிகளில் இறங்கத் தொடங்கினேன். போகும்போது உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டேயிருந்தது.



மறு பௌர்ணமி எப்போது வரப்போகிறதென்று காத்திருந்தேன். அன்று ஏன் அவ்வளவு அவசரப்பட்டு எழுந்துவந்தோம் என்று என்னை நானே நிந்தித்துக் கொண்டிருந்தேன். அடுத்த பௌர்ணமியும் வந்தது. வழக்கம் போல இந்தப் படியில் வந்து உட்கார்ந்தேன். அன்று சதங்கையொலி ரொம்பவும் தயங்கித் தயங்கி வந்ததாகத் தோன்றியது. எனக்கு முன்னால் சற்று நின்றது. பிறகு மேலே, ஏறி, எனக்குப் பின்னால் போய் நின்றது. முன் போலவே, அந்த இனிய சந்தன வாசனை என்னைச் சூழ்ந்தது.



ஆனால் முன் தடவையைப் போல் இலேசாக இல்லை. சந்தேகமற உணர்ந்து அனுபவிக்கக் கூடியதாயிருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம், பூப்போன்ற மெல்லிய கரங்களால் யாரோ என் தோள்களைக் கட்டித் தழுவுவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. தலையிலிருந்து கால் வரையில் நான் புளகாங்கிதம் கொண்டேன். அந்த ஸ்பரிசம் அவ்வளவு உண்மையாகத் தோன்றியபடியால், தழுவிய கைகளைப் பிடித்துக் கொள்ள என் கரங்களை உயர்த்தினேன். ஆனால், என் கைகள் ஒன்றையும் பிடிக்கவில்லை. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். வெறும் வெட்ட வெளிதான் இருந்தது...

- 'இடிந்த கோட்டை' நெடுங்கதையில்...

அக்கம் பக்கம்


✱ இலவச மன்னன்

கலைஞரையே தூக்கிச் சாப்பிட்டுவிட்டார் ராமநாதபுரம் தி.மு.க. வேட்பாளரான நடிகர் ரித்தீஷ். தலைவர்கூட ஒரு ரூபாய் அரிசி; இலவச டீ.வி. என்றுதான் சொன்னார். ஆனால், ரித்தீஷோ, ''ஒவ்வொரு குடும்பத்துக்கும் இருபத்தைந்து ஆயிரம் ரூபாய்; குடும்பத்தில் திருமணம் என்றால் தங்க நகை'' என்று அறிவித்து வோட்டு கேட்கிறாராம்.

(ஏனுங்கோ! இது ரீலா? இல்லை ரியலா?)


✱ புலம்பல் சிங்

கன்னட மொழித் தளபதியாக தன்னை முன்னிறுத்திக் கொள்ளும் 'வாட்டாள் நாகராஜ்' இந்தத் தேர்தலில் தெற்கு பெங்களூரு தொகுதியில் போட்டியிடுகிறார். தேர்தல் செலவுக்காக நடுத்தெருவில் இளநீர் வியாபாரம் செய்தார். விலையோ ரூபாய் ஐந்நூறு. விஷயம் தேர்தல் கமிஷனுக்குப் போனது. நாகராஜின் விளக்கம் என்ன தெரியுமா? ''என் தோட்டத்தில் விளைந்த இளநீருக்கு அதிகபட்ச சில்லறை விலையை ஐந்நூறு என்று நிர்ணயித்திருக்கிறேன். நான் ஒரு ஏழை. இந்த நாட்டில் ஒரு ஏழை தேர்தலில் நிற்க வேண்டுமென்றால் தெருவில் இளநீர் வியாபாரம் செய்ய வேண்டி இருக்கிறது!''

(ஐயோ! புல்லரிக்குதுங்க!)

''உடம்பு சரியில்லை! பேசாம ரெஸ்ட் எடுங்க!'' என்று ஐக்கிய ஜனதா தளம் கட்சி சொன்னதைக் கேட்காமல், வீம்புடன் பீகாரின் முசாஃபர்பூர் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ். வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்பாக, தன் ஆஸ்தான ஜோசியரைக் கலந்தாலோசிக்க விரும்பினார். அந்த ஜோசியரோ ஃபெர்னாண்டசைச் சந்திக்காமல் தவிர்த்துவிட்டாராம்.

(ஜோசியருக்கு ரிசல்ட் முன்கூட்டியே தெரிஞ்சு போச்சா?)

தேர்தலுக்கு முன்பு சமாஜ்வாதி கட்சியில் சேர்ந்து, பா.ஜ.க.வுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்த முன்னாள் உ.பி. முதல்வர் கல்யாண் சிங்குக்கு அவர் போட்டியிடும் எடா தொகுதியில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. அந்தத் தொகுதியில் அவரையும் சேர்த்து ஐந்து வேட்பாளர்களின் பெயர் 'கல்யாண் சிங்'. நல்ல காலம், இரண்டு பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. மீதி இருவரில் ஒருவர் கல்யாண் சிங்கின் ஜாதி. ''எல்லாம் மாயாவதியின் சதி'' என புலம்பிக் கொண்டிருக்கிறார் மனுஷர்.



(பதிலுக்கு மாயாவதின்னு பத்துப் பேரைத் தயார் பண்ணிக் களமிறக்க வேண்டியதுதானே!)

இரண்டு யானைகள், இரண்டு மாட்டு வண்டிகள், அறுபத்தேழு படகுகள் ரெடி. எதற்கு? தேர்தல் பணிக்காகத்தான்! அஸ்ஸாம் மாநிலத்தின் பல்வேறு ,வாக்குச் சாவடிகளுக்கும் தேர்தலுக்கு முன் குறித்த நேரத்தில் வாக்குப் பதிவு இயந்திரம், தேர்தல் தொடர்பான இதரப் பொருட்களைக் கொண்டுசெல்லவும், தேர்தல் முடிந்ததும் வாக்குப் பதிவு இயந்திரங்களை கலெக்டர் ஆபீஸ்களுக்குக் கொண்டு செல்லவும்தான் இந்தத் தயார் நிலை.

(யானை, மாடுகளுக்கெல்லாம் எலெக்ஷன் டியூட்டி பார்த்ததற்கு அலவன்ஸ் கொடுப்பாங்களா?)

பீகாரில் லாலு, காங்கிரஸ் கட்சியை ரொம்பவே அவமானப்படுத்துகிறார் என்றால், ஜார்கண்டில் அந்த வேலையைச் செய்து கொண்டிருப்பவர் ஜே.எம்.எம். கட்சித் தலைவரான சிபு சொரன். சொரன் உடல்நலமில்லாமல் டெல்லியில் ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டிருக்க தடாலடியாக, சொரனின் மூத்த மகன் துர்கா சொரன், தொகுதிப் பங்கீட்டில் காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்ட கோட்டா தொகுதியில், தானும் வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு, பிரசாரத்தில் இறங்கிவிட்டார். ''இந்தத் தொகுதியில் காங்கிரஸ் ரொம்ப வீக். எதிர்க் கட்சி ஜெயிப்பதைத் தடுக்கவே நான் போட்டியிடுகிறேன்'' என்பது அவரது விளக்கம்.

('காங்கிரசை அதிகமாக அவமானப் படுத்தியது முலாயமா? லாலுவா? சிபு சொரனா?' என்று பாப்பையாவை வைத்து ஒரு பட்டிமன்றம் நடத்தலாமா?)

- பரத்ராம்


தங்க நகை இலவசம்!



* மகனுக்கு வழி



* ஹைடெக் வியாபாரி



* ஜோதிட தடை



பாவம் பாரதம்!

நாம் வாழும் சமூகத்தின் எந்தப் பக்கம் திரும்பினாலும் பொய் முகங்கள். போலிக் கூச்சல்கள். நாடு விடுதலை பெற்று அறுபதாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டாலும் நாம் இன்னும் வறுமையிலிருந்து முற்றாக விடுபடவில்லை; எழுத்தறிவு எல்லோருக்கும் வாய்த்துவிடவில்லை. சுற்றுப்புறச் சூழல் ஆரோக்கியமாக அமைந்துவிடவில்லை. வன்முறையை வளர்த்துவிடும் வேலையின்மைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை. இந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு முதல் முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் நம் அரசியல்வாதிகளே!

இன்றுள்ள அரசியல்வாதிகளில் மிகப் பலர், விழுகிற ஒவ்வொரு வியர்வைத் துளிக்கும் விளைச்சலை எதிர்பார்க்கும் வியாபாரிகள். சுயநலவாதிகளின் சொர்க்கபுரியாக அரசியல் உலகம் பாழ்பட்டு விட்டது.

மனித மரங்கள் மானத்தைக் காக்கக் கோவணத்துக்குத் துணியில்லாமல் தலைகவிழ்ந்து நிற்கும்போது, கொடி மரங்களில் மட்டும் கட்சிக் கொடிகள் குதூகலமாய்ப் பறந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்சியும் ஆட்சி நாற்காலியில் ஆசை வைப்பது பாமர மக்களின் பசியைத் தீர்ப்பதற்கு அன்று; அதன் தலைவர்களை பணமுதலைகளாக வளர்த்தெடுப்பதற்காகவே.


நம் ஆட்சியாளர்களிடம் இச்சகம் பேசுபவர்களுக்கு இருக்கும் மரியாதை அறிவாளிகளுக்கும், விஞ்ஞானிகளுக்கும் நிச்சயமாக இல்லை. சாகசங்களும், ஏமாற்றுத் தந்திரங்களும் உண்மை அறிவையும், உயர்ந்த உழைப்பையும் உதாசீனப்படுத்துகின்றன. கள்ளுண்ணாமை குறித்து வள்ளுவன் வலியுறுத்தியதும், மதுவிலக்குக்காக மகாத்மா கொடி பிடித்ததும் அர்த்தமற்றுப் போய்விட்டன. நம்மை நெறிப்படுத்த வேண்டிய தலைவர்கள் தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கின்றனர். ஒழுக்கக்கேடுகளுக்கு ஒப்பனை செய்கின்றனர்.

ஆட்சிக்கலையை 'Master Science' என்றார் கிரேக்க அறிஞர் பிளேட்டோ. 'உடல் நலமற்ற நேரத்தில் அழகான, பேச்சாற்றல் மிக்க மருத்துவரை நாம் தேடுவதில்லை. அறிவார்ந்த மருத்துவரையே நாடி ஓடுகிறோம். நாடு நோயுற்றபோதும் அறிவார்ந்தவர்களையே ஆள்வதற்காக நாம் நாடுவோம்' என்றார் அந்த ஆதிச் சிந்தனையாளர். அவருடைய சீடர் அரிஸ்டாட்டில், 'ஜனநாயகம், பிரபுக்கள் ஆட்சியை விடவும் கீழானது. ஏனெனில், அது பொய்யான சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒரு வகையில் சமமாக இருப்போர்



★ தமிழருவி மணியன்

தமிழருவி மணியன்



எல்லா வகையிலும் சமமாக இருக்கவிய லாது. திறமை எண்ணிக்கைக்கு முதற்பலி யாகிவிடும். மக்களை மிக எளிதில் ஜன நாயகத்தில் திசை திருப்ப முடியும். மக் களுக்கு எப்போதும் திடபுத்தி இருப்ப தில்லை. அறிவாளிகளுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்படவேண்டும்' என்று கூட வலியுறுத்தினார்!

அனைவருக்கும் வாக்குரிமை என்பது தான் ஜனநாயகத்தின் ஆணிவேர். வாக் களிப்பதற்குக் குறைந்தபட்சக் கல்வி அவசியம் என்று நம் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்த போது அழுத்தமாக வலியுறுத்தினார். ஆனால் நேரு அக்கருத்தை நிராகரித்தார். அப்போது ராஜேந்திர பிரசாத், 'நாம் உரு வாக்கும் ஜனநாயகத்துக்குத் தலைகளின் எண்ணிக்கைதான் முக்கியம். அவற்றுள்

என்ன இருக்கிறது என்பது முக்கிய மில்லை' என்று ஏளனமாகக் குறிப்பிட்டார்.

வெறுந் தலைகளின் எண்ணிக்கையே ஜனநாயக ஆட்சிமுறை ஆனதால் அற்ப மனிதர்கள் எல்லாம் அரசியல் களத்தில் அணிவகுக்கத் தொடங்கினர். சுதந்திரத்துக்குப் பின்பு அதிகாரம் சார்ந்த அரசியல் சூழல் சிறிது மாசடைந்தது. சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கும் மனோபாவம் பெருகியது. ஆனால் இப்போது, தன்னிடமிருக்கும் எதையும் தராமல், பொதுச் சொத்தை முற்றாகச் சூறையாடும் பகல் கொள்ளை பெருகி விட்டது.

வெற்றிலை பாக்குக் கடை வைப்பதற்குக் கூட முதலில் கொஞ்சம் மூலதனம் தேவைப்படுகிறது. ஆனால், அரசியல்வாதியாகப் பரிணாமம் பெற எந்த மூலதனமும் அவசிய மில்லை என்றாகிவிட்டது. ஆட்சி நாற்காலியில் அமரும் அரசியல்வாதிகள் தங்கள் சுயநலத்துக்காக அதிகார வர்க்கத்தைக் கெடுக்கின்றனர். நேர்மைக் குறைவான அதிகாரிகள், ஆட்சியாளர்கள் கொள்ளையடிப்பதற்கான வழிமுறைகளை அறிவியல் ரீதியாகக் கற்றுக் கொடுக்கின்றனர். இந்த இரண்டு வர்க்கத்துக்கும் பல நேரங்களில் இணைப்புப் பாலமாக மோசமான கிரிமினல் பேர்வழிகள் வந்து சேர்வது வாடிக்கையாகிவிட்டது. அரசியல்வாதிகள், அதிகாரவர்க்கம், கிரிமினல் குற்றவாளிகள் இணைந்து உருவாக்கும் முக்கூட்டணியில் இந்திய மக்களுக்கு மாறாத வறுமையும், ஜனநாயகத்துக்கு மூச்சுத் திணறலும் நிலையான நோய்களாய் நீடிக்கின்றன. இந்த நோய்கள் தீர்வதற்கு எதுதான் சிறந்த மருந்து? இந்தக் கேள்விக்கு எளிதில் விடை காண முடியாதபடி இடியாப்பச் சிக்கலாய் சமூக, அரசியல், பொருளாதாரச் சூழல்கள் சீர்கெட்டுவிட்டன.

இந்திய அரசியலின் சீரழிவுக்குத் தமிழகத்தின் பங்களிப்பு மிகவும் பிரதானமானது. காங்கிரசிலிருந்து சோஷலிஸ்டுகள் வெளியேறியதும், கம்யூனிஸ்டுகள் உருவானதும், சுதந்திரா கட்சி



உதயமானதும் சித்தாந்த வேறுபாடுகளின் அடிப்படையில் என்பது வரலாறு. ஆனால், பெரியார் தம் முதிய வயதில் ஓர் இளம் பெண்ணை மணமுடித்ததைக் காரணமாக்கிப் புதிய கட்சி பிறந்த பெருமைக்குரியது தமிழகம். பிரிவினைவாதம், மண்ணின் மைந்தர்கள் என்ற இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரான கருத்தோட்டங்கள் முதலில் கருக்கொண்டது நம் தமிழ் மண்ணில்தான். மலிவான கோஷங்களைக் கொண்டே மக்களை எளிதாக ஏமாற்ற முடியும் என்ற வரலாறு படைத்தது தமிழினத் தலைவர்கள்தான். இலவசப்

இந்திய அரசியலின் சீரழிவுக்குத் தமிழகத்தின் பங்களிப்பு மிகவும் பிரதானமானது.

களால் வாக்காளர்களை வளைத்துப்போட முடியும் என்று இந்திய அரசியல்வாதிகளுக்கு வழிகாட்டியவர்கள் நம் திராவிட இயக்க ஆட்சியாளர்களே.

திராவிடர் கழகத்திலிருந்து தி.மு.கழகம் பிறந்ததும், தி.மு.க.விலிருந்து அ.தி.மு.க. பிறந்ததும், ம.தி.மு.க. உருவானதும் தனி மனிதப் பகைமையினாலன்றி, தத்துவ வேறுபாடுகளினால் அன்று. இன்று கலைஞருக்கும், ஜெயலலிதாவுக்கும் இடையில் இருக்கும் தணியாத வெறுப்புதான் தமிழகத்தில் எந்தப் பிரச்னையிலும் மக்கள் ஒன்றுபடாமல் இரண்டு எதிரணிகளாய் மோதிக் கொள்வதற்கான முக்கியக் காரணம். நேருவின் குடும்பம்,



வாரிசு அரசியலுக்கு முதன்முதலில் விதை போட்டது. தி.மு.கழகமோ, ஊருக்கு ஊர் வாரிசு அரசியலை விருட்சமாகவே வளர்த்து விட்டது. இன்று அனைத்து அரசியல் கட்சிகளிலும் இந்தப் பெருநோய் இந்தியா முழுவதும் பரவிவிட்டது. காங்கிரஸைக் காப்பாற்ற நாட்டின் நூறு கோடி மக்களில் சோனியா காந்தியின் குடும்பத்தை விட்டால் வேறு ஆளில்லை என்பது எவ்வளவு பெரிய அவமானம்?

ஐம்பது ரூபாய் நோட்டுக்கும், ஐந்நூறு மில்லி சாராயத்துக்கும், ஒரு பிரியாணி பொட்டலத்துக்கும் தங்கள் வாழ்க்கையை மிக மலிவாக விற்றுத் தீர்க்கும் மனிதர்களின் கைகளில் வாக்களிக்கும் உரிமை இருக்கும் வரையில் பொதுவாழ்வில் புதிய மாற்றங்கள் ஒரு போதும் பூக்கப் போவதில்லை. திருமங்கலம் இடைத்தேர்தல் 'பணம் மட்டுமே வெற்றியைத் தீர்மானிக்கும் ஒரே சக்தி' என்ற மோசமான நிஜத்துக்கு நிரூபணமாகிவிட்டது.

நம் நாட்டின் இன்றைய ஜனநாயக அமைப்பில் நூறு விழுக்காடு நேர்மையாளர்களையே ஆட்சியில் அமர்த்துவதற்கு வழியில்லை. நேர்மை வழுவாத, சபலங்களுக்கும், சலனங்களுக்கும் சிறிதும் ஆட்படாத, அறஞ்சார்ந்த அரசியல்வாதிகளை நாமொன்றும் வானத்திலிருந்து வரவழைக்க முடியாது.

''நன்மைக்கும், தீமைக்கும் இடையில் எதைத் தேர்வு செய்வது என்ற நிலையில் நாம் இல்லை. நமக்கு வாய்த்திருப்பதெல்லாம் இரண்டு தீமைகளில் எந்த ஒன்றைத் தேர்வு செய்வது என்பதுதான். நாம் பெரிய தீமையைப் புறக்கணித்து விட்டு சிறிய தீமையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்றார், காந்தியத்தில் கரைந்து போன ஆச்சார்ய கிருபளானி. அவர் பேசி கால் நூற்றாண்டுக்கு மேல் கடந்துவிட்டது!

தெரிந்தோ தெரியாமலோ நம் தேசத்துப் பெரும்பான்மை மக்கள் சிறிய தீமையை விட்டுவிட்டுப் பெரிய தீமையையே தேர்ந்தெடுத்து ஆட்சி நாற்காலியில் அமரச் செய்கிறார்கள்.

பாவம் பாரத தேசம்!

படங்கள்: ஸ்ரீ அரசு

தேர்தல் சிறப்பிதழ்-2

கள்ள வோட்டுக்கு கடன்!



''நம்ம கட்சிக்கு பணபலம் கம்மி!''

''அதுக்காக கள்ள வோட்டுக்கு கடன் சொல்றது டூ மச் தலைவரே!''

- அம்பை தேவா



''தலைவர் மேடையில நேத்து பேசினப்ப ஒரே ஒரு ஆள் மட்டும் கைதட்டினானாம்...''

''ஓ... அதான் நேத்து கூட்டத்துல 'ஒரே' கைத்தட்டுன்னு தலைவர் சொல்லிட்டுத் திரியறாரா?''

- வீ. விஷ்ணுகுமார்

''என்ன கபாலி! திடீர்னு கட்சி ஆரம்பிக்கப் போறதா ஒரு குண்டைத் தூக்கிப் போடறே?''

''விட்ட மாமூலை எல்லாம் திரும்பச் சம்பாதிக்க எனக்கு வேற வழி தெரியலே; அதான்!''

- அதிரைபுகாரி



''தேர்தல் கமிஷனிடம் தலைவர் என்ன கேட்டாரு..?''

''ஜெயிக்கிற மாதிரி ஒரு சின்னம் வேணும்னு...!''

- வெங்கட்





கிராமமும் நகரமும்

புகையை உற்பத்தி செய்கிற அடுப்பு அதை வெளியே அனுப்பிவிட்டு தன் இடத்தைக் கூடிய மட்டும் சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பது போல், பட்டணங்கள் சிருஷ்டிக்கிற அநாசாரங்கள் கிராமங்களுக்குப் பரவியிருக்க, பட்டணங்கள் கூடிய வரை ஆசாரங்களில் பயபக்தி காட்டுவதாகத் தோன்றுகிறது.

கிராம ஜனங்களுக்கு, பட்டணத்தில் இருப்பது போல் வேலை வெட்டிகள் அதிகம் கிடையாது. அவர்கள் சகல அனுஷ்டானங்களையும் குறைவில்லாமல் செய்ய வசதியுண்டு. ஆனால் பொதுவாக அவர்கள் அனுஷ்டானங்கள் எதுவுமே செய்யாமல், சாஸ்திர விஷயங்கள் எதுவுமே தெரிந்துகொள்ளாமல் விருதாவாகக் காலத்தைப் போக்குகிறார்கள். பட்டணவாசத்து ஜனங்களுக்கு, தலை தெறிக்கக் காரியங்கள் இருக்கின்றன. ஆஃபீஸ் காரியம், சோஷியல் சர்வீஸ், விளையாட்டு கிளப் எல்லாம் இங்கு அதிகம். இவற்றில் நமது ஆசார அனுஷ்டானங்கள் பலவற்றை விட்டுவிடும்படியாக இருக்கிறது. என்றாலும், 'இப்படிச் செய்கிறோமே, இது தப்பு அல்லவா?' என்ற பச்சாதாபமும் பட்டணத்து ஜனங்களிடம் ஒட்டிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதனால்தான் எத்தனையோ வேலை நெரிசல்கள் இருந்தாலும் ஏதோ ஒரு சின்ன பூஜை, கொஞ்சம் கொஞ்சம் அனுஷ்டானங்கள், பஜனை, புராணப் பிரவசனம், ஆலய வழிபாடு ஆகியவற்றைத் தனித் தனியாகவும் சங்கமாகக் கூடியும் காப்பாற்றி வருகிறார்கள். இது ஓரளவுக்குச் சந்தோஷம் தருகிறது.

– ஜகத்குரு காஞ்சிகாமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

வாகனங்கள் ஓடுகிற சத்தம் விலங்குகளுக்குப் பழகிப்போன ஒன்று. ஆனால் மனிதன் பேசுகிறபோது விட்டுவிட்டு எழுகிற ஒலியில் விலங்குகள் எரிச்சலடையும். சளசளவென்று பேசிக்கொண்டிருப்பது விலங்குகளுக்குக்கூடப் பிடிக்காது என்பது, மனிதனுக்கு வனங்கள் நடத்தும் பாலபாடம்.

முத்துமாணிக்கம் குழுவினர் பயணமாகிக்கொண்டிருந்த வனப்பகுதியில் ஆறுகள் ஆட்சி செய்துகொண்டிருந்தன. தேக்கடி ஆறு, கல்யாணக் குடை ஆறு ஆகியவற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆற்றுக்குக் குறுக்கே போன ஜீப்புக்குள் தண்ணீர் நுழைய, வெள்ளப் பெருக்கைக் கிழித்துக்கொண்டு தொடர்ந்தது அந்த சாகசப் பயணம்.

கல்யாணக்குடை ஆற்றைத் தாண்டியதும் ஐயப்பன் பொய்கை என்ற அழகிய இடத்தில் நூற்றுக்கணக்கான மான்கள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றைச் சுட வேண்டும் என்று கைகால்கள் பரபரத்தன. முத்துமாணிக்கத்தின் கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டு அமைதியாயிருந்தார்கள்.

''சுடச் சொன்னால் மட்டும் சுடுங்கள்'' என்று முத்துமாணிக்கம் சொன்னதில் எத்தனையோ அர்த்தங்கள் உண்டு. வேட்டை தொடங்கியதும் எதிரே வருவதையெல்லாம் சுட்டால் வேட்டையில் ஈடுபாடு போய்விடும். ஐம்பது அறுபது மிருகங்களைப் பார்ப்பது, பார்த்ததிலேயே சிறந்ததைச் சுடுவது என்பது அவர் வகுத்து வைத்திருந்த கோட்பாடு.

ஐயப்பன் பொய்கையைத் தாண்டி சில அடிகள்தான் போயிருப்பார்கள். யானை போல் ஓர் உருவம் சாலையில் சென்றுகொண்டிருந்தது. கனத்த கறுத்த காட்டெருமை அது. நிதானமாய் நின்று ஜீப்பைத் திரும்பிப் பார்த்தது. பின்னால் கைநீட்டி 500 எக்ஸ்பிரஸ்ஸை வாங்கிக்கொண்டே, சிவாஜியைப் பார்த்து, ''சுடுங்க




மரபின்மைந்தன் முத்தையா

பொள்ளாச்சிக்குப் பிள்ளையார் சுழி!

கணேசன்! அவசரமில்லாம நிதானமாச் சுடுங்க'' என்றார். சிவாஜி சுட்ட அதே விநாடி, குறிதவறி அவர் ஏமாற்றமடைந்து விடக் கூடாது என்பதற்காக முத்துமாணிக் கமும் சுட்டார். இரண்டு குண்டுகளும் சரியாகப் பாய்ந்தன. 500 எக்ஸ்பிரஸ்ஸில் சுட்டால் அதன் புல்லட் சென்று தாக்கும் போது இரண்டரை டன் எடையுள்ளதாக அதன் சக்தி இருக்கும். அதனால் ஒன்றரை டன் எடை அளவுள்ள அந்தக் காட் டெருமை சுண்டி விடப்பட்ட நாணயம் போல் மேலே எகிறி, தரையில் விழுந்து உயிர்விட்டது. சிவாஜிக்கும் அவர் நண்பர் களுக்கும் ஏற்பட்ட ஆனந்தம் சொல்லி மாளாது. வேட்டையில் முதல் குறியே சரியாக அமைந்ததில் ஆடிப்பாடி சந் தோஷத்தைக் கொண்டாடினர்.



ஊர் திரும்பியதும், விருந்தோம் பலையே வாழ்வாகக் கொண்ட கொங்கு மக்களின் அன்பு மழையில் சிவாஜி கணேசனும் அவர் நண்பர்களும் நனையத் தொடங்கினர். காலை உணவும் மதிய உணவும் மூன்று நான்கு வீடுகளில் என்று அழைக்கப்படும் அளவுக்குச் சொந்தங் களும் பந்தங்களும் உருவாகின.



வந்து பார்த்துவிட்டுப் போகலாம் என்றிருந்த சிவாஜி, மூன்று நான்கு நாட்களாகியும் கிளம்ப மன மில்லாமல் இருந்தார். புறப்படும் நாளும் வந்தது. பாதி தூரம் வரை வழியனுப்ப வந்த முத்துமாணிக்கம், நடுவீதியில் கட்டித்தழுவி கண்ணீர் பெருக்கி, பிரிய மனமின்றிப் பிரிந்தார். போவதற்கு முன் னால், முத்துமாணிக்கம் சென்னைக்கு வருவது எப்போது என்று கேட்டு உறுதி செய்துகொண்ட பின்னரே புறப்பட்டுச் சென்றார் சிவாஜி.

அன்று அரும்பிய நட்பு, அபூர்வ மலராய் மலர்ந்து, இணைபிரியாத பந்த மாய் இறுகி, நட்பு விட்டுப் போகக் கூடாது என்பதற்காகவே சம்பந்தம் செய்து கொள்ளும் அளவுக்குச் சங்கமித்துப் போகும் என்கிற கணக்கை காலம் அந்த நாளில் ஆரம்பித்து வைத்தது.

சேத்துமடையில் நிகழ்ந்த முதல் சந்திப்புக்குப் பிறகு ஆவடியில் நடை பெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்கு, தான் வரப்போவதாகத் தெரிவித்திருந்தார் முத்து மாணிக்கம். ஆவடி காங்கிரஸ் என்று பிற் காலத்தில் புகழ்பெற்ற அந்த நிகழ்ச்சிக்கு திருச்சி வழியாகப் போகிற முத்துமாணிக் கத்தைத் தவறவிடக் கூடாது என்பதற்காக, திருச்சிக்கு வரும் பாதை ஒவ்வொன்றிலும் காரில் நண்பர்களை நிறுத்தி வைத்திருந்தார் சிவாஜி.

கரூர் வழியாக வந்த முத்துமாணிக் கத்துக்கு அந்தப் பாதையில் காத்திருந்த பி.என்.பிள்ளையைப் பார்த்ததும் ஆச்சரி

யம்! தம் நண்பருடன் சேர்ந்து ஆவடி காங்கிரஸ்க்கு சிவாஜியும் சென்றார். அவர் அதற்கு முன் மேற்கொண்டிருந்த திருப்பதி பயணம் திராவிட இயக்கத்தில் சர்ச்சைகள் ஏற்படுத்தியிருந்த நேரம். நண்பருக்காக காங்கிரஸ் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டதும் எதிர்காலத்தில் சிவாஜியின் அரசியல் வாழ்வில் அடுத்த திருப்பு முனைக்கு அச்சாரம் போட்டது.

தங்களது தோழமை தொடரவேண்டும் என்பதற்காகவே இருவரும் சேர்ந்து

* வேட்டையில் நண்பர்களுடன்



பிரபுராம் பிக்சர்ஸ் - பிரபுராம் மில்ஸ் - பிரபுராம் எஸ்டேட்ஸ் என்று எத்தனையோ நிறுவனங்களைத் தொடங்கினார்கள். முத்துமாணிக்கம் தம் மகனுக்கு பிரபு என்று பெயர் வைத்ததைத் தொடர்ந்து தம் இளைய மகனுக்கும் அதே பெயரை வைத்தார் சிவாஜி.

ஒருவரைச் சந்தித்த மாத்திரத்தில் உள்ளம் திறந்து பழகி, உடனே ஈர்த்து, தம் உற்ற நண்பராக யாரையும் ஏற்றுக் கொள்வது முத்துமாணிக்கத்தின் இயல்பு. பொதுப்பழக்கங்களைப் பெரும்பாலும் தவிர்த்து, கலை நுட்ப மேதைகளுக்கே உரிய பாணியில் அதிகம் பழகாத இயல்புகள் கொண்டவர் சிவாஜி. எனவே தம் நண்பர் தமக்கே நண்பராயிருக்க வேண்டும் என்று விரும்புவார்.

இந்த நட்பின் பரிமாணங்களில்தான் எத்தனை எத்தனை சம்பவங்கள்! எவ்வளவு பேருடைய தொடர்புகள்! சிவாஜியின் தனி வாழ்விலும் கலைவாழ்விலும் பொது வாழ்விலும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் முக்கியமான மனிதரானார் முத்து மாணிக்கம். அதற்கு முதல் காரணம், முத்து

ஒருவரைச் சந்தித்த மாத்திரத்தில் உள்ளம் திறந்து பழகி, உடனே ஈர்த்து, தன் உற்ற நண்பராக ஏற்றுக்கொள்வது முத்துமாணிக்கத்தின் இயல்பு.

மாணிக்கத்தின் விருந்தோம்பல் பண்பும் விரைந்து பழகுகிற இயல்பும். மற்றொரு காரணம், தம் நண்பரின் பெருமைகளை, தாம் பார்க்கும் எல்லோரிடமும் சிவாஜி வியந்தும் விதந்தும் சொன்ன விதங்கள்.

மண்ணோடு தண்ணீராய் மனங்கலந்து பழகும் கொங்குமக்கள் சிவாஜியுடன் உறவுமுறை கொண்டாடத் தொடங்கினர். முத்துமாணிக்கத்துக்கு யாரெல்லாம் சகோதரமுறையோ அவர்களெல்லாரும் சிவாஜிக்கும் சகோதரர்களானார்கள்.

சேத்துமடைக்கும் சூரக்கோட்டைக்கும் வேற்றுமை இல்லாத அளவு உறவும் உரிமையும் வளர்ந்தன. பொள்ளாச்சி பகுதியில் அதிகமான அளவுக்கு இன்றும் படப்பிடிப்புகள் நடப்பதற்குக் கூட பிள்ளையார் சுழி போட்டவர் 'கணேசன்'தான்.

(தொடரும்)

முடங்கும் தி.மு.க. முந்தும் அ.தி.மு.க.

வடசென்னை பாராளுமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணியின் கடுமையான போட்டியைச் சந்திக்கிறார் தி.மு.க.வின் டி.கே.எஸ். இளங்கோவன். குறிப்பாக ராயபுரம் மற்றும் ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதிகள் அ.தி.மு.க.வின் கோட்டை. போதாததற்கு, தொழிலாளர்கள் அதிகம் நிறைந்த வடசென்னையில் தா.பாண்டியனுக்கு இயல்பாகவே ஆதரவு அதிகமாக இருக்கிறது. மேலும் தி.மு.க. அரசின் மீதுள்ள பொதுவான அதிருப்தி காரணமாக, அ.தி.மு.க. அணி கூடுதல் உற்சாகத்தில் இருக்கிறது. ''வடசென்னை மாவட்டச் செயலாளராக பல்லாண்டு இருந்த பலராமன் கட்சியைச் செல்லாக் காசாக்கி வைத்திருக்கிறார். திருமங்கலம் பாணியைக் கடைப்பிடிக்காவிட்டால் வெற்றி சந்தேகமே'' என்று தி.மு.க.வினர் தனிப்பட்ட முறையில் பேசிக்கொள்கிறார்கள். இளங்கோவனுக்குச் சிபாரிசு செய்த கனிமொழியின் கையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் உடன்பிறப்புகள்.



* டி.கே.எஸ். இளங்கோவன்

அமைச்சர் பொன்முடியின் சிஷ்யரான ஆதிசங்கர் விழுப்புரத்தின் அடுத்த தொகுதியான கள்ளக்குறிச்சியில் நிற்கிறார். ஆனால், ஆதிசங்கருக்கு தி.மு.க. ஸீட் கொடுத்ததைக் கடுமையாக எதிர்க்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். கள்ளக்குறிச்சி தொகுதியை தி.மு.க.வுக்குக் கொடுக்கக் கூடாதென்று கொடி தூக்கிய திருக்கோயிலூர் சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் சிவராஜ், ஆதிசங்கருக்கு எதிராகக் குழி பறிக்கும் வேலையை மும்முரமாகச் செய்து வருகிறார். பொன்முடி எவ்வளவோ முயன்றும் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் காங்கிரஸ்காரர்களைச் சரிக்கட்ட முடியவில்லை. இதன் காரணமாக ஏற்கெனவே பா.ம.க.விடம் கடுமையான போட்டியைச் சந்திக்கும் ஆதிசங்கர் ஆடிப்போயிருக்கிறார். இந்த நிலையில் சிறுத்தைகளுக்குக் கொடுத்த விழுப்புரம் தொகுதியில் கவனம் செலுத்த நேரமில்லாமல் கள்ளக்குறிச்சியில் அல்லாடுகிறார் பொன்முடி. இதனால் சிறுத்தைகள் கலங்கிப் போயிருக்கிறார்கள். ''இந்த இரண்டு தொகுதிகளிலும் தி.மு.க. தோற்றுப்போவது உறுதி'' என்கிறார்கள் அ.தி.மு.க. பிரமுகர்கள்.

- ஸ்ரீநி



* பொன்முடி

காதைக் கொடுங்க

தமிழ்ப் பேராசிரியை கற்பகம் அந்தப் பெயர்ப் பட்டியலைப் புரட்டினார். எந்த ஒரு போட்டியிலுமே தாமரையின் பெயரைக் காணவில்லை.

போன வருடம் நடந்த பல போட்டிகளில் பங்குபெற்று பலரின் பாராட்டைப் பெற்ற மாணவி தாமரை. அவளை அழைத்து வருமாறு பியூனிடம் கூறினார்.

அடுத்த வாரம் கல்லூரி ஆண்டு விழா. இருபாலர் படிக்கும் கல்லூரி என்பதால் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் இடையே ஆரோக்கியமான போட்டி இருக்கும்.

ஒவ்வொரு போட்டிக்கும் மதிப்பெண் கொடுத்து, தங்கள் திறமையைத் திறம்பட வெளிப்படுத்தும் ஒருவருக்கு அந்த ஆண்டின் ஹீரோ அல்லது ஹீரோயின் விருது வழங்குவது வழக்கம்.

"காதல் என்ற பூச்சாண்டிக்குப் பயந்து உன்னை இழக்கப் போகிறாயா?"

தாமரையின் வட்ட முகம், கிராமத்தனம் மாறாத வெகுளிப் பேச்சு, பார்த்தவுடனேயே சிரிக்கும் கண்கள், அவளை எல்லோருக்கும் பிடித்த மாணவியாக்கின.

பாட்டுப் போட்டி, கோலப் போட்டி, ஓட்டப்பந்தயம் என்று எல்லாவற்றிலும் கலக்கினாள்.

போன ஆண்டு, போட்டியின் போது தாமரை பாடிய கிராமத்துத் தாலாட்டுப் பாட்டுக்கு, கல்லூரியே எழுந்து நின்று கைதட்டியது.

எதிரே நிழலாட, பேராசிரியை கற்பகம் நினைவு கலைந்து தலை நிமிர்த்தினார்.

தாமரைதான்!

''என்ன மேம்?''

''இந்த வருடம் நம்ம கல்லூரி 'ஹீரோயின்' நீதான்னு எல்லோரும் பேசிக்கறாங்க. ஆனால், ஒரு போட்டியிலேகூட உன் பெயரைக் காணோமே?''

தாமரையின் மருண்ட விழிகள், வருத்தமாய் உருண்டன.

''உடம்பு சரியில்லையாம்மா?'' கற்பகத்தின் கனிவான பேச்சில் கரைந்து போய் அழ ஆரம்பித்தாள். அவள் மனத்தின் பாரம் குறையட்டும் என்று அழுது முடிக்கக் காத்திருந்தார் பேராசிரியை.

''சொல்லு! என்னாச்சு?''

''செந்திலுக்குப் பிடிக்கலே மேம்'' என்றாள் மெல்லிய குரலில்.

''செந்தில்?''

''ஃபைனல் இயர் படிக்கிறாரே. ஸ்டூடண்ட்ஸ் சேர்மன்... அவர்தான்.''

கற்பகத்துக்குப் புரிய ஆரம்பித்தது. காதல்.

''போன வருடம் நான் பாடியதைக் கேட்டதிலேயிருந்து, என் பின்னாடி சுற்றி வந்தார். போகப் போக, எனக்கும்... அவரைப் பிடிச்சுப் போச்சு.


ஆரம்பத்திலே என் திறமைகளைப் பாராட்டினவர், இப்பல்லாம், என்னைத் தடுக்கறார். இந்த வருடம் நான் எந்தப் போட்டியிலும் கலந்துக்கக் கூடாதுன்னு தடைபோட்டுட்டார்.''

''என்ன காரணமாம் தாமரை?''

''நான், அவருக்கு உரியவளாம். என்னை எல்லோரும் பார்க்கறதும், பாராட்டுற சாக்குல வந்து பேசறதும் பிடிக்கலையாம்.''

''சரி, மீறி நீ போட்டியிலே கலந்துக்கிட்டா என்னாகுமாம்?''

''அவர்... என்னைக் காதலிக்கவும் மாட்டாராம். கல்யாணமும் பண்ணிக்க


கிருஷ்ணா
காதல் வளை!

மாட்டாராம்.''

''போறானே! என்னவாயிடும்?''

தாமரையின் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

''நானும், செந்திலும் காதலிக்கற விஷயம் இந்தக் கல்லூரி முழுக்கத் தெரியும். அவர் என்னை மறுத்துட்டா, என் பெயர்தானே களங்கப்படும். அப்புறம், என் வாழ்க்கை?''





சற்று நேர அமைதிக்குப் பின், கற்பகம் தம்மை நிதானித்துக் கொண்டு பேசினார்.

''இப்ப உன் காதல் ஆனந்தம் தருதா, இல்லை, அவஸ்தையாயிருக்கா?''

''அது... இந்த மாதிரி ட்ரெஸ் பண்ணிக்காதே, இப்படி தலையைப் பின்னிக்காதே, அவனோடு பேசாதே, சத்தமாய்ச் சிரிக்காதேன்னு, எதைச் செஞ்சாலும், செந்தில் தடுக்கறப்போ, கோபமாய் வருது மேம். ஆனால், எங்க காதல் ஊருக்குத் தெரிஞ்சு போனதுனாலே, பயமாகவும் இருக்கு'' என்றாள் தாமரை, தழுதழுப்பாய்.

''எப்ப உங்க காதல் வருத்தம் தர ஆரம்பிச்சுடுச்சோ, அதுல காதல் இல்லைங்கறது என் அபிப்ராயம். ஒரு பெண்ணை விரும்பறது வேறு. அவளின் மேல் ஆதிக்கம் செலுத்துவது வேறு. செந்தில் உன் மேல் செலுத்துவது ஆண் என்ற ஆதிக்கம். இனி உன்னால் அவனை விட்டுப்போக முடியாது என்று தெரிந்துகொண்டு, சாமர்த்தியமாய் சிலந்தி வலை பின்னுகிறான். அந்தச் சிலந்தி வலையில் நீ இழக்கப் போவது உன் தனித்தன்மைகள், திறமைகள், சுயநம்பிக்கை, கடைசியாய் உன் வாழ்க்கை! பரஸ்பரம், இருவரும் ஒருவர் உணர்வைப் புரிந்து, மதித்தால்தான் காதலுக்கும் நல்லது, காதல் கைகூடினால் வரும் இல்லற வாழ்க்கைக்கும் நல்லது. யோசி! காதல் என்ற பூச்சாண்டிக்குப் பயந்து உன்னை இழக்கப்போகிறாயா, அல்லது உனக்கு நீதான் முக்கியம் என்று உணர்ந்து, காதலை இழக்கப் போகிறாயா? நாளை வந்து என்னைப் பார்'' என்றார் பேராசிரியை.



தாமரை திகைப்புடன் சற்று நேரம் சிலை போல நின்றாள்.

அந்த வருடக் கல்லூரி விழாவிலும், அந்தக் கிராமத்துக் குயில் பாடியது. ●

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2009



படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தேவிட்டது!

முதல் பரிசு - ரூ.10,000/-

இரண்டாம் பரிசு - ரூ.7,500/-

மூன்றாம் பரிசு - ரூ.5,000/-

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும்.

யார் வேண்டுமானாலும் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம். என்றாலும் எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு.

விதிமுறைகள் :

* கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
* சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதி மொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
* அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை; போட்டி முடிவு வெளியாகும் வரை எழுது வதில்லை என்று உறுதிமொழி தரவேண்டும்.
* படைப்பாளி முப்பத்தைந்து வயதுக் குட்பட்டவராக இருந்தால், அதற்கான ஏதாவ தொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி. - ஜெராக்ஸ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
* முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
* தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
* போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.
* பரிசுக்குரிய கதைகளை, நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
* முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
* 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2009' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி,
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

* **கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 15.**
* **போட்டி முடிவும், முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 2 ஆண்டு மலரில் வெளியாகும்.**

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்

கல்கி மாம்

காலையில் படுக்கை சுற்றி வைக்கும் போதெல்லாம் எனக்கு அம்மா ஞாபகம் வரும். 'படுக்கை விரிப்பை மேல்புறம் உள்ளடங்க மடிக்கணும்; போர்வையை அடிப்புறம் உள்ளடங்க மடிக்கணும்' என்று கற்றுக்கொடுத்தாள். காரணம் என்ன தெரியுமா? ''உடலில் படுகிற பக்கம் தூசு படியாமல் உள்ளடங்கி இருக்கணும்'' என்பாள்!

அந்நாட்களில் படுக்கையைச் சுற்றி வைக்காவிட்டால் தரித்திரம் பற்றிக் கொள்ளும் என்ற நம்பிக்கை உண்டு. அதனால் நான் படுக்கையை ஒழுங்காகச் சுற்றி வைக்காவிட்டால் அம்மாவுக்குக் கோபம் வந்து, ''பழையது கிடையாது, போ!'' என்பாள். வயிற்றில் மணி அடிக்கும் போது தட்டைக் கொண்டு போய் நீட்டினால் இரண்டு கை அள்ளிப் போட்டு, வழக்கத்தை விட அரைக் கரண்டி தயிர் அதிகமாகவே விடுவாள். தொட்டில் பழக்கம் இன்றும் தொடர்கிறது. காலையில் ஒரு கிண்ணம் தயிர் சாதம் சாப்பிட்டால்தான் தெம்பாக இருக்கிறது.

அம்மாவுக்கு எல்லாம் 'அது அது அதன் அதன் இடத்தில்' இருக்க வேண்டும். வீடு சுத்தமாகக் காட்சி தர வேண்டும். ''நீ சோப்புக்குக்கூட சோப்பு போட்டு அலம்பி வைப்பாய், அம்மா!'' என்று நான் கிண்டலடித்ததுண்டு. அம்மாவிடம் நான் கற்றுக்கொண்ட இன்னொரு விஷயம் சிக்கனம். அப்பா மாதம் நூறு ரூபாய் சம்பாதித்த நாளில் நாற்பது ரூபாய் வீட்டுச் செலவுக்குக் கொடுப்பார். அதில் அம்மா ஐந்து ரூபாய் மிச்சம் பிடித்துச் சேமிப்பாள். இதே விகிதாசாரம் அப்பா ஆயிரம் ரூபாய் சம்பாதித்தபோதும் கடைப்பிடிக்கப்பட்டது.

அக்கா ஆனந்திக்குக் கல்யாணம் ஆன பிறகு அத்திம்பேர் ராமச்சந்திரன், ''சமையல் ஆச்சா?'' என்று கேட்க மாட்டார்; ''சமையல் ரிப்பேர் பண்ணியாச்சா?'' என்றுதான் தமாஷாகக் கேட்பார். விருந்தினர் வந்திருந்தால், ''என் பெண்டாட்டி சமைப்பாள்; என் மாமியார் அதை ரிப்பேர் செய்வாள்'' என்று விளக்கம் தருவார். அம்மாவின் கைமணம் அப்படி!


அம்மாவுக்கு ராஜாஜியின் 'டேஸ்ட்'; ரசிகமணியின் ருசி; கணவர் 'கல்கி'யின் ரசனை என்று தனித்தனியாகத் தெரியும். ஒரு சமயம் அம்மா நாமகிரியைப் (ராஜாஜியின் மகள்) பார்க்கப் போயிருந்த போது, ராஜாஜியிடம், ''நாளைக்கு ஏதாவது பண்ணி அனுப்பட்டுமா?'' என்று கேட்டாள். ''புளி அவல் கொஞ்சமா அனுப்புங்கோ; சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு'' என்றார் வைஷ்ணவரான ராஜாஜி. உடனே நாமகிரி, ''காரம் வேண்டாம்; புளி கூட மட்டா இருக்கட்டும்'' என்றார். தகப்பனாருடைய உடல் ஆரோக்கியம் பற்றிய கவலை நாமகிரிக்கு எப்போதும் உண்டு.

''பாப்பா!'' என்று மகளை அழைத்த ராஜாஜி, ''ருக்மிணி அம்மாளுக்கு நீ பக்குவம் சொல்லித் தந்து ருசியைக் கெடுத்துடாதே! அவா வழக்கமா செய்து அனுப்பறபடி அனுப்பட்டும்!'' என்றார். அம்மாவின் செய்நேர்த்தியில் அவ்வளவு நம்பிக்கை.

அப்பாவுக்குச் சாப்பாடு நேரத்தில்

5 **கல்கி ராஜேந்திரன்**

தளரத் தளர ரசம் சாதம் பிசைந்து வைப்பாள் அம்மா. கறி அல்லது கூட்டு தவிர சுட்ட அப்பளத்தின் மேல் உருக்கிய நெய் தடவிப் போடுவாள். அப்பாவுக்காக அம்மா காப்பி தயாரிப்பது ஒரு பெரிய யாகம் போல. 'ரொபஸ்டா', 'பீபெரி' என்று ரகம் வாரியாகக் காப்பிக்கொட்டை வாங்கி, அளவாகக் கலந்து, பக்குவமாக வாணலியில் வறுத்து, புகையும் போது இறக்கி, காற்றுப் புகாத டப்பாவில் வைத்துக் கொள்வாள் - ரெண்டு நாள் தேவைக்குத்தான். மூன்றாவது நாள் மறுபடி காப்பிக் கொட்டை வறுப்பாள். காப்பியின் தரம் குறையாதிருக்க இப்படி தன்னை வருத்திக் கொள்வாள். கையால் சுற்றப்படும் அரவை மிஷினில் அன்றன்றைக்கு அரைத்து, ஃபில்டரில் டிகாக்ஷன் இறக்கி, வீட்டிலே கறக்கும் பசுவின் பாலும் சர்க்கரையும் கொஞ்சமாகச் சேர்த்து ஸ்ட்ராங் காப்பி கலந்தால் வீடே மணக்கும். சூடு குறையாமலிருக்க டமராவில் வெந்நீர் விட்டு, அதில் காப்பி டம்ளரை வைத்து அம்மா கொடுக்க, நான் அதைச் சிந்தாமல் சிதறாமல் மாடிப்படி ஏறிக்கொண்டு போய் அப்பாவை எழுப்ப வேண்டும். காப்பியை அப்பா நிதானமாக ருசித்துச்



● வேலூரில் கல்கி மாமிக்குச் சிகிச்சையளித்த மருத்துவர் ஐடா ஸ்கட்டருடன்... கீழே : கல்கி ராஜேந்திரன், ஆனந்தி

70 முதல் 7 வரை - II

சாப்பிடுவதைப் பார்க்க, எனக்கு அம்மாவின் கடும் தவத்துக்கு வரம் கிடைத்து விட்டதாகத் தோன்றும்.



அப்பாவைக் கைப்பிடித்தபோது அம்மாவுக்கு, 'முத்தம்மா' என்றுதான் பெயர். அம்மாவுடைய ஒன்றுவிட்ட சித்தப்பா எப்போதாவது வீட்டுக்கு வரும்போது, ''முத்தம்மா!'' என்று அழைத்தபடி வாசலில் நுழைவார். அதனால் தெரியவந்தது. அப்பாதான், கிருஷ்ணமூர்த்தி என்ற தம் பெயருக்குப் பொருத்தமாக 'ருக்மிணி' என்று அம்மாவின் பெயரை மாற்றிவிட்டார். ஆனால் நாளாவட்டத்தில் உறவினர்கள், நண்பர்கள் பலரும் அம்மாவைக் 'கல்கி மாமி' என்றே குறிப்பிடத் தொடங்கினார்கள். பேத்தி பிறந்த பிறகு, அதாவது என் சகோதரி ஆனந்திக்கு கௌரி பிறந்த பிறகு, அம்மாவுக்கு மறுபடியும் பெயர் மாற்றம் ஏற்பட்டது. (குழந்தை) கௌரி பேச ஆரம்பித்த சமயம், ''பாட்டி - சொல்லு!'' என்று கற்றுக் கொடுத்தால், ஸ்பஷ்டமாக, ''பாபுஜி'' என்று திரும்பச் சொல்லுவாள்! இன்றைக்கும் பேரன்-பேத்திகள்; கொள்ளுப் பேரன்-பேத்திகள் எல்லாருக்கும் அவள் 'பாபுஜி'தான்!

அப்பாவுடைய சமுதாயச் சீர்த்திருத்தக் கொள்கைகளுக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டாள் அம்மா.

கிராமத்திலேயே பிறந்து வளர்ந்தவளான அம்மாவுக்கு கல்யாணமாகி சென்னை வந்தபோது எழுதப் படிக்கத் தெரியாது. அப்பாதான் தமக்கிருந்த எத்தனையோ வேலைகளுக்கு இடையிலும் அம்மாவுக்கு தாய்மொழியில் எழுதவும், படிக்கவும் கற்றுத் தந்தார். அம்மாவும் ஆர்வத்துடன் கற்றறிந்தாள். ''ஆனந்த விகடனில் நான் கூட ரெண்டு சிறுகதைகள் எழுதியிருக்கேனாக்கும்!'' என்று அம்மா பிற்காலத்தில் சற்று நியாயமான பெருமையோடு சொல்லிக் கொண்டதுண்டு!

தலையூர் அக்கிரஹாரத்தை விட்டு அப்பால் சென்றிராத முத்தம்மாவுக்கு கல்யாணமான புதிதில் கணவருடைய கொள்கைகள் பல ரொம்பப் புதிராகவும் சங்கடமளிப்பதாகவும் இருந்தன. முக்கியமாக பிராமணர் அல்லாதாரும் விருந்தினராக வீட்டுக்கு வந்து அப்பாவுடன் சேர்ந்து அமர்ந்து சாப்பிட்டதும் அவர்களுக்குத் தான் சமையல் செய்து பரிமாற நேர்ந்ததும் அம்மாவுக்கு ரொம்ப மனக்கஷ்டத்தை அளித்தன. ஆனால் வெகு சீக்கிரம் அப்பாவுடைய சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளையெல்லாம் புரிந்து கொண்டு அதற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டும் விட்டாள்.

காந்தி மண்டபம், பாரதியார் மணி மண்டபம் போன்றவை, அவை உருவாகக் காரணமாயிருந்த 'கல்கி' அவர்களையும் நினைவுபடுத்துகின்றன என்றால், அம்மாவும் தன் பங்குக்குக் கொஞ்சம் சமுதாயப்

பணி ஆற்றியிருக்கிறாள். மதுரம் கோபால கிருஷ்ணா (ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனர் கோபாலகிருஷ்ணா அவர்களின் மனைவி) அவர்கள், தேனாம்பேட்டை பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் கும்பாபிஷேகத்துக்கு முன்னின்று உழைத்தபோது, அம்மா அவருக்கு உறு துணையாக இருந்து, வீடு வீடாகச் சென்று ஐம்பதாயிரம் ரூபாய் வரை நன்கொடை வசூலித்துக் கொடுத்தாள். அந்த நாளில் அது மிகப் பெரிய தொகை.

அப்பாவுக்கு படிப்படியாக வருவாய் அதிகரித்து வந்தபோது ஒரு காலகட்டத்தில் அம்மாவுக்கு ஒரு இரும்பு பீரோ (காட்ரெஜ்) வாங்கித் தந்தார். அதில் அம்மா தனது சொற்ப நகைகள் தவிர, சில பட்டுப் புடைவைகளையும் அழகாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் வயது ஏற ஏற எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுத்து விட்டாள். இரும்பு பீரோவை மட்டும் தரவில்லை. அதில் அரை கிலோ மிட்டாய் வாங்கி வைத்துக் கொண்டு வீட்டுக்கு வருகிறவர்களுக்கு வழங்கி வரவேற்பாள். ஒரு சமயம் உமையாள்புரம் சிவராமன் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தபோது அம்மா அவருக்கு இரும்பு பீரோவிலிருந்து முறுக்கு எடுத்துக் கொடுத்தாள். சிவராமன் திகைத்துப் போனார். அன்று முதல் அம்மாவையோ அல்லது என்னையோ சந்திக்கும்போதெல்லாம், ''இரும்பு பீரோவில் முறுக்கு பத்திரமா இருக்கா?'' என்று கேட்டுச் சிரிப்பார்.



✱ உமையாள்புரம் சிவராமன்

ஆசீர்வாதம் வழங்குவதிலும் அம்மா எக்ஸ்பர்ட்! ''தையல் நாயகி மாதிரி தழையத் தழைய தாலி அணிந்து கொண்டு...'' என்று ஆரம்பித்தால் ஆசீர்வாதம் அரை கிலோ மீட்டருக்கு நீளும்! ஆண் பிள்ளைகளுக்கு வேறுவித ஆசீர்வாதம் 'ஸ்டாக்' வைத்திருந்தாள்.

இளம்வயதில் அம்மா நல்ல உழைப்பாளி. கொல்லைப்புறம் தொழுவத்தில் கட்டிப் போட்டிருந்த பசுவுக்குப் போட, கல்லுரலில் பருத்திக் கொட்டை அரைக்கவும் தயங்க மாட்டாள். அந்த உழைப்பு அவள் உடலையும் உள்ளத்தையும் வைரம் பாய்ந்ததாக வைத்திருந்தது. 93 வயது வரை வாழ்ந்த அம்மாவுக்கு இந்த 2009, நூற்றாண்டு ஆகும்.

88வது வயதில் பூனைக்குச் சோறு போட கொல்லைப் பக்கம் சென்றவள், கீழே விழுந்து விட, ஸ்டிரெச்சரில் படுக்க வைத்து ஆம்புலன்ஸில் ஏற்றி விஜயா ஹாஸ்பிடலுக்கு அழைத்துப் போனேன். டாக்டர் மோகன் தாஸ் பரிசோதித்தார். ''அம்மா விழுந்து எலும்பை முறிச்சுண்டுட்டாளேன்னு கோபப்படாதே; எலும்பு உடைஞ்சதால்தான் அவ விழுந்தா'' என்றார். ''வயதாக ஆக எலும்புகள் உறுதி இழக்கும்'' என்று விளக்கினார்.

ஆபரேஷன் முடிந்த இரண்டாம் நாள் அம்மா எழுந்து உட்கார்ந்தது மட்டுமில்லை; மோகன்தாஸின் கரங்களைப் பற்றிக்கொண்டு, ''கிருஷ்ணா, ராமா, கோவிந்தா!'' என்று கூறியபடியே நடந்தும் காண்பித்தாள். டாக்டர் மோகன்தாஸ் ஆச்சர்யப்பட்டு தமது ஜூனியர்களையெல்லாம் அழைத்து, "See this eighty eight year old woman walking two days after the hip replacement!" என்று அம்மாவின் வைராக்கியத்தைப் பாராட்டியபோது, பெருமிதத்துக்குரிய அவருடைய ஆற்றலும் தெளிவானது.

(அடுத்த வாரம்: செம்மங்குடி கொடுத்த சர்டிஃபிகேட்)

''உங்களைப் போன்ற அறிவு ஜீவிகள் இந்த மேடையில் பேசிவிட்டுப் போய் விடுகிறீர்கள். அதனால் என்ன பலன்? லஞ்ச ஊழல் பேர்வழிகளுக்கும், கிரிமினல்களுக்கும் மாற்றாக, நல்லவர்கள் தேர்தலில் நிற்பதில்லையே? அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்?''

சென்னை பாரதிய வித்யாபவன் சிற்றரங்கில் தேர்தல் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் முன்னாள் தலைமை தேர்தல் கமிஷனர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடந்தபோதுதான் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார் ஒரு கல்லூரி மாணவர்.

உடனே, கல்யாணம் (மகாத்மாவின் உதவியாளர்) ''நேர்மையானவர்தானே உங்களுக்கு வேண்டும்? இதோ நந்தினி வாய்ஸ் தொண்டு நிறுவனத்தை செம்மையாக நடத்தி வரும், வெங்கட்ராமனை இந்தத் தேர்தலில் தென்சென்னை தொகுதியில் நிறுத்துகிறேன். அவருக்கு வோட்டளித்து வெற்றிபெறச் செய்யுங்கள்'' என்றார்.

''கல்யாணம் தலைவராக இருக்கும் தேசிய பாதுகாப்புக் கழகம் என்ற அமைப்பின் சார்பில் வேட்பாளரானதின் பின்னணி இதுதான்'' என்கிறார் சுமார் பதினொரு லட்சம் வாக்காளர்கள் கொண்ட தென்சென்னை தொகுதியில் தேங்காய் சின்னத்தில் போட்டியிடும் 'நந்தினி வாய்ஸ்' வெங்கட்ராமன்.

''பண பலம், தசைபலம் மிக்க பெரிய

அமைதியாய்



* 'நந்தினி வாய்ஸ்' வெங்கட்ராமன்

கட்சிகளை எப்படிச் சமாளிக்கப்போகிறீர்கள்?'' என்று கேட்டால்,

''ஒரு வேட்பாளர் அதிகபட்சம் இருபத்தைந்து லட்சம் ரூபாய் வரை செலவழிக்க அனுமதி உண்டு என்றாலும், என் பட்ஜெட் மூணே முக்கால் லட்சம்தான். தொகுதி முழுக்க மூணு லட்சம் துண்டுப்பிரசுரங்கள் வினியோகிக்கப் போகிறேன். தெரு முனைக் கூட்டங்கள், குடியிருப்பு நல சங்க கூட்டங்கள் என்று நிறைய ஏற்பாடு செய்து பேசுகிறேன். 'எனக்கு நீங்கள் அளிக்கும் வாக்கு, நேர்மைக்கு அளிக்கும் வாக்கு; லஞ்ச ஊழல், வன்முறைக்கு எதிரான வாக்கு' என்று நான் பேசுவதை மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறார்கள். ஏழை, எளிய

"பணம் கொடுத்து என்னை இழிவுபடுத்திவிட்டீர்கள். நான் உங்களுடன் பிரசாரத்துக்கு வரமாட்டேன்"



மக்கள் கூட ஐம்பது, நூறு என்று எனக்கு நன்கொடை அளித்து தேசத்தின் மீது தங்களுக்கு உள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறார்கள்.

ஈ-மெயில் மூலமாகவும், இந்த தேர்தலுக்கென்றே உருவாக்கியுள்ள www.votefortruth.in என்ற இணைய தளம் மூலமாகவும் படித்த மற்றும் மேல்தட்டு மக்களைச் சென்றடைவது; நேரடி விசிட்கள், நண்பர்கள், நலன் விரும்புபவர்களின்

ஒரு புரட்சி!

வாய்மொழி விளம்பரம் மூலமாகவும் தொகுதியின் அனைத்து தரப்பினரையும் சென்றடைவது - இதுதான் எனது தேர்தல் வியூகம்'' என்கிறார் வெங்கட்ராமன்.

''எனக்காக சில பார்வையற்ற வசதி இல்லாத இளைஞர்கள் தேர்தல் பிரசாரம் செய்ய முன்வந்தார்கள். நான் முழுக்க தேர்தல் பணியாற்றிய அவர்களை எவ்வளவோ வற்புறுத்தியும் நான் அளித்த நூறு ரூபாயை வாங்க மறுத்துவிட்டார்கள். ஒருவரது பாக்கெட்டில் வலுக்கட்டாயமாக பணத்தை வைத்துவிட்டேன். அவர் மறுநாள் காலை எனக்கு ஃபோன் செய்து, 'பணம் கொடுத்து என்னை இழிவுபடுத்திவிட்டீர்கள். நான் உங்களுடன் பிரசாரத்துக்கு வரமாட்டேன்' என்று சொன்னார். நான் நெகிழ்ந்துபோய் வருத்தம் தெரிவித்தேன். இதெல்லாம் எனக்குள் புதுத் தெம்பை அளித்துள்ளது. உற்சாகமாகவும், மிகுந்த ஈடுபாட்டுடனும், தேர்தல் பணியைச் செய்துகொண்டிருக்கிறேன். நல்லவர்கள் ஜெயிக்கவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பரவலாக இருப்பதைப் பார்க்கிறேன். தென் சென்னை தொகுதியில் அமைதியாய் ஒரு புரட்சி நடக்கும் என எதிர்பார்க்கிறேன்'' என்கிறார்.

- கௌதம்ராம்

* சரத்பாபு



தென்சென்னையில் போட்டியிடும் மற்றொரு சுயேச்சை வேட்பாளர் சரத்பாபு. சிறு வயதில் தாயுடன் வீடு வீடாகச் சென்று இட்லி விற்றவர். தமது கடுமையான உழைப்பினால் இன்று ஃபுட் கிங் (Food King) என்ற பன்னாட்டு ஹோட்டலை நடத்தி வரும் இவரைப் பற்றி கல்கி வாசகர்கள் ஏற்கெனவே அறிவீர்கள். இன்றும் தம் வீட்டைக் குடிசை பாணியிலேயே வைத்திருக்கிறார்.

குடிசையிலிருந்து ஒரு குரல்!

இந்தத் தேர்தலில் இவரது குரலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

- நளினி சம்பத்குமார்

கலக்க வருதுப்பா

கல்கி

கெட் ரெடி!
கெட் ரெடி!
கெட் ரெடி!

உங்க மாவட்டத்துல 'சூப்பர்' எதுங்க? 'வேஸ்ட்' எதுங்க?

- நீங்க ஜாலியா ரவுண்டடிக்கிற டூரிஸ்ட் ஸ்பாட் எது?
- பார்த்ததும் பரவசமா கும்பிடு போடற கோயில் எங்கெல்லாம் இருக்கு?
- அசத்தலா போட்டுகிட்டு அதிரடி பண்ண சேலை.ஜீன்ஸ் சுத்துவட்டாரத்துல எங்கே பெஸ்ட்டா கிடைக்கும்ங்க?
- உங்க மாவட்டத்தோட தலை போற பிரச்னை எதுங்க? எப்படித் தீர்க்கலாம்ன்னு நினைக்கறீங்க?
- மிஸ்டர் மாவட்டம் யாருங்க! என்ன காரணமுங்க?
- கலக்கலா கதை எழுதுவீங்களா? அசத்தலா கவிதை வருமா?
- லொள்ளு பண்ற 'ஜோக்ஸ்' கைவசம் இருக்கா?

-'ஆமா'ன்னா உடனே 'கல்கி'க்குத் தட்டி விடுங்க!



நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

ஆமாம்! உங்கள் மாவட்டத்துக்கு 'கல்கி' குழு, நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்?

ஆனா சில கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).

வர்றோம்...

- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்பு களுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- மாவட்டத்தின்...

பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்

என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 15.06.09

கலக்க வருதுப்பா கல்கி
உதகை மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

16

பாரதிபாலன்

உச்சி வெயில்! உடம்பெல்லாம் கசகசவென்று வியர்வைப் பிசுபிசுப்பு. தேனி பஸ் ஸ்டாண்டில் ஜனக்காடு அலைமோதிக் கொண்டிருந்தது. நிழலில் ஒதுங்கக் கூடத் தோது இல்லை. கவர்ன் மெண்டு ஆஸ்பத்திரியில் பேறுகாலம் முடித்து மகளை வீட்டுக்குக் கூப்பிட்டுப் போகிறாள். மகள் பச்சை மண்ணை நெஞ்சோடு சேர்த்து இறுக்கிக் கொண்டு நின்றிருந்தாள். இரண்டு மூன்று மூட்டை முடிச்சுகள். எந்த ஊருக்குப் போகிறாளோ என்னவோ! இதைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார் சின்னக்கருப்பன்.

''ஏம்பா இது எந்தூர் போறது?''

''போடி.''

''கம்பம், குமுளி காரெல்லாம்?''

''அந்தா... அந்தப் பச்ச பஸ் குமுளி போகும்.''

அங்கு ஓடினாள்.

''தம்பி ரெண்டு சிலம்பட்டி ஏறலாமா?''

''பின்னாடி பஸ்லெ கேளுமா.''

பின்னாடி பஸ்ஸுக்கு ஓடினாள்.

''சிலம்பட்டி ஏறட்டா?''

கண்டக்டர், ''பின்னாடி வருது'' என்று டிக்கெட் போடப் போய்விட்டான். இந்த அம்மா அல்லாடுவதைப் பார்த்து சின்னக்கருப்பன் கிட்டே வந்தார்.

''ஏம்மா எந்தூரு?''

''சிலம்பட்டியா, ஒரு பய ஏத்தமாட்டேங்குறான்.''

''பிரைவேட் பஸ் வரும்'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே கம்பம் போகும் பி.ஆர்.சி. பஸ் ஒன்று வேகமாக வந்து நின்றது. இந்த அம்மா மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு ஓடிற்று!

''எந்தூர்?''

''சிலம்பட்டி.''

''நிக்காதுனா... நவரும்மா'' அதற்குப் பக்கத்தில் ஒருவர், ''ஏன்யா நிக்காது? சாதா பஸ்தானே? எஸ்.எஸ்.எஸ். வண்டி மாதிரிலெ பேசுனா?'' என்றார். உடனே கண்டக்டருக்குக் கோபம். ''அது ஒரு பய ஊருன்னு பேசுறீகளா; தொரட்டுப் பிடிச்ச பயல்க. ஏத்துறது பெரிய காரியமா? ஒரு பய இங்க நிறுத்தும்பான். ஒரு பய அங்க நிறுத்தும்பான்...'' என்றார். சின்னக் கருப்பன் கண்டக்டரிடம் பேசினார். ஏதோ வாக்குவாதம் செய்தார். கடைசியில், ''சில்லறையை வெச்சுக்கிட்டு ஏறுங்க'' என்று வேண்டாவெறுப்பாகச் சொன்னார் கண்டக்டர். அந்தக் கலவரத்துக்குப் பின்பு ஊர் பேரைக் கேட்டாலே எல்லோருக்கும் ஒரு எரிச்சல்!

''சிலம்பட்டினா இந்தக் காருகாரப் பயல்களுக்குப் பச்ச நாவி. வள்ளு வள்ளுண்டுதேன் விழுறாங்க...''

''ஊர் வாகும் அப்படித்தாம்மா இருக்கு'' என்றது பின் சீட்டில் இருந்து ஒரு குரல்.

''வாஸ்தவம்தேன்யா.''

எங்க நம்மமூர்க்காரங்க ஏறுகனாகளேன்னு கிழவி கழுத்தை இங்குமங்கும் திருப்பி லாவியது. சின்னக் கருப்பன் பின்னாடி சீட்டில் ஒக்காந்து

''ஆண்டவன் ஒருத்தன் மேலே இருக்கான். கணக்குப் போட்டுத்தான் காரியத்த நடத்துவான்னு நம்பினது இப்படி குருட்டாம் போக்குல நடக்குது.''



காற்று வரும் பருவம்!

இருந்தார். ''உன்னைத்தான்யா தேடுனேன். இங்க எடம் இருக்கே. இப்படி வந்து ஒக்காரப்படாது'' என்றது. தான் யார் என்று தெரியாமல் கிழவி பக்கத்தில் ஒக்காரச் சொல்கிறது என்று நினைத்தார். திரும்பவும், ''நானும் ஒங்க ஊருதான். வடக்குத் தெரு'' என்று அந்த வடக்குத் தெருவை அழுத்திச் சொன்னார். ''அதான் சொன்னீலய்யா'' என்று நகண்டு ஒக்காந்து இடம்கொடுத்தாள். கிழவி காகிதப் பொட்டலத்தைப் பிரித்து, ''இந்தாய்யா இந்தப் பலாப்பழத்தைத் தின்னு'' என்று நான்கு பலாச்சுளைகளை எடுத்துக் கொடுத்தது!''

''எங்க வீட்டுக் காரரைத் தெரியுமா?'' என்றது கிழவி.

''யாரதுன்னு தெரியாதே...''

''அடியே ஒங்கையா பேரச் சொல்லுடீ'' என்று மகள் பக்கம் திரும்பினது.

''பண்டுதம் பிள்ளை''

''அவரா!'' என்று மலர்ந்தார் சின்னக் கருப்பன். ''அதுக்குக் கிழக்காலதேன் எங்க வயக்காடு இருக்கு'' என்றார். ''அந்தப் புங்க மரத்துக்கு மேக்க அதுதாவே'' என்றது கிழவி. ''ஆமா!'' என்றார் ஆச்சரியத்தோடு.

''உங்கப்பன்தான கரண்டுலெ விழுந்து செத்தது. அப்ப நீங்க எல்லாம் கைப்புள்ளயா இருந்திருப்பீங்க. எங்க வூட்டுலெதேன் வெச்சுப் பார்த்தது பத்தொன்பது நான். அதுக்குப் பெறவுதானே செத்தாரு. நல்ல மனுஷன். அப்பேர்ப்பட்ட மனு

ஷரை எல்லாம்தேன் சாமி தனக்கு தொணைக்குக் கூப்பிட்டு வெச்சுக்கிடுது. ஓடைக்குப் பக்கத்துலெ இருந்துச்சே ஒரு ஒட்டுக்காணி. அதத்தேன் ஒங்கப்பன் எங்க கொல தெய்வத்துக்குன்னு விட்டது. நாங்க கும்புடுறதும் கருப்பசாமிதானப்பா. சங்கிலி கருப்பன். அந்தக் கோயிலு இருக்கிற எடம் உங்க வூட்டுக் காணிதான்.'' சின்னக் கருப்பனுக்கு உள்காய்ச்சலாகச் சூடு பரவிற்று.

''என்னவோ... அப்படியெல்லாம் இருந்து போட்டுத்தேன் இன்னைக்கு ஒண்ணுக்கொண்ணு முட்டிக்கிட்டுக் கெடக்குதுக.

எம் மவன் கடைசி ஆளு இருக்கானே கொன்னவாயன். அவன வேண்டா வெறுப்பாத்தேன் பெத்தேன். அவனத் தூக்கிக்கிட்டு கொடிக்காலுக்குப் போவேன். அப்ப ஒச்சாயி ஒச்யினு ஒருத்தி இருந்தா. ஒங்க ஆளுகதேன். தெரியுமா? இப்ப அவ இல்ல. மண்டையப் போட்டுட்டா. வயல் வரப்புலெ புல்லறுத்துக்கிட்டு இருப்பா. அவளுக்கும் இத்தத் தாண்டி ஒரு புள்ள. நா பாட்டுக்கு மரத்துலெ தொட்டிலக் கட்டிப் போட்டுட்டுப் போயிடுவேன். வீல் வீல்னு அலறும். நான் ஜோலி மும்முரத்துலே இருந்திடுவேன். அந்த ஒச்சாயி பொறுக்கமாட்டா. தூக்கி மடியிலெ போட்டுப் பால் கொடுப்பா. நா என்னடா பயலோட சத்தத்தக் காணலெயேண்டு ஓடியாருவேன். 'என்னாடி இது'ன்னா 'ஒங்க மனசு கெட்டி ஆச்சி; அப்படி எனக்கு மனச அவன் கொடுக்கலையே'ன்னு வானத்தைக் காட்டுவா. அப்பேர்க்கொத்த ஆளுக எல்லாம் போயி சேந்தாச்சு. இப்ப இருக்குறதுகளுக்கு கம்பும், கத்தியும் தேன் தெரியுது'' என்று அந்தக் கிழவி இழுத்துப் பெருமூச்சு விட்டது. கிழவியின் மகள் முகம் கடுகடுவென்று பொரிந்து கொண்டிருந்தது. ஆத்தாக்காரி என்னத்துக்கு இப்படிச் சளசளன்னு பேசுறான்னு எரிச்சல்.

சின்னக்கருப்பனுக்கு ஏதோ யோசனை. வெளியே பார்த்தார். பஸ் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அவர் மனம் எங்கோ தாவிற்று. அந்த அம்மா சொல்வது நிசம்தான். இதுபோல் எத்தனையோ கேட்டிருக்கிறார். பார்த்தும் இருக்கிறார். எல்லாம் காதோடு சரி; கண்ணோடு சரி. புத்திக்குள்ளும் மனசுக்குள்ளும் ஒன்று கூட புகவில்லை. அது ஏன்? அவர் யோசித்தார். யோசிக்க யோசிக்கத் தெளிவு கிளம்பிற்று.

பெரியகுளம் வக்கீலைப் பார்க்க கோழி கூப்பிடக் கிளம்பினார். இப்போது உச்சிப் பொழுதைக் கடந்து விட்டது. எவன் எவன் வீட்டு வாசலிலோ கால் கடுக்க நின்றதுதான் மிச்சம். வக்கீல், போலீஸ்... போதாது என்று போடி, மீனாட்சிபுரம், மதுரை, வத்தலகுண்டு என்று அலைந்ததுதான் மிச்சம். அங்கு ஜாதிக்காரர்கள், வசதியாக உள்ளவர்கள் எல்லோரையும் பக்கத்தில் போய்ப் பார்க்கின்றபோதுதான் அவர்களின் உருவம் மாறுபட்டுத் தெரிகிறது. பல் நீளம். கண்ணில் மிதக்கும் கொடூரம். நாக்கில் ஊறும் விஷம். தலையில் இருக்கும் கொம்பு. கையில் இருக்கும் அரிப்பு. சின்னக்கருப்பன் கண்ணை மூடிக் கொண்டார்.

கோவிந்துதான் முதலில் அவர்களைப் பார்த்தான். எழுந்து நின்றான். அவர் கோவிந்துவின் கையைப் பிடித்துக் கொண்டார். அந்தப் பிடியில் பிரியம் பிசுபிசுத்தது. கோவிந்து அவர்களை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் போனான். அப்பா சுவரில் சாய்ந்து உட்

கார்ந்து இருந்தார். கோச்சடைக்காரர்களைக் கண்டதும் எழுந்துகொண்டார். ஒன்றும் பேசத் தோன்றாமல் முகம் கோணிற்று. அவர் அப்பா பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்.

''இருங்க ஜமுக்காளம் விரிக்கிறேன்.''

''இருக்கட்டும் தம்பி.''

அம்மா எட்டிப் பார்த்தாள். அதற்குள் கோச்சடைக்கார அம்மா ஒரே எட்டில் அம்மாவைத் தொட்டுவிட்டது. தோளைப் பிடித்துக்கொண்டு குலுங்கிற்று!

''எங்களுக்கு நேத்து ராத்திரித்தேன் தெரியும்.''

''ம்.''

''நேத்து உங்க மகளைப் பார்க்கலாம்னு திருவேடகம் போனார். அது சொல்லித்தேன் தெரியும். ஒண்ணும் தெரியாமப் போச்சே'' என்று அந்த அம்மாள் குரல் கசிந்து கண்ணீராய் ஓடிற்று.

''..............''

''பேப்பர்லெ போட்டிருந்துச்சாமே; நாங்களும் பேப்பர் வாங்குது. எங்க கண்ணுலெ அது படலெ. பட்டிருந்தாக் கூட ஓடியாந்திருப்போம்.''

அம்மா குறுக்கே பேசவில்லை. கேட்டுக்கொண்டே இருந்தாள். கண் மட்டும் கசிந்துகொண்டிருந்தது.

''ஆண்டவன் ஒருத்தன் மேலே இருக்கான். கணக்குப் போட்டுத்தான் காரியத்தை நடத்துவான்னு நம்பினது. இப்படி குருட்டாம்போக்குலெ நடக்குது. இனி எத நம்புறது..?'' வந்தவர் வேட்டி நுனியில் மூக்கையும் கண்ணையும் சேர்த்துத் துடைத்துக்கொண்டார்.

''..................''

''இவரு வந்து இதைச் சொன்னதிலெ இருந்து அவ அழுது கொட்டிப்பிட்டா. நேத்து இருந்து கஞ்சித் தண்ணி இல்லெ. ஏன்டா சொன்னம்னு ஆயிடுச்சு. சொல்லாம இருக்கவும் முடியலெ. சின்னஞ் சிறுசுக. ஒடனே மனசுலெ கூடு கட்டிடுது.''

''ப்சு.''

''ஊரெல்லாம் வேற சொல்லிப்பிட்டம். இன்னாருதேன் சம்பந்தக்காரருனு. எந்தக் கண்ணு கொள்ளிக்கண்ணோ!''

கோவிந்துக்கு என்ன பேசுவது என்று தெரியாமல் இருந்தான். ஏதோ கதையில் நடப்பது போலத்தான் நடந்துகொண்டிருக்கிறது. அதைத் தவிர ஒன்றும் நினைக்க முடியவில்லை. அவர்கள் போட்டது பீடிகையா? இல்லை உள்ளதைச் சொல்கிறார்களா? எதுவும் மனத்தில்





'கருத்தம்மா' ராஜஸ்ரீயை யாராலும் மறக்க முடியாது. தன் உயிர்ப்பான நடிப்பால் எல்லோர் மனத்தையும் அசைத்துப் பார்த்தவர். தற்போது தன் தங்கையை கோலிவுட்டில் இறக்கி விட்டிருக்கிறார். பெயர் மிதுனா. இவர் ஏற்கெனவே மாமதுரை படத்தில் கதாநாயகியாக நடித்தவர். ''எனக்கு சினிமாவுல பெரிசா சாதிக்கணும்னு ஆசை இல்லை. ஆனா, என் அக்கா மாதிரி என் பெயரை எல்லோர் மனசுலயும் பதிய வைக்கணும். வெரைட்டியான ரோலில் நடிக்கணும்'' என்கிறார். வைரம் மூவிஸ் தயாரிக்கும் 'புதிய பயணம்' படத்தில் இவருக்குப் பாடகி கேரக்டர்!

- சத்யா

உறைக்கவில்லை. அப்பாவும் அப்படித் தான் திகைத்துப் போய் இருந்தார். 'எனக்கு ஒன்னுமே தோணலே. நீங்க சொல்றீக கேட்டுக்கிட்டிருக்கேன்' என்பது மாதிரித் தான் இருந்தார். அம்மா மனசுதான் ஏதோ சொல்லித் துடிக்குறாப்புலெ இருக்கு... 'ஹூம்' என்ற வருத்த முனகலைத் தவிர ஒன்னும் சொல்வதில்லை!

''ஒடம்புகளப் பாத்துக்குங்க. என்ன செய்யுறது? ரெண்டு பேரும் பாதி உசுரா இருக்கீங்க. கவலைப்படாதீங்கனு சொல்லமுடியாது. அதையே நெனச்சு ஒடம்பக் கெடுத்துக்க வேண்டாம். நாம ஒன்னு நெனக்கிறோம். அவன் ஒன்னு நெனக்கிறான். அம்புட்டுத்தேன் மனுஷப் பய வாழ்க்கை. நீங்க பெரியவங்க. உங் களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. ஏதோ மனசு தாங்காம சொல்றோம். அப்படிச் சொல்லும்போது எங்க துக்க மும் கொஞ்சம் கொறையுறாப்புலெ தெரியுது...''

காப்பி சாப்பிட்டதும் கிளம்பினார்கள்.

''சாப்பிட்டுப் போவலாம்.''

''அந்த ஆண்டவன் புத்தி ஆடாம இருந்திருந்தா, இப்ப கையை நனைச் சிருப்போம். தையிலெதான வெச்சுக் கிறதா பேசுனது...''

அவர்கள் எழுந்து கொள்ளவும், அப்பா உள் அறைக்குப் போய், மஞ்சள் பையில் சுருட்டி வைத்திருந்த அந்தப் பெண்ணின் ஜாதகக் குறிப்பு நோட்டை எடுத்து வந்து, அவர்களிடம் நீட்டினார். அவர் அதை வாங்கவில்லை.

''இருக்கட்டும்.''

அப்பா திகைப்புடன் பார்த்தார்.

''வாரோம்னு சொல்லிக்காம போக ணும்பாங்க. கடவுளுக்குக் கருணை இருந்து, மனுஷங்களுக்கு மனசு விரிஞ்சு இருந்தா மறுபடியும் பாக்கலாம். எல்லாம் நம்ம கையிலா இருக்கு? யாராருக்கு எங்கனு அப்பவே போட்டிருப்பான் அவன்...''

படியிறங்கி விட்டார்கள். எப்பேர்ப் பட்ட வார்த்தை. நாகரிகமாகச் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டார்.

(காற்று வீசும்)

மரியாதை





பெற்றோர்கள் தங்கள் கனவுகளை தம் பிள்ளைகளின் மீது சுமத்தாமல், அவர்களின் விருப்பத்துக்குச் சுதந்திரம் அளித்தால் அவர்களின் வாழ்க்கை மட்டுமல்லாது பெற்றவர்களின் வாழ்க்கையும் நல்லபடியே அமையும் என்பதே படத்தின் கதை.

இதில் விஜயகாந்துக்கு இரட்டை வேடங்கள். ஜோடியாக மீனாவும், மீரா ஜாஸ்மினும். ராஜாவாக வரும் விஜயகாந்தைக் காதலித்து அவரை ஏமாற்றி, சொத்து முழுவதையும் அபகரித்துக் கொள்கிறார் மீனா. மீனாவின் தோழி, ரேடியோ ஜாக்கியாக இருக்கும் மீரா ஜாஸ்மின் ராஜாவோடு இணைந்து, இழந்த சொத்தை எப்படி மீட்டெடுக்கிறார் என்பதை, தன் வழக்கமான பார்முலாவில் சொல்லியிருக்கிறார் இயக்குநர் விக்ரமன்.

அப்பா விஜயகாந்துக்கு ஜோடியாக வரும் அம்பிகா தான் சமைத்த அல்வாவைச் சாப்பிடக் கொடுக்க, அதை வைத்துக்கொண்டு மொத்தக் குடும்பமும் விளையாடுவது ஜாலி பட்டாசு. வசனங்களின் நறுக். அதில் ஒரு துணுக். ''வாய்க்கு ருசியா சாப்பிடணும்னா சமைச்சுப் போட ஒரு வேலைக்காரி போதும்.''

பின்னணியில் வரும் 'ர்ரா... ர்ரா...' இசை பழைய படங்களை ஞாபகமூட்டுகிறது, தவிர்த்திருக்கலாம். குத்துப்பாட்டு, ரெட்டை அர்த்த வசனம் எதுவும் இல்லாமல் குடும்பத்தோடு சேர்ந்து மகிழ கோடைக்கு ஏற்ற படமான மரியாதையில் மணம் அதிகம்!

- கிராபியென் ப்ளாக்

தஞ்சை பரத்வாஜ்

10.05.09 முதல்

மேஷம்: நற்பலன் நிறைந்த வாரம். சுபகாரியப் பேச்சுவார்த்தைகள் பலிதமாகும். கடன் சுமையில் இருந்து விடுதலை கிட்டும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். வீடு, மனை வாங்க முயற்சிக்கவும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நற்பலன் அதிகரிக்கும்.

ரிஷபம்: வேலையில் மாற்றம் ஏற்படும். சிலருக்கு வீடு மாற்றம் செய்ய வேண்டிய கட்டாயம் உண்டாகும். புண்ணிய ஸ்தலம் சென்று குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் மன மகிழ்ச்சி கிட்டும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். சனி / குரு வழிபட்டு வர தீயவை விலகி நற்பலன் அதிகரிக்கும்.

மிதுனம்: குடும்பவாழ்வில் அனுசரணை தேவை. வாகனங்களில் செல்லும் போது உஷார். யாரிடமும் வாக்குவாதம் தவிர்க்கவும். திருமணக் காரியம் கூடிவரும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வேலையில் முன்னேற்றம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். வீடு மாற்றம் ஏற்படும். நீண்டகால வழக்கு வெற்றி பெறும். ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கடகம்: மனக் குழப்பம் நிறைந்து இருக்கும். எதிர்பார்த்து வந்த காரியங்கள் சற்று தாமதம் ஆகும். திருமண முயற்சிகள் தாமதம் ஆகும். வேலைப்பளு அதிகரிக்கும். கடன் சுமை கூடும். தேவை இல்லாத பிரசனைகள் வந்து சேரும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

சிம்மம்: சிக்கல்கள் விலகி மனத்துக்குத் தெம்பும் தைரியமும் அதிகரிக்கும். திருமணப் பேச்சுவார்த்தை பலிதமாகும். அயல்நாடு சென்று வேலை பார்க்கக்கூடிய யோகம் சித்திக்கும். உற்றார் உறவினர்களால் இருந்து வந்த தொல்லைகள் விலகும். சனி வழிபாடு செய்து வர நற்பலன் அதிகரிக்கும்.

கன்னி: உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சுபகாரியம் கைகூடும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். தேவை இல்லாத கடன் சுமை ஏற்படும். அநாவசியமான செலவுகள் ஏற்படும். கடவுள் மீது அதிக நம்பிக்கை வைக்கவும். குரு / சனி / ராகு / கேது வழிபாடு நற்பலன் தரும்.

துலாம்: மன மகிழ்ச்சி ஏற்படும். எண்ணிய எண்ணங்கள் யாவும் ஈடேறும். நீண்டகால வழக்கு முடிவுக்கு வரும். நண்பர் / உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். கடன் சுமை தீரும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலன் அதிகரிக்கும்.

விருச்சிகம்: வேலையில் இடமாற்றம் ஏற்படும். ஊதிய உயர்வு ஏற்படும். சிலருக்கு மனை வாங்கும் யோகம் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தேர்வில் நல்ல மதிப்பெண்கள் கிட்டும். கடன் தொல்லை தீரும். குரு / சனி வழிபாடு நற்பலனை அதிரிக்கும்.

தனுசு: தீராத நோயும் தீர்ந்துவிடும்.

மனக் குழப்பம் தீரும். உடல் ஆரோக்கியம் சீராகும். தேர்வில் இருந்த பயம் விலகி நல்ல மதிப்பெண்கள் கிட்டும். திருமண முயற்சி கைகூடும். குடும்ப வாழ்வில் இருந்து வந்த மன சஞ்சலம் தீரும். ராகு / கேது / குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

மகரம்: மனத்துக்குத் தெளிவான வாரம்.



நடக்குமென்பார்; நடக்கும்!

16.05.09 வரை

எண்ணங்கள் நிறைவேறும். திருமணத் தடை விலகும். கடல் கடந்த மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். கடன் சுமையிலிருந்து விடுதலை கிட்டும். வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும். கெட்ட பெயர் விலகி நல்ல பெயர் எடுப்பீர்கள். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நற்பலன் சித்திக்கும்.

கும்பம்: கடன் தொல்லை தீரும். சுப காரியப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் ஏற்படும். வராத கடன் நிலுவைகள் வசூலாகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். செலவுகள் சுபமானதாக இருக்கும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். சனி / குரு வழிபாடு செய்துவர நற்பலன் சித்திக்கும்.

மீனம்: பத்திரிக்கைகளில் பெயர் வரும். நல்ல காரியம் கூடிவரும். வேலையில் உயர்வு ஏற்படும். பூர்வீக வழியில் ஆதாயம் உண்டாகும். நண்பர் / உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். கடன் சுமை குறையும். ஆடம்பரப் பொருள் வாங்குவீர்கள். நீண்ட தூரப் பிரயாணம் செய்வீர்கள். செலவுகள் சுபமானதாக இருக்கும். குழந்தைகள் மூலம் மன சந்தோஷம் கிட்டும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். குடும்ப வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். ராகு / கேது வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

தேர்தலுக்குப் பின்னால் இலவசமாக தலைக்கு இரண்டு கிராமங்களைத் தருவதாகச் சொல்லி வோட்டு வாங்கினால் பாவமில்லை; ஆனால், அதே வோட்டை பணம் கொடுத்து வாங்கக் கூடாதென்றால் நமது வேட்பாளர்களுக்கு எப்படிச் சமாளிப்பது என்றா தெரியாது? தேர்தல் கமிஷனுக்கு டிமிக்கிக் கொடுக்க இதோ சில பலே பாண்டியர்கள் சொல்லும் காரணங்கள்.

கிண்டல் காலனி

பலே பாண்டியர்கள்!



- "எங்க அப்பா செத்துட்டாரு. இறுதி சடங்கைச் செய்யக்கூட பணமில்லைன்னு இவரு நாலு வருஷத்துக்கு முன்னாடி பணம் கேட்டாரு. அப்போ தரமுடியலையேன்னு வருத்தப்பட்டேன். இப்பதான் சமயம் கிடைச்சது. ஈமக்கிரியை செய்ய ரெண்டாயிரம் கொடுத்ததை வோட்டு வாங்கக் கொடுத்ததாகச் சொல்லும் தேர்தல் கமிஷனுக்கு நெஞ்சில் ஈரமில்லை."

- "பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னே நான் கட்சித் தொண்டனா இருந்தபோது டீ சாப்பிட காசில்லாம இந்த அம்மா கிட்டே கடன் வாங்கினேன். இப்போ நானும் வளர்ந்து, வாங்கின கடனும் வட்டியோட வளர்ந்து ஆயிரக்கணக்கா திருப்ப வேண்டியதா போச்சு!"

- "இந்தத் தொகுதியிலேதான் நான் பிறந்து வளர்ந்ததெல்லாம். சின்ன வயசிலே இந்தத் தொகுதியிலே கிரிக்கெட் ஆடி எல்லார் வீட்டு கண்ணாடியையும் உடைச்சிருக்கேன். பல பேர் வீட்டு மாங்காயைக் கல்லெடுத்து எறிஞ்ச சாப்பிட்டிருக்கேன். பசங்களோட சண்டை போட்டு மண்டையை உடைச்சிருக்கேன். எல்லாத்துக்கும் பிராயச்சித்தம் செய்யணும்னு நஷ்டஈடா நான் பணம் தந்ததை கமிஷன் தெளிவா புரிஞ்சுகிட்டா நல்லது."



- "எனக்கு இந்தத் தொகுதியிலே நிக்க டிக்கெட் கிடைச்சா லட்சம் பேருக்கு மூக்குத்தியும் வாட்சும் வாங்கித் தர்றதா மூக்காத்தம்மனுக்கு நேர்ந்துக்கிட்டேன். அத்தனை மூக்குத்தியும் வாட்சும் ஆர்டர் கொடுத்துக் கிடைக்காததாலே, தேர்தலுக்கு அப்புறம் நேர்த்திக் கடனைக் கழிக்கலாம்னு இருந்தேன். திடீர்னு ஆத்தா



பேரனோட பர்த்டே கொண்டாட்டம்னு வந்ததாலே ஒவ்வொரு ஃபங்ஷனுக்கும் பாட்ச் பாட்ச்சா அழைச்சு பிரியாணியோட விருந்து வைச்சது என்னவோ உண்மைதான். வேட்பாளர்கள் வீட்டு விசேஷங்கள் கூட தேர்தல் சமயத்தில் வரக்கூடாது என்று கமிஷன் நினைப்பது நியாயமில்லை.''

● ''இந்தத் தொகுதியிலே வோட்டு கேட்க வந்தபோதுதான் தெரிஞ்சது. இந்த வீட்டுப் பொண்ணுக்கு போன வருஷம் கல்யாணமாச்சுன்னு! 'ஏன் எனக்குப் பத்திரிகை வைக்கலே'ன்னு கோவிச்சுக்கிட்டேன். அதுக்கு அவங்க 'உங்களை முன்னே பின்னே பழக்கமில்லையே'ன்னாங்க. 'அதனாலென்ன இப்பத்தான் பழகிட்டமே'ன்னு சொல்லி கல்யாணப் பத்திரிகையைக் கொடுக்கச் சொல்லி மொய் எழுதினேன். மெய்யாலுமே நான் கொடுத்தது மூவாயிரம் மொய்ப் பணம் தான்!''

இந்தத் தொகுதியிலே நிக்க டிக்கெட் கிடைச்சா லட்சம் பேருக்கு மூக்குத்தியும், வாட்சும் வாங்கித் தர்றதா மூக்காத்தம்மனுக்கு வேண்டிக்கிட்டேன்.




கனவுலே வந்து 'நேர்த்திக் கடனை பணமா கொடுத்துடடா பேமானி... இல்லேன்னா டெபாஸிட்டே ஊத்திட்டுப் பூடும்'னு சொல்லிச்சி. நேர்த்திக் கடனை தீர்க்கக்கூட ஒரு வேட்பாளருக்கு உரிமையில்லையா?''

● ''வரிசையா இந்தத் தேர்தல் சமயமா பாத்து எங்க அப்பாவோட எண்பதாம் கல்யாணம், என்னோட அறுபதாம் கல்யாணம், என் பொண்ணோட சீமந்தம், பையன் வயித்துப்



அகிலா கார்த்திகேயன்



ப்ளாக் அன்ட் வொயிட் கதைகள்-5

காவிரி நதி ஒரு புதுச் சுழிப்புடன் ஓடிக் கொண்டிருந்தது. பெயர் தெரியாத நீர்த் தாவரங்கள் அடர்பச்சை நிறத்தில் நதியின் போக்கோடு போய்க் கொண்டிருந்தன. சூரியன் இன்னும் எட்டிப் பார்க்காததால் வானம் கருப்பிலிருந்து வெளுப்புக்கு மாறும் உத்தேசத்துக்கு வர யோசித்துக் கொண்டிருந்தது.

'பழைய கோட்டை பட்டக்காரர் ஜமீன் எல்லை முடிவு' என்று அறிவித்த பெயர்க் கல்லைக் கடந்து, ஆறு நோக்கிப் போன பாதையில் கங்காணியார் அய்யாவு பிள்ளை வேக நடை போட்டபடி நடந்தார். வானத்துக் கறுப்பும், அவரின் தேகக் கறுப்பும் ஒரே மாதிரி இருந்தன. தோளில் சிறு மூட்டையை ஏந்தியபடி வந்தார்.

படித்துறை வந்ததும் நின்றார். தோளிலிருந்த மூட்டையைக் கையில் ஏந்தியபடி நீரில் இறங்கினார். சலனமற்றவராய் மூட்டையைப் பிரித்தார்.

உள்ளே இருந்தது அஸ்திக் கலசம்.

அதை ஒரு முறை பார்த்துவிட்டு 'ராஜா... அடேய் ராஜா...' என்று முணுமுணுப்பாய்ச் சொல்லிவிட்டு, அஸ்திக் கலசத்தை ஆற்றில் கரைத்தார்.

நீரோடு நீராகிப் போனது.

அய்யாவு பிள்ளை கரையில் மடங்கி அமர்ந்தார். கரைக்க முடியாத பாரம் இன்னும் அவர் மனத்தை அடைத்தபடியே இருந்தது.

''**கா**லை அசைக்காதீங்க கங்காணியாரே...'' என்றபடி ராஜவீரன், கங்காணியார் அய்யாவு பிள்ளையின் கால்களில் ஏறியிருந்த நெருஞ்சி முள்ளைப் பக்குவமாய்ப் பிடுங்கினான்.


வேலிப் படல் ஓரம் இருந்த பச்சிலையில் இரண்டைப் பறித்து, உள்ளங்கையில் கசக்கி நாலு சொட்டு விட்டான். ''இப்ப தேவலையா?'' என்றான்.

''ம்ம்... அது கெடக்குது ராஜா... காலங்கார்த்தாலே நான் எதுக்கு உன்னைப் பார்க்க வந்தேன்னா... நாம ரெண்டு பேரும் அய்யனாரப்பன் கோயிலுக்குப் போய் வரணும்னு நம்ம சிற்றரசர் செய்தி விட்டிருக்கார்!''

''எதுக்கு?''

''அங்க கழுமரம் இருக்கில்ல, அது மாதிரி நம்ம புதுப்பாளையத்துக்கும் ஒண்ணு வேணும்னு சிற்றரசர் விரும்புறார்.''

''இருக்கிற கழுமரத்தைக் கூட அழிக்கச்



கழுமரத்து நிழல்!

ஸ்ரீநிவாஸ் பிரபு

''இல்லீங்க கங்காணியாரே... சாயங்காலம் சிலம்பம் போட்டி இருக்கு. வாத்தியார் வரச் சொல்லியிருக்கார். நூறு ரூபாய் பந்தயம்.''

''அப்படியா?''

''ஆமாம் அதோட நாளைக்குப் புது வருஷம் பொறக்குது. காலையில் கோழி கூப்பிட கௌம்பிடலாம்...'' என்றான்.

அய்யாவு பிள்ளை அதற்கு சம்மதித்துவிட்டுக் கிளம்ப...

ராஜவீரன் சிலம்பத்தை எடுத்துப் பிடித்து காற்றில் கோலம் போடத் துவங்கினான். 'விர் விர்' என்று சிலம்பம் காற்றைக் கிழித்து, ஒரு சீரான தாள லயத்துடன் ஒலித்தது.

ராஜவீரனுக்கு வயது இருபத்

சொல்லி பிரிட்டிஷ் சர்க்கார் ஜமீனுக்கு உத்தரவு போட்டிருக்கிறதா சொன்னீங்க.''

''ஆமாம். ஆனா சித்தரசர் நிறுவணும்னு நினைச்சுட்டார்.''

''நான் எதுக்கு?''

''நீ நேர்ல பார்த்ததை நல்லா வரைவியே... அதான் அதைப் படமா போட்டுத் தா... ஆசாரிக்கு உதவும். ரெண்டு மணி நேரத்துல வரேன். தயாரா இரு.''

ராஜவீரன் யோசித்தான்.

''என்ன ராஜா யோசிக்கிறே?''

தைந்துதான் ஆகிறது. புதுப்பாளையம் ஊரிலேயே இவனுக்குத்தான் நல்ல திடகாத்திரமான உடம்பு. ஒற்றை வேட்டி கட்டி அதையும் மடித்து பஞ்சகச்ச முடிச்சு போட்டு அவன் சிலம்பம் சுற்றும் அழகை இன்று முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

ஆற்றிலிருந்து செம்புக் குடத்தில் நீர் எடுத்து வந்த மாமன் மகள் விஜயராணி, தன்னை மறந்து நின்றாள்.

''மாமா...'' ஓங்கிக் குரல் கொடுத்தாள்.

ராஜவீரன் கவனம் பிசகாதிருக்கவும் குடத்திலிருந்து ஒரு கை நீர் அள்ளி அவன் மீது தெளித்துவிட்டு கொலுசுகள் சிணுங்க ஓடினாள்.

''ஓடாதே நில்லுடி...'' அவளை விரட்டி, குடத்தைப் பிடித்து நிறுத்தினான். ''ஏண்டி என் மேலே தண்ணி தெளிச்சே?''

''பின்னே நான் வந்து நின்னு எத்தனை நேரமாச்சு. நீங்க திரும்பவே இல்லை. உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசலாம்னு வந்தேன்.''

''என்ன முக்கியமான விஷயம்?''

விஜயராணி சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, தாவணி முனையை வாயில் கடித்தபடி, ''என்னை எப்ப கல்யாணம் செஞ்சுக்கப் போறே?'' என்று கேட்டு, பதிலுக்கு நிற்காமல், அவன் பிடியி லிருந்து விலகி, ஓடினாள். ராஜவீரன் விரல்களால் பற்ற, அவள் சூடியிருந்த தாழம்பூ மட்டும் கையோடு வந்தது. சிரித்துக் கொண்டே அதன் வாசனையை நுகர்ந்தான்.

ராஜவீரனும் அய்யாவு பிள்ளையும் அந்தக் கழுமரத்தைப் பார்த்தார்கள். நன்கு பருத்த பனைமரத்தால் செதுக்கப்பட்டி ருந்தது. பனைமரத்து செதில்கள் யாவும் சீராக வெட்டப்பட்டு இருந்தன. ஆயினும் அதன் சிலாம்புப் பிசிறுகள் நீட்டிக் கொண்டிருந்தன. அடியில் பருத்த மரம் மேலே போகப்போக கூராகிக் கொண்டே போனது. கழுவப்பட்டு எண்ணெய் தடவப்பட்டிருந்தால் மினுமினுப்பு கூடி இருந்தது.

'ஆயிரத்து தொள்ளாயிரம் - புது வருடம் - திங்கட்கிழமை' என்று கோயில் சுவரில் எழுதப்பட்டிருந்தது.

''இந்தப்புறம் வா ராஜா... கழுமர நிழல் மேல படக் கூடாது.''

''ஏன்?''

''அட காரணம் தெரியாதப்பா... பெரிய வங்க சொல்லுவாங்க... வான்னா வாயேன்!''

ராஜவீரன் கழுமரத்தைக் கண்களால் அளந்து விட்டு, கோயில் பிராகாரத்தில் வந்து அமர்ந்தான்.

''பார்த்துட்டியா?''



''ம்ம்... அய்யனாரப்பன் தான் காப்பாத்தணும்!''

''என்ன சொல்றே?''

''எதைச் சொல்ல கங்காணியாரே! எங்கய்யா பூமிமேல வெச்சுட்டுப் போன கடனைச் சொல்றதா? கட்டிக் கொடுத்த அக்காவுக்குப் போடறதா ஒத்துகிட்ட பத்து பவுன் நகை இருக்கே அதைச் சொல்றதா? ஆசை இருந்தும் காசில்லாம ராணியைப் போய் பொண்ணு கேக்காம இருக்கேனே அதைச் சொல்றதா? எதைச் சொல்ல...''

''எல்லாத்துக்கும் வழி பொறக்கும் நீ விசனப்படாதே.''

''எங்க கங்காணியாரே... என்னோட தேவை மொத்தம் ஏழாயிரம் ரூபாய். ஒரு காசா ரெண்டு காசா... அய்யனாரப்பன்

தான் கண்ணைத் தொறந்து பார்க்கணும்.''

ராஜவீரன் அய்யனாரப்பனை நினைத்து கண்களை இறுக மூடி பெருமூச்சு விட்டான்.

அடுத்த இரண்டாவது வாரம் கங்காணியார் அய்யாவு பிள்ளையின் வீட்டுக் கொல்லையில் பரம ரகசியமாய் கழுமரம் தயாரானது.

அஷ்டமி, நவமி முடிந்த மறுநாள் பின் இரவில் அய்யாவு பிள்ளையின் வீட்டுக்கு சிற்றரசர் செங்கதிர்வேலனும், தளபதி நல்லப்பனும் வந்து பார்த்தார்கள். அவர்களுக்கு பரம திருப்தி வந்தது.

''இன்றுள்ள சட்டத்தின் படி இதை புதிதாய் நிறுவிட முடியாது. தெரிந்தால் ஜமீனின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். எனவே!''

''எனவே..?''

''இதைப் படலூரின் மேற்குக் கரையில் காவேரி ஆற்று மண்டபத்துக்கு அருகில் நிர்மாணித்துவிடலாம். கல்மண்டபம் புனரமைத்தபோது இருந்தது என்று பரப்பி விடலாம்.''

''நல்ல யோசனை'' சிற்றரசர் ஆமோதித்தார்.

அவ்வாறே அடுத்த மூன்றாவது வாரம் யாரும் அறியா வண்ணம் ஆற்று மண்டபமும், கழுமரமும் நிர்மாணிக்கப்பட்டன. உயிர்பலி ஆயுத வகை என்பதால் பக்தி சிரத்தையுடன் நிர்மாணித்தார்கள்.

கழுமரம் வைத்த ராசியோ... விதியின் செயலோ... அடுத்த ஒரே மாதத்துக்குள் புதுப்பாளையம் வழியாக ஜமீன் கோட்டைக்கு எடுத்துச் சென்ற கஜானா பணம் ரூபாய் ஏழாயிரமும் கொள்ளை அடிக்கப்பட்டதோடு, அதை எடுத்து வந்த கணக்கு பிள்ளையும் கொல்லப்பட்டுக் கிடந்தார்!

பட்டக்காரர் ஜமீன் மிகுந்த சினத்தோடு குற்றவாளியைப் பிடிக்க உத்தரவிட்டார்.

அடுத்து வந்த ஐந்தாம் நாள் அதிகாலை, ஜமீன் வீரர்களோடு வந்த திவான், கங்காணியார் அய்யாவு பிள்ளையிடம் வந்து,

''இங்கே ராஜவீரன் வீடு எது?''

''ஏன்... ஏன்... ஏஞ்சாமி... எதுக்கு கேக்கறீங்க?''

''அய்யாவு... எதிர்க் கேள்வி கேட்காமல் ஒழுங்காய்ப் பதில் சொல்.''

கங்காணியார் காட்ட... வீரர்கள் படையெடுத்து, வீட்டுக்குள் நுழைந்து உறங்கிக் கொண்டிருந்த ராஜவீரனை இழுத்து வந்தார்கள்.

''கொள்ளை அடிச்சது நீதானே! பணம் எங்கே?''

''ஐயா நான் ஒண்ணும்...''

''திவான்... திவான்... ராஜவீரன் நல்லவன் அவன் செஞ்சிருக்கமாட்டான்.''

அதற்குள் வீட்டைச் சோதனை போட்ட ஒருவன், ''ஐயா... இதோ ஆயிரம் ரூபாய். சமையல் அறையில் கிடந்தது. சிற்றரசர் பயிரங்குல கூத்தபிரானின் ஒப்ப ஓலையும் இருக்கிறது.''

அதை வாங்கிப் பார்த்த திவான், ''நல்ல பையனின் செயலைப் பார்த்தீரா... இழுத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார்.

ராஜவீரன் கைது செய்யப்பட்டு ஜமீன்

சிங்கம் கிளம்பிடுச்சு!

நடிகர் சூர்யாவும் இயக்குனர் ஹரியும் 'சிங்கம்' படத்தின் மூலம் மீண்டும் இணைகிறார்கள். சூர்யாவுக்கு துடிப்பான போலீஸ் அதிகாரி வேடம். 'சாமி'க்குப் பிறகு ஹரிக்கும் இது போலீஸ் கதை என்பதால் எதிர்பார்ப்பு எகிறி இருக்கிறது. சூர்யாவுக்கு ஜோடி அனுஷ்கா. 'சிங்கத்'தின் சாகசத்தைக் காண ரசிகர்கள் இப்போதே தயாராகிவிட்டார்கள்.

- ரகு

கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டான். நான்கு நாட்கள் தனியறையில் வைக்கப்பட்டான். பிறகு, ஜமீன் முன்னிலையில் விசாரணை நடந்தது.

''கணக்குப்பிள்ளை சாம்பசிவத்தைக் கொன்று, பணத்தைக் கொள்ளை அடித்தது நீதானே?''

ராஜவீரன் சுற்றியிருந்த ஜமீன்தார், திவான், சிற்றரசர், தளபதி அனைவரையும் பார்த்தான். ஆமாம் என்று தலையசைத்தான்.

ஜமீன்தார் கோபத்தோடு, ''கொலை கொள்ளை நிகழ்த்திய குற்றத்துக்காக புதுப்பாளையம் ராஜவீரனை இன்று மாலை சூரிய அஸ்தமனத்தின் போது கழுவேற்றுங்கள். இது உத்தரவு'' என்றார்.

ராஜவீரன் விக்கித்து நின்றான். எதையோ சொல்ல வர... அவன் வாயில் துணி வைத்து அடைத்து இழுத்துப் போனார்கள்.

அவன் ஓவியமாய் வரைந்து தந்த, புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட கழு மரத்தில் அன்று மாலை கழுவேற்றப்பட்டான். அதைக் கண்டதாலோ என்னவோ வானம் ரத்தச் சிவப்பாய் மாறியிருந்தது.

கங்காணியார் அய்யாவுபிள்ளை யோசனையோடு தலையில் கை வைத்தபடி இருந்தார். ராஜவீரனது சிரித்த முகமே அவர் மனம் முழுவதும் நிறைந்திருந்தது.

ராஜவீரன் கைது செய்யப்பட்டு சென்ற நான்காம் நாள் கங்காணியாரிடம் அவர் தோட்டத்து ஆள் பதற்றமாய் தெரிவித்தான்.

''ஐயா... இப்பத்தான் சேதி தெரிஞ்சது. ஒரு வாரத்துக்கு முந்தி நம்ம ராஜவீரனும் தளபதி நல்லப்பனும் பெருமாள் கோயில்ல சந்திச்சுப் பேசியிருக்காங்க.''

''எதுக்காம்?''

''எல்லாம் சதிய்யா...! கொள்ளை போனது ஜமீன் பணம். அதை அடிச்சது வடநாட்டு ஆசாமிங்களாம். அவங்க தப்பிச்சுப் போயிட்டாங்களாம். ஆனா, இப்ப இது ஜமீனோட மானப் பிரச்னை ஆயிட்டதால, யாராச்சும் ஒருத்தனைக் குற்றவாளின்னு பிடிச்சு ஒப்படைக்கணும்னு சிற்றரசர் உத்தரவு போட்டிருக்கார். ராஜவீரனோட பணத்தேவையைப் புரிஞ்சுகிட்டு அவன் கடனையெல்லாம் அடைக்கிறதா சொல்லி அவனைப் பலிகடா ஆக்கியிருக்கான் தளபதி.''

''..........''

''இதுல வேதனை என்னன்னா... இவன் கொலைகாரன்னு சொன்னதும் அவமானம் தாங்காம அவங்கக்கா அரளி விதையை அரைச்சுக் குடிச்சுட்டு செத்துப் போச்சு... இவனும் போய்... எல்லாம் போய்... ஏமாந்துட்டான்...''

கங்காணியார் இன்னும் மனபாரம் தாளாமல் இருந்தார். அனைத்துக் காட்சிகளும் அவர் மனத்தில் படமாக ஓடின.

'ஏமாந்த வீரன் காகக்கு ஏறினான் கழுமரம்' என்று இன்றளவும் கொங்கு நாட்டு மக்களிடையே பேசப்படும் சொல்வழக்கு கங்காணியார் அய்யாவு பிள்ளையின் காதிலும் விழுந்து எதிரொலித்தது.

எதுவுமே நடக்காதது போல் நதி ஓடிக்கொண்டே இருந்தது. ●



ராஜவீரன் விக்கித்து நின்றான். எதையோ சொல்லவர... அவன் வாயில் துணி வைத்து அடைத்து இழுத்துப் போனார்கள்.

அஞ்சலி



நன்றியின் அகராதி!

நன்றி என்ற சொல்லுக்கு அகராதியில் அர்த்தம் தேடினால் பாலாஜி என்ற பெயரும் இருக்கலாம். பாலாஜியின் திரைப் பிரவேசத்துக்குக் காரணமாக இருந்தவர் ஜெமினிகணேசன்.

''பாலாஜியின் நடிப்பு ஆர்வத்தைப் பார்த்துவிட்டு ஜெமினி ஸ்டுடியோவில் பணியாற்றிய ஜெமினி, பாலாஜியை 'ஔவையார்' படத்தில் முருகன் வேடத்துக்குச் சிபாரிசு செய்தார். தொடர்ந்து பல வாய்ப்புகள் கிடைக்கவும் காரணமாக இருந்தார். அவ்வளவு ஏன்? தான் ஹீரோவாக நடிக்க வேண்டிய 'பானை பிடித்தவள் பாக்கியசாலி' படத்தில் ஹீரோவாக நடிக்க பாலாஜியைச் சிபாரிசு செய்தார் ஜெமினி. அந்த நன்றிக்கடனைத் தீர்க்கும் விதமாக, தான் தயாரிப்பாளரான போது, ஜெமினியைக்கதாநாயகனாக நடிக்க வைத்தார் பாலாஜி'' என்கிறார் அண்மையில் ஜெயா டி.வி.யில் 'திரும்பிப் பார்க்கிறேன்' நிகழ்ச்சியில் பாலாஜியைப் பங்கேற்கச் செய்த திரைப்பட ஆராய்ச்சியாளரான அறந்தை மணியன்.

அதே போல் திறமையானவர்களுக்கு உதவுவதிலும் அவரைப் போன்றவரைக் காண்பது அரிது. ஆரம்ப நாட்களில் நாகேஷின் நடிப்பினால் ஈர்க்கப்பட்ட பாலாஜி, அவரை அழைத்து வந்து தம் வீட்டிலேயே தங்கவைத்து, அவருக்காகவே நாடகக் குழுவைத் துவக்கி ஆதரவு அளித்ததுடன், இயக்குநர்களிடம் நாகேஷின் திறமையை எடுத்துச் சொல்லி வாய்ப்பளிக்கும்படி கேட்டுக்கொள்வார். மதுப் பழக்கத்தால் லிவர் பாதிக்கப்பட்டு நாகேஷ் சென்னை பொது மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போது, உயிர்காக்கும் மருந்தை அவசர அவசரமாகத் தருவித்து, அவரைக் காப்பாற்றியவர் பாலாஜி.


பாலாஜிக்கு ஏகப்பட்ட சென்டிமென்ட்கள் உண்டு. எப்போதும் அவரது பட ஹீரோ, ஹீரோயின்களுக்குப் பெயர் 'ராஜா-ராதா'தான். அவரது திருமண நாள் ஜனவரி 26. அவரது பல படங்கள் அந்த நாளில் ரிலீசாகி உள்ளன. ஏற்கெனவே இந்தி, மலையாளம், தெலுங்கில் ஹிட் ஆன படங்களைத் தமிழில் எடுத்து, வெற்றி பெறச் செய்தது பாலாஜியின் ஸ்டைல்!

- கௌதம்

எல்லாவற்றிலும் முந்தி நின்று ஆக்ரமிக்கும் டீ.வி. சேனல்கள் தேர்தல் என்றால் சும்மா விடுமா? ஒரு சேனல் தேர்தல் நிகழ்ச்சிகளுக்கு எவ்வாறு தயாராகிறது? 'ஜீ' தமிழில் பல்வேறு அரசியல் நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருக்கும் சுதாங்கன், தேர்தல் பரபரப்புக்கிடையிலும் நம்மோடு தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்.

''தேர்தல் நிகழ்ச்சிகளில், தொழில் நுட்பம் சார்ந்தவர்கள், தொழில் நுட்பம் சாராதவர்கள் என இரு பிரிவினரும் இணைந்து பணியாற்ற வேண்டும். எங்களைப் போன்ற நிகழ்ச்சிகளை வழங்கும் மூத்த பத்திரிகையாளர்கள், நிருபர்கள், செய்தி வாசிப்பாளர்கள் போன்ற தொழில் நுட்பம் சாராதவர்களின் பங்களிப்பு, தொழில்நுட்பக் குழுவை விட அதிகமானது.

ஒன்பது மாத ஹோம் வொர்க்!



பாராளுமன்றத் தேர்தலுக்காக, கிட்டத்தட்ட ஒன்பது மாதங்களுக்கு முன்பே என்னைத் தயார்செய்து கொண்டேன். ஒருநாளைக்கு எட்டு செய்தித்தாள்கள் படிக்கும் நான், தேர்தலுக்காக பதினாறு செய்தித்தாள்களைப் படிக்கிறேன். குறிப்பாக அரசியல் கட்சியின் செய்தித்தாள்களை முக்கியத்துவம் கொடுத்து வாசிப்பேன். கூட்டணிக் கொள்கைகள், தேர்தலில் அக்கட்சிகள் எதிர்கொள்ளப் போகும் பிரச்னைகள் போன்ற தகவலை மையமாக வைத்து என்னுடைய அரசியல் நிகழ்ச்சிகளை 'ஜீ' தமிழில் வடிவமைப்பேன். தேர்தல் நிகழ்ச்சிகளில் பணியாற்றும் அனைவருமே கேமரா முன் அமர்வதற்கு முன்பாக நிறைய ஹோம்வொர்க் செய்ய வேண்டும்.

ஜீ தமிழும், பிரபல வார இதழும் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பில் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் சுமார் இரண்டாயிரம் பேர் வரை வாக்களித்தார்கள். இந்தக் கருத்துக் கணிப்பு ஏப்ரல் மாதம் அதாவது முதல் கட்ட வாக்குப்பதிவு தொடங்குவதற்கு



முன்பாக வெளியிடப்பட்டது. இதில் தி.மு.க. கூட்டணிக்கு இருபத்தைந்து இடங்களும், அ.தி.மு.க. கூட்டணிக்கு பதினைந்து இடங்களும் கிடைத்தன. இந்த முடிவுகள் தேர்தல் சமயத்தில் மாறலாம். கருத்துக் கணிப்பு நடத்தியபோது, இலங்கைத் தமிழர் பிரச்னை பெரிய விஷயமாக மேடைகளில் பேசப்படவில்லை. ஆனால், தற்சமயம் முக்கிய விஷயமாகியுள்ளது.

இந்தக் கருத்துக் கணிப்பில் பொதுவாகக் கவனித்த விஷயம் பதினெட்டிலிருந்து முப்பது வயதுக்குள் உள்ளவர்கள் இரண்டு பெரிய கட்சிகளுக்கு மாற்றாக மற்றொன்று வேண்டும் என்று விரும்புகிறார்கள். இவ்வயதினர் இந்த மாற்றத்தை ஏற்படுத்த 'விஜயகாந்த்' சரியான நபர் என்று எண்ணுகிறார்கள். விஜயகாந்த் பாராளுமன்றத் தேர்தலில் பெரிய வெற்றியைப் பெறுவாரா, இல்லையா என்பதையும் தாண்டி, அவருக்குக் கிடைக்கும் வாக்கு எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை இவ்வயதினரிடையே பார்க்க முடிந்தது.

'ஜீ' தமிழில் ஒளிபரப்பாகும் 'முதல் குரலி'ல் அந்தந்தத் தொகுதிக்கான அத்தியாவசியப் பிரச்னைகள் பேசப்படுகின்றன. அத்தொகுதியின் எம்.எல்.ஏ.வோ, அவரது பிரதிநிதியோ இந்த நிகழ்ச்சியில் பங்குபெறுகிறார்கள். எதிர்க்கட்சியில் இருக்கும் நபரும் இடம்பெறுவார். தொகுதியின் நிறைகுறைகளைப் பற்றியும் தொகுதி மக்கள் பேசுவார்கள். தேர்தலுக்காக மட்டுமின்றி எப்போதுமே அரசியல்வாதிகளுக்குத் தொகுதி மீது அக்கறை இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி இது.

அடுத்து, தேர்தலுக்காக அரசியல்வாதிகள் எடுத்திருக்கும் நிலைப்பாடுகள் கொள்கைகளை அவர்கள் வாயிலாக அறிந்து கொள்ளும் நிகழ்ச்சி, 'தமிழர் பார்வையில்'. 'ஜீ' தமிழில் எந்தவித அரசியல் பின்னணியும் இல்லாததால் அரசியல்வாதிகளை முழு சுதந்திரத்துடன் இந்நிகழ்ச்சியில் கேள்வி கேட்க முடிகிறது.

தேர்தல் முடிவுகள் வரும் சமயத்தில் வட இந்திய செய்தி சேனல்களில் இருப்பது போன்று விவாதங்கள், கருத்துக் கணிப்புகளுக்கும் தேர்தல் முடிவுகளுக்கும் உள்ள வித்தியாசங்கள், நேரலையில் வேட்பாளர்களுடன் உரையாடல் போன்ற பல்வேறு சிறப்பு அம்சங்களையும் 'ஜீ' தமிழில் வழங்கவிருக்கிறோம்'' என்றார்.

- ராகவ்குமார்



தேர்தல் மை

''மைசூர் பெயின்ட்ஸ் அண்ட் வார்னிஷ்'' நிறுவனம் தான் இந்தத் தேர்தலுக்கு 'மை' சப்ளை செய்கிறது. 10 மி.லி. கொண்ட 20 இலட்சம் பாட்டில்கள் பயன்படுத்தப் போகிறார்கள். ஒரு பாட்டிலில் 700 வாக்காளர் கைகளில் அடையாளம் வைக்கலாம். பெரிய மாநிலமான உத்தரபிரதேசத்துக்கு மட்டும் சுமார் மூன்று இலட்சம் பாட்டில்கள்! குறைந்த அளவு-லட்சத்தீவுகளுக்கு -வெறும் 120 பாட்டில்கள்தான்.

- சுஜாதா கணேஷ்,
வளசரவாக்கம்.



குடிக்கு அடிமையாகி சமூகத்தில் மதிப்பிழந்துபோன அப்பாவை, தனது அதிரடி நடவடிக்கையால் மாற்றிவிட்டதாக நினைத்துக்கொண்டிருந்தாள் சசி.

''சசிம்மா என்னால முடியலம்மா. குடிக்கணும்னு திரும்பத் திரும்ப என்னையும் மீறி தோணுதும்மா'' என்று கண் கலங்கி அவர் சொன்னது மீண்டும் மீண்டும் காதுகளுக்குள் மூங்கிலைக் குடையும் வண்டின் ரீங்காரமாய் ஒலித்துக் கொண்டே இருந்தது. அப்பா குடிகாரர் மட்டுமல்ல... குடிநோயாளி என்பதை உணர்ந்தாள்.

எப்போதாவது ஏதாவது விசேஷத்துக்கு மட்டுமே குடிக்கும் பழக்கத்திலிருந்த அப்பாவுக்குக் கிடைத்தது புதிய சகவாசம். ''குடும்பத்துக்காக கம்பெனியில் மாசம் முழுக்க உழைக்கிறோம். நமக்காக ஒரு நாள் ஒதுக்கினா என்ன தப்பு?'' என்று அமுது பூசிய சாத்தானின் வார்த்தை அப்பா மனத்தில் பதியமிட்டு வளர்ந்தது. பின்னர் 'மாசத்துக்கு ரெண்டு நாள் தானே' என்று சமாதானப்படுத்தினார். பிறகு அது 'வாரத்தில் ஒரு நாள் மட்டும். அதுவும் சன்டே ஒன்லி' என்று திருத்தம் செய்தார். வாழ்க்கை வாழ்வதற்கே என்கிற பொய் ஆறுதலில்... போதை 'தினப்படி'யானது. சிரங்கைச் சொறிந்து தற்காலிக சுகம் பெறுகிற பாவனையில் அது சீழ் பிடித்ததை அறியாமல் போனார் அப்பா. அவரின் சமரச வார்த்தைகள் புண்ணின் மீது தடவிய புனுகு போலிருந்தது.

மாசத்துக்கு ஒரு முறை குடிக்க ஆரம்பித்தபோது - பீர் மட்டும் தொட்டார். பின்னர் பிராந்தி, விஸ்கி, ரம், வோட்கா என பட்டியல் நீண்டது. ''பீர் போதையில்ல.. வெயிலுக்கு அது குளிர்ச்சி''ன்னுதான் ஆரம்பித்தார். 'ஒதுங்க வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டியது' போலத்தான் ஆனது. ஜாலிக்காக உள்ளே வந்து வீட்டின், குடும்பத்தின் ஜாலியைக் கொள்ளையடித்து விட்டுப் போனது... முதன் முதலில் தொட்ட பீர்.

அடிமைகளின் வரலாறும் இப்படித்தான் வடிவமைக்கப்பட்டது என்பதை சசி அறிந்திருந்தாள். பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசியில் ஸ்பெயின் நாட்டிலிருந்து அமெரிக்க கண்டத்துக்குப் பயணமானார் கிறிஸ்டோபர் கொலம்பஸ். கப்பலில் மூட்டை முடிச்சோடு தமது



அடிமை தேச அறுவடை!

பரிவாரங்களுடன் கிளம்பியவர், கூடவே கரும்புக் குருத்துக்களையும் எடுத்துச் சென்றார். அடிமைகளையும் அது முளைக்க வைக்கும் என்று பலருக்குத் தெரியாமலிருந்தது. அவை மேற்கிந்தியத் தீவுகளில் பயிரிடப்பட்டன. கரும்பு பயிரிடுவதற்காகத்தான் முதலில் செவ்விந்தியர்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்காவின் நியூ இங்கிலாந்தில் உள்ள வெள்ளையர்கள், சாராய ஆலைகளில் ஆப்பிரிக்க நீக்ரோ மக்களை அடிமையாக்கி சாராய வியாபாரம் செய்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரெஞ்சு முதலாளிகள் அடிமைக்களை விலைக்கு வாங்கி, காடுகளை அழித்து கரும்பு பயிரிட்டனர். காட்டை நம்பி இருந்த சுதந்திர வாழ்வு சாராய முதலாளிகளின் காலில் சரணடைந்தது. இந்தத் தொழில் சர்க்கரைக்கானது மட்டுமல்ல; சாராயத்துக்கானதும்தான். அடிமைகளுக்கு உணவு கொடுக்காமல், கூலி கேட்டு குரல் எழுப்பாமல் இருக்க, அவர்களுக்குக் கரும்புக் கழிவு சாராயம் கொடுத்து மயங்க வைத்து அடிமையாக்கப்பட்டனர். பல நூற்றாண்டுகளாக அடிமைகள் உருவாக, அடிமை தேசம் விடுபடாமலிருக்க கரும்பிலிருந்து எடுத்த சாராயம்தான் காரணியாயிருந்தது. இலட்சக்கணக்கான அடிமைகளின் பலிகளுக்குப் பின்னர்தான் புரட்சியும் புது வெளிச்சமும் ஆப்ரகாம் லிங்கன் போன்ற விடிவெள்ளிகளும் தோன்றினர்.

அற்புத தேசங்களையே அடிமையாக்கிய ஆல்கஹாலுக்கு சராசரி சாமான்ய மனிதன் எம்மாத்திரம்?

பீர், அழிவுக்கான ஆரம்ப அறிமுகப் படலம். அது பழக்கமாகி, வழக்கமாக மாறிய பின்னர்தான் தனது தூக்குக் கயிற்றின் முடிச்சுக்களை இறுக்குகிறது. பார்லி அரிசி மட்டுமல்ல எந்த ஊரில் எது அதிகம் கிடைக்குமோ அதைக் கொண்டுதான் பீர் தயாரிக்கப்படுகிறது; ஆப்பிரிக்காவில் கசாவா (casava) எனும் கிழங்கிலிருந்தும், வட அமெரிக்காவில் காட்டு ரக சோற்றுக் கற்றாழையிலிருந்தும், பிரேஸில் நாட்டில் வீணாகிப் போகும் உருளைக் கிழங்கிலிருந்தும். இதில் ஏதேனும் ஒரு பொருளைப் புளிக்க வைத்து 'ஈஸ்ட்' எனும் பூஞ்சைக் கிருமியைச் சேர்த்து, 'ஹாப்ஸ்' என்னும்




ஒருவகை போதைப் பொருளைக் கலந்து தான் பீர் தயாரிக்கப்படுகிறது. ஹாப்ஸ் கலப்பதால்தான் பீரில் கசப்பு கூடுகிறதாம். இந்த பீரில் முப்பது சதவிகிதம் வரை ஆல்கஹால் உள்ளது. இவ்வாறு விற்பனைக்கு வரும் பீரில் காற்றடைக்கப்படுகிறது. இந்த காற்றடைப்பால்தான் வயிற்றினுள் கார்பானிக் அமிலம் அதிகம் சேர வாய்ப்பு ஏற்பட்டு நெஞ்செரிச்சலும் வாய்வுத் தொல்லையும், வட்டியாக வந்து சேர்கின்றன. 'வட்டி'யாக வரும் நோய் சரி! 'முதல்' எது? பீரில் உள்ள 'ஹாப்ஸ்' என்ற பொருளின் நச்சுத் தன்மையைச் சமன் செய்ய கல்லீரல் அதிகம் போராட வேண்டியுள்ளது. இதனால் ஏற்படும் கல்லீரல் கோளாறுதான் 'முதல்'. அறிமுகப் படலமான பீருக்கே இந்த நிலைமை என்றால் அடுத்தடுத்த மதுவகைகளுக்கு உடலின் மற்ற பாகங்களின் நிலை என்னவாகும்? இதையெல்லாம் அப்பாவிடம் விளக்கிச் சொல்ல அன்றும் இன்றும் சசிக்கு நேரமும் தக்க சூழலும் இல்லை.



✱ கிறிஸ்டோபர் கொலம்பஸ்

அற்புத தேசங்களையே அடிமையாக்கிய ஆல்கஹாலுக்கு, சராசரி சாமான்ய மனிதன் எம்மாத்திரம்?



✱ லிங்கன்

சசி இலக்கியச் சூழலில் தேர்ந்த வாசகியாய் நன்கு அறிமுகமாகியிருந்ததால் அவளுக்கு உதவுபவர்களும் நிறையவே இருந்தனர். சசியிடம் ஒரு பட்டியலே உண்டு. குடியைத் தொடாத எழுத்தாளர் ஜெயமோகன் உள்ளிட்ட பிரிவு. குடித்து அதன் பாதகம் அறிந்து, குடியைத் தமது சுய ஆளுமையால் நிறுத்திவிட்ட நாஞ்சில் நாடன் உள்ளிட்ட பிரிவு (குடியை விட்ட பின் அவர் எழுதிய கட்டுரை சுவாரசியமானது). குடியை விட முடியாதபடி குடி நோயாளியாகி, முறையாகச் சிகிச்சை எடுத்து, மீண்டு வந்த யுகமாயினி இதழின் ஆசிரியரும் எழுத்தாளருமான சித்தன் உள்ளிட்ட பிரிவு, குடியைக் கொண்டாடி, கட்டுரை எழுதி, மது ஊற்றி மரணயாகம் நடத்தும் பிரிவு எனப் பல்வேறு வகையுண்டு.

தன் அப்பாவை குடிநோயிலிருந்து மீட்க முதலில் ஆலோசனையும் சிகிச்சையும் வேண்டும்; அதுவும் இலவசமாக. யாரிடம் கேட்கலாம்? சசி, சித்தனாரோடு தொடர்பு கொண்டாள். பகிரங்கமாக ஒரு எழுத்தாளன் ஒத்துக்கொண்டு உதவுவாரா? ரிங் அடித்துகொண்டே இருந்தது. எதிரே தோழர் யாழினி முனுசாமி வந்துகொண்டிருந்தார். சசிக்கு புதுத் தெம்பு கூடியது 'உடுக்கை இழந்தவன் கைபோல' முனுசாமி இடுக்கண் களைவான். ஏனெனில், அவன் வாழ்வின் ஆறாந்திணை. நட்புக்கான நிலம் மனத்திலிருக்கும் ஆறாம் திணைதானே?

(நட்புத்திணை நேசமுடன் தொடரும்)

எச்சரிக்கை: தற்கொலையின் 5வது தவணை – வயிற்றுப்புண்.



''வயிறு எரியுதுடா, சாப்பிட்டாலும் வலிக்குது சாப்பிடலைன்னாலும் வலிக்குது. 'வயிற்று வலி தாங்காமல் வாலிபர் தற்கொலை'யின்னு வர்ற செய்தி உண்மைதான்னு இந்த வலி நிரூபிக்குதே. கடவுளே வலியை நிறுத்து!''


தேர்தல் சிறப்பிதழ்-2
பத்து வோட்டு பேகில்!
சீர்காழி வி.ரேவதி
அடுத்த மாசத்துக்குள்ள எப்படி கடனை அடைப்பே...?
எங்க வீட்டுல பத்து வோட்டு இருக்குங்கய்யா... அதுக்கு வர்ற பணத்தை வெச்சு பைசல் பண்ணிடறேன்யா!
பிள்ளை

வலையோடு விளையாடு





கூல்...

சுட்டெரிக்கும் வெயிலைச் சமாளிக்க 'டிப்ஸ்'களை அள்ளித் தருவதற்கு குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என ரக வாரியாக 'வெப்சைட்'கள் காத்திருக்கின்றன. அவற்றை கூலாக ஒரு நோட்டம் விடலாமா?

www.babycenter.in

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் பெரியவர்களாலேயே வெயில் தாங்க முடிவதில்லை. பச்சிளம் குழந்தைகளின் பாடு இன்னும் மோசம். அவர்கள் உடலை ஒரு பூப் போல பாதுகாக்க வேண்டியது நம் கையில்தான் இருக்கிறது. இதோ சில எளிய வழிமுறைகள்.

★ காலை பத்து மணி தொடங்கி மாலை ஐந்து மணி வரை வீட்டை விட்டு வெளியே அழைத்துச் செல்லக் கூடாது.

★ வாங்கி வைத்த ஆடைகளையெல்லாம் அணிவித்து, அலங்கார அணிவகுப்பு நடத்தக் கூடாது. இயன்ற வரையில் சுமைகளைக் களையுங்கள். பருத்தி ஆடையை மட்டும் அணிவியுங்கள்.

★ பழரசம், பால், தயிரென்று திரவ ஆகாரங்களை அதிகம் கொடுக்கவும்.

★ பாப்பாவுக்கு வேர்க்கிறதே என்று பவுடரை இஷ்டத்துக்கு அள்ளித் தடவக் கூடாது. அதிகளவில் டால்கம் பவுடரைப் பூசுவது சருமத்தில் எரிச்சலை ஏற்படுத்தும்.

★ குளியல் முடிந்தவுடனே, குழந்தைகளை குளிரூட்டப்பட்ட அறைகளில் அடைக்காதீர்கள். ஏ.சி. சுவிட்சை அணைத்துவிட்டு, உடலை நன்கு உலர்த்துங்கள். இல்லையென்றால், ஜலதோஷம் பிடிக்க வாய்ப்பாகும்.

www.indianwomenshealth.com

அழகுக்கு அழகு சேர்க்கையில் கட்டுப்பாடு தேவை. இது ஒப்பனைக்கேற்ற பருவமல்ல. கொஞ்சம் அதிகமாக வேர்த்தால் அழகு அலங்கோலமாகிவிடும்.

★ உதடு, புருவம் இரண்டும் வண்ணங்களின் பிடியிலிருந்து விலகியே இருக்கட்டும். ம்கூம்.. மாட்டேன் என்றால், இளஞ்சிவப்பு நிறமே உதட்டுக்கு ஏற்றது. கண்களுக்குக் கண்டிப்பாக வாட்டர்-ப்ரூஃப் அயிட்டங்கள் மட்டுமே.

★ இரவு நேரத்தில் உள்ளங்கால்களில் எண்ணெய் பூசிக் கொள்ளவும். இது வெப்பத்தைத் தணிக்கும். பாதங்களில் அழகைப் பாதுகாக்கும். பித்தவெடிப்பையும் தவிர்க்கும்.

கூல்... பேபி!

★ ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் தூங்கலாம். இது உடலைப் புத்துணர்ச்சியாக வைத்துக்கொள்ள உதவும்.

www.haircareresources.com

ஆண்களே... தப்பிக்க முயலும் பல்லி, தன்னுடலில் பாதியை துண்டித்துக் கொள்வது போல, உங்கள் கேசத்தையும் கத்தரித்துக் கொள்ளுங்கள். கோடை முடிந்ததும் மீண்டும் பழையபடி வளர்த்துக் கொள்ளலாம்.



இதெல்லாம் ஒரு பாதுகாப்புக் குறிப்பா என்று அலுத்துக் கொள்கிறீர்களா? தொடர்ந்து படியுங்கள்...

அப்படி நீங்கள் கத்தரிக்க விரும்பாத பட்சத்தில், வெளியே புறப்படும்முன் மெல்லிய துணியாலான தொப்பிகளையோ அல்லது கைக் குட்டைகளையோ பயன்படுத்துங்கள்.

★ சூடான நீரில் முடியை அலச வேண்டாம். குளிர்ந்த நீரே உகந்தது.

★ தினம் தினம் ஷாம்பூ உபயோகப் படுத்துபவர்கள், ஒருநாள் விட்டு ஒரு நாள் பயன்படுத்துங்கள். இயல்பாகவே முடியிலுள்ள எண்ணெய்த் தன்மையை அது குறைத்து விடுவதால், உங்கள் முடி உடைந்துவிட வாய்ப்புகள் அதிகம்.

★ எவ்வளவு முடியுமோ அவ்வளவு நீரை உங்கள் தலையில் ஊற்றிக் கொள்ளுங்கள். (இதனைக் குளியலென்றும் கூறுவார்கள்.) தேகம், கேசம் இரண்டும் சூடு தணிந்து இயற்கையான வலுவைத் தக்க வைத்துக் கொள்ளும்.

www.tamilnadutourism.org

ஓய்வு நாட்களில் வெயிலுக்குப் பயந்து வீட்டுக்குள் அடைந்து கிடக்காமல் அருகிலுள்ள சுற்றுலாத்தளம் எதற்கேனும் சிற்றுலா சென்று வர விரும்பினால், தமிழக சுற்றுலாத்துறையின் இணைய தளத்தை 'கிளிக்'கிப் பாருங்கள்.

அரசாங்க வெப் சைட் என்றாலே அப்டு டேட் செய்யமாட்டார்கள் என்ற நிலையில், இந்தத் தளம் வியப்பை ஏற்படுத்தக் கூடும்.

மாவட்டவாரியாக உள்ள சுற்றுலாத் தளங்கள், அவற்றின் வரலாற்று முக்கியத்துவங்கள், பயண மற்றும் தங்குமிட வசதிகள், விழாக்கள் என்று விவரங்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.


புகைப்படங்களின் அணிவகுப்பும் உண்டு.

- ஸாந்த்

கருணாநிதி தமது முதல் பிரசாரத்தை திருச்சியில் துவங்கிய அதே மே முதல் நாளில் விஜயகாந்தின் வேன் வடசென்னையில் வலம் வந்தது. 39 நாட்களில் 29 தொகுதிகளைச் சுற்றிய வேனின் மைலோமீட்டர் 11,000 கி.மீ. காட்டியது.



திருவொற்றியூர் தேரடி அருகில் மாலை நான்கு மணிக்கு பிரசாரத்தைத் துவக்குவார் விஜயகாந்த் என்று அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஆறு மணி வரை அவரைக்



● யுவராஜ்

"ஹோட்டலுக்குள்

காணோம். ஒருவழியாக ஆறே கால் மணிக்கு, விஜயகாந்தின் பிரசார வேன் மக்கள் வெள்ளத்தில் ஊர்ந்தவாறே தேரடியை வந்தடைந்தது. உள்ளிருந்து தலையை வெளியே நீட்டினார் விஜயகாந்த். ''தலைவா...'' என்று விசில் பறந்தது. கையில் மைக்கைப் பிடித்தவாறே மூன்று நிமிடங்கள் பொறுமை காத்தார் விஜயகாந்த். சத்தம் அடங்குவதாகத் தெரியவில்லை. கொஞ்சம் கடுப்படைந்த அவர், ''நிறுத்தப் போறீங்களா... நான் இப்படியே கிளம்பட்டுமா?'' என்று படபடக்கவே கூட்டம் அமைதியாகிப் போனது. மெதுவாகத் துவக்கினார் விஜயகாந்த்.

''ரெண்டு திராவிடக் கழகங்களும் சேர்ந்து கடந்த நாற்பது வருடங்களாக, தமிழகத்தைப் பாலைவனமாக மாற்றி வைத்திருக்கிறார்கள். கொள்ளையடிப்பதில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல. உங்களைப் பார்த்தால் எனக்கு வயிறெரிகிறது'' என்றவர், வழக்கம்

போல் தி.மு.க.வையும், அ.தி.மு.க.வையும் வறுத்தெடுத்தார்.

கூட்டத்தினரோடு பேசுவது போன்றே அவரது பேச்சு அமைகிறது. ''உங்களைத்தான் கேட்கிறேன் மக்களே'' என்று அடிக்கடி சொல்கிறார். பேசும்போது சத்தம் ஏதாவது வந்தால் டென்ஷனாகி விடுகிறார். கேள்விக்கு மக்களிடம் பதில் வராவிட்டால் ''சொல்லுங்கள் மக்களே'' என்கிறார்.



''இது நீங்கள் சவுக்கடி தர வேண்டிய நேரம். கோட்டை விடாதீர்கள். எனக்கு ஒரு முறை வாய்ப்பு கொடுத்துப் பாருங்கள். தமிழகத்தை மாற்றிக் காட்டுகிறேன். இந்த

முடிக்கிறார். ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு கூட்டம் மீண்டும் ஆர்ப்பரிக்கிறது. அந்த உற்சாகத்தின் இடையே வேன் அடுத்த பாயிண்ட்டான காசிமேடு நோக்கி நகர்கிறது. வழியெங்கும் இருபுறமும் கைகாட்டியபடி மக்கள். காசிமேடு மீனவர்கள் நிறைந்த பகுதி. எனவே, ''எனக்கு மீனவ நண்பர்கள் நிறைய. நம்பினால் உயிரைக் கொடுப்பார்கள் அவர்கள்'' என்று சொல்லவும், ''தலைவா'' என்று இளைஞர்கள் பரவசமாகிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் குறைந்தது இருபது நிமிடங்கள் பேசுகிறார்.

காசிமேடு அடுத்து ராயபுரம். ''பாருங்கள் மக்களே... வோட்டுக்காக பஸ் கட்டணத்தைக் குறைத்திருக்கிறார். தேர்தலுக்கு அப்புறம் ஏற்றிவிடப் போகிறார்'' என்று சொல்லவும் அருகில் உள்ள கோவிலில் மணியடித்தது. ''பார்த்தீர்களா மணியடிப்பதை... நான் சொல்வதுதான்

வாருங்கள்!"

- அழைக்கிறார் விஜயகாந்த்



விஜயகாந்தின் ஹோட்டலில் உள்ளே நுழைந்து சாப்பிட்டுப் பார்த்தால்தானே எல்லா ஐட்டங்களும் நன்றாக இருப்பது உங்களுக்குத் தெரியும். வெளியேயே நின்று வேடிக்கை பார்த்தால் எப்படி? எனவே தே.மு.தி.க. சார்பாக இந்தத் தொகுதியில் நிற்கும் யுவராஜுக்கு, முரசு சின்னத்தில் வாக்களியுங்கள்'' என்று

மக்கள் வாய்ஸ்:

சாந்தி: ரொம்ப யதார்த்தமான பேச்சு. நான் விஜயகாந்த் ரசிகை. அவரது படங்கள் ஒன்று கூட விட மாட்டேன். எதிர்காலம் கேப்டனு டையதுதான்.


முரளி: நான் அ.தி.மு.க.தாங்க. ஆனா விஜயகாந்த் பேசியதைக் கேட்ட போது, 'இந்த மனிதருக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தால் என்ன?' என்று தோன்றி யது.

ராஜேந்திரன்: மக்கள்... மக்கள் என்கிறாரே? அந்த மக்களுக்கு இடைஞ்சல் கொடுக்கும்படி, போக்கு வரத்தை நிறுத்தி இவர் கூட்டங்கள் பேசுவது சரியா?

கிருஷ்ணமூர்த்தி: எல்லோரையும் கொள்ளைக்காரர்கள் என்று சொல்லும் இவர் தனித்து நின்று வோட்டுக்களைப் பிரிக்க தி.மு.க.விடம் 'பெட்டி' வாங்கி னார் என்ற பேச்சு உள்ளதே!

உஷா: தெய்வத்தோடும் மக் களோடும் கூட்டணி என்று சொல்வது எனக்குப் பிடிச்சிருக்கு. 2011ல் அவரே முதல்வர்.


சாந்தி


முரளி


ராஜேந்திரன்


கிருஷ்ணமூர்த்தி


உஷா

நடக்கப் போகிறது'' என்று முடிக்கிறார்.

அடுத்து தண்டையார்ப்பேட்டை. பெரும்பாலும் பெண்கள். இங்கு பேசும் போது கலைஞரின் உண்ணாவிரதத்தைக் கிண்டலடித்தார். கூட்டம் கைதட்டி ரசித்தது. ''இந்த விஜயகாந்த் யார் சோற்றிலும் மண் அள்ளிப் போடாதவன். ஆயிரக்கணக்கான இளைஞர் களுக்கு இலவச கம்ப்யூட்டர் பயிற்சி கொடுக்கிறேன். நூற் றுக்கணக்கான இளைஞர் களுக்கு வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறேன். என்னை நம்புவீங்களா?'' என்று கேட்டு விட்டு, ''நம்புங்கள் மக்களே'' என்கிறார். கூட்டம் ஆனந்த நடனமாடி 'ஓ' போடு கிறது. ''தெய்வத்தையும் உங்களையும் நம் பித்தான் தனியாக நிற்கிறேன். இரண்டு கொள்ளைக்காரர்களையும் விரட்டியடித்து எனக்கொரு வாய்ப்புக் கொடுங்கள்'' என்று முடித்து கையை ஆட்ட, பிரசார வேன் கிளம்புகிறது.

''இந்த விஜயகாந்தின் ஹோட்டலில் சாப்பிட்டுப் பார்த்தால்தானே தெரியும்''

திருவொற்றியூர் தேரடியி லிருந்து இறுதியாக தண்டை யார்ப்பேட்டை பாலம் வரை அவர் பேசிய இடங்களில் திரண்ட கூட்டமும், சாலை களின் இரண்டுபுறமும் கைகாட்டிய, மக்களின் எழுச்சி யும் பிரமிக்கத்தான் வைக்கின் றன.

கூட்டங்கள் எல்லா நேரங் களிலும் வோட்டுக்களாகி விடு வதில்லை என்பதை நமக்கு நாமே நினை வூட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது!

- ப்ரியன்


படங்கள் : **ராஜன்**



அந்த ரயில் வந்து நின்றதும் அத்தனை பரபரப்பிலும் பலரது பார்வையைக் கவர்கிறது. ''இது என்ன புதுசா இருக்கு?'' என்ற கேள்வி எழுகிறது.

இந்தியத் தேர்தல் சம்பந்தமான செய்திகளை நேரடியாகக் கண்டறிந்து உலக மக்களுக்கு அளிக்கும் நோக்கத்துடன், பிரிட்டனின் பி.பி.சி. நிறுவனம் ஒரு நிருபர் படையையே இந்தியாவுக்கு அனுப்பி இருக்கிறது. சுமார் 35 பேர் ஒரு பிரத்யேக ரயில் மூலம் இந்தியாவெங்கும் சென்று தேர்தல் செய்திகளைச் சேகரித்து உலகமெங்கும் அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.





பறக்குது ரயில்; தெறிக்குது செய்தி!

இந்திய ரயில்வே, இவர்களுக்கென்றே ஏ.சி. முதல் வகுப்பு பெட்டிகள் மட்டுமே கொண்ட, சமையலறை வசதியுடன் கூடிய ஒரு ஸ்பெஷல் ரயிலை அளித்துள்ளது. ஏப்ரல் 25ஆம் தேதி டெல்லியிலிருந்து புறப்பட்ட இந்த ரயில் அகமதாபாத், மும்பை, ஹைதராபாத், புவனேஷ்வர், கொல்கத்தா, பாட்னா, அலகாபாத் என்று ஒரு ரவுண்டு அடித்துவிட்டு, தேர்தல் முடிவுகள் வெளியாகும் மே 16ஆம் தேதி மீண்டும் டெல்லி வந்து சேரும். ஒவ்வொரு ஊரிலும், பல்வேறு கட்சியினரையும், சாமானிய மக்கள் உட்பட சமூகத்தின் பல்வேறு பிரிவினரையும் சந்தித்துப் பேசி, தகவல்கள் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் செய்திகளுடன், பொருளாதாரத் தேக்கம் எந்த அளவுக்கு இந்திய மக்களைப் பாதித்துள்ளது என்றும் இவர்கள் நேரடியாகக் கண்டறிவார்கள்.

தேர்தல் ரயிலில் பயணம் செய்யும் மூத்த பத்திரிகையாளரான பிஸ்வாசுடன் மொபைல் போனில் தொடர்பு கொண்டோம். அவர் சந்தித்த வித்தியாசமான அனுபவத்தை நம்மோடு பகிர்ந்து கொண்டார்.

''மும்பையில் ஒரு பள்ளிக்கூடத்தில் வோட்டுப் போட வந்திருந்த அறுபத்து இரண்டு வயது மனிதர் சொன்ன தகவல் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இப்போதுதான் அவர் முதல் தடவையாக வோட்டுப் போடுகிறாராம்'' என்றவரிடம்,

''சரி! அடுத்து எந்தக் கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும்?'' என்று கேட்டால், ''அதை உறுதியாகச் சொல்கிற நிலை இல்லை என்பதுதான் யதார்த்தம்!'' என்கிறார்.

– மௌலி

அன்னம்மா

பூஜை அறையில் அந்த தெய்வச் சிலைக்கு சிறப்பு இடம் கொடுக்கப் பட்டு இருந்தது.

அறை என்று அதைச் சொல்ல முடியாது. அலமாரி. பூஜை அலமாரி என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். பெரிய மர பீரோ மாதிரியான அலமாரி. இருந்தாலும் குடும்ப உறுப்பினர்களான நாங்கள் அதை பூஜை அறை என்றே மதிப்புடன் குறிப்பிடுகிறோம். மரப் பலகைகள் கொண்டு அமைக்கப்பட்டது. ஏறக்குறைய இரண்டரை மீட்டர் உயரம், ஒண்ணே கால் மீட்டர் அகலம், முக்கால் மீட்டர் உள்புறம். இரண்டே கனமான மரப்பலகைத் தட்டுகள் கொண்டது.

ஒரு பூஜை அறை என்றால் எத்தனை சிலைகள், படங்களை நீங்கள் பார்த்திருக்கக்கூடும்? அத்தனைக்கும் மேலான சிலைகள், கண்ணாடி ஃப்ரேம் போட்ட படங்கள் இங்கே உள்ளன. கருங்கல் சிலைகள், மரக்கல் சிலைகள், உலோகச் சிலைகள், மரச்சிலைகள். பரமசிவன் என்றால், லிங்கம், நடனம் ஆடும் நடராஜ பெருமான். கண்ணன் என்றால், தவழும் குழந்தைக் கண்ணன், குழல் வாசிக்கும் கோகுலக் கண்ணன் மற்றும் பார்த்தசாரதி. விஷ்ணுவின் அத்தனை அவதாரப் படங்கள். அத்தோடு ஒரு அன்னம்மா சிலையும் இருந்தது.

போதும், இல்லையா? பொறுங்கள். இதை மட்டும் சொல்லி மேற்கொண்டு தொடர்கிறேன். பூஜை அறையில் இல்லாது, வெளியே வாசல் பால்கனியில் உள்ள மதுரை வீரன் சிலையைக் குறிப்பிட்டாக வேண்டும். காவல் தெய்வம் அது. அதற்கும் தினப்படி மலர் மாலை, கற்பூர ஆராதனை, ஆரத்தி அனைத்தும் உண்டு.

நாள்தோறும் முற்பகல் மணி பத்திலிருந்து பன்னிரண்டு வரை பூஜை. அர்ச்சகர் ஸ்தானத்தில் இருப்பவர் என் பெரியம்மா. மல்லிகையும், ஊதுவத்தியில் தாழம்பூவும் மணக்கின்றன. அத்தனை உலோகச் சிலைகளுக்கும் தினமும் பால், தேன், தயிர் அபிஷேகங்கள் நடைபெறும். மணியின் வெண்கல நாத கிணுகிணு ஒலி காதுகளுக்குத் தீராத இனிமை. நிவேதனம் செய்யப்படும் சாதம், பருப்பு ஆகியவை ஒரு சொட்டு நெய்யுடன் பிடி அளவு காகங்களுக்குச் செல்கின்றன. கடிகார நேரம் தெரிந்த காகங்கள் அவை.

இரவு மணி ஏழு அளவில் நாமாவளி வழிபாடு செய்வார் பெரியம்மா. கற்பூர தீபம் காட்டப்படும். வெள்ளி இரவு பஜனை. பஜனை முடிய இரவு மணி ஒன்பது, ஒன்பதரை ஆகிவிடும். பஜனையில் பக்கத்து, எதிர்வீட்டுக்காரர்களும் கலந்து கொள்வது உண்டு. பூ மாலை, கற்பூரம், ஊதுவத்தி, சுண்டல்களுக்கான பஜனை செலவுகளை அவர்கள் ஏற்பது வாடிக்கை.

''உன் பாரதியாரையும் கொண்டு வந்து பூஜையில் வையேன்'' என்றார் பெரியம்மா ஒரு சமயம். மறுத்து விட்டேன். ''உங்க அபிஷேகத்தை எல்லாம் பாரதி தாங்க மாட்டார். கறுப்புக் கோட்டு கலர் மாறிடும்'' என்றேன்.

♦ ம.ந.ராமசாமி ♦

எங்கள் பூஜையறையிலிருக்கும் அன்னம்மா சிலை, இரண்டு நூற்றாண்டு களாக பாரம்பரியமாகக் குடும்பத்தில் இருந்து வருகிறது. ஐம்பொன்னால் ஆன சிலை. பதினைந்து சென்டிமீட்டர் உயரம். மிக அழகான வார்ப்பு. முகத்தில் சின்ன நாணத்துடன் கூடிய இனிய புன் னகை. பால், தேன், தயிர் அபிஷேகங்களுக்குப் பிறகு தூய் மையான நீர் அபிஷேகம் பெறும் சிலை, துடைக்கப்பட்ட பிறகு, பொன்னாக மிளிரும்.

கருகருவென்று அழுந்த வாரப்பட்டது போல தலைமுடி. முழங்கால் அளவு சிறு சாட்டையான பின்னலிட்ட சடை. வளைகாப்பு மங்கை போல கை நிறைந்த வளையல்கள். நாகொத்து. கழுத்தில் சங்கிலி, காசுமாலை. இடுப்பில் ஒட்டி யாணம். கால்களில் கொலுசு



கள். காதுகளில் சிவப்புத் தோடு. மூக்குத்தி. அனைத்தும் பொன்னால் ஆனவை. அணிகலன்களுடன் அன்னம்மா சர்வ ஆபரண பூஷிதையாகத் திகழ்கிறாள்.

எந்தக் காலத்துச் சிலை அது என்பது குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களுக்கும் தெரியவில்லை. கிறிஸ்துவுக்குப் பின் பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்து குடும்பத்தில் இருந்து வருகிறது என்று சொல்கிறார்கள். யாரோ ஒரு மகான், சித்த புருஷர் வந்து ஒருநாள் குடும்பத்தாரோடு விருந்தினராகத் தங்கி விட்டு, விடைபெற்றுச் செல்லும்போது, தன் சிறு துணி மூட்டையுள் கைவிட்டு ஜாலமாகச் சிலையை எடுத்து அன்பளிப்பாகத் தந்து விட்டுப் போனார் என்பதான கதை ஒன்று உண்டு.



தன்னுடன் அன்னம்மா பேசுவதாக பெரியம்மா சொல்கிறார். எவரும் அவருடன் இதுகுறித்து விவாதம் செய்வது இல்லை.

தன்னுடன் அன்னம்மா பேசுவதாக பெரியம்மா சொல்கிறார். எவரும் அவருடன் இதுகுறித்து விவாதம் செய்வது இல்லை. தினப்படி பூஜையின்போது, அஷ்டோத்திரம், ஸ்லோகங்கள், பாடல்களுக்குப் பிறகு அன்னம்மாவுடன் பெரியம்மா உரையாடுவதை நாங்கள் கேட்கிறோம். பேச்சு தெளிவாகப் புரிபடுவது இல்லை. ''என்ன பேசினேள், பெரியம்மா?'' என்று கேட்டால், ஊர் விவகாரம், உலக சமாசாரம் பற்றிப் பேசினோம் என்கிறார். காஷ்மீர் விவகாரமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு உண்டு.

''பேசட்டும், பேசட்டும். அதனாலே தப்பு இல்லே'' என்கிறார் சின்ன மாமா விட்டேத்தியாக.

ஒரு சமயம் நான், ''எல்லாம் சரி, பெரியம்மா... அன்னம்மா பிரத்யட்ச தெய்வம், ஒத்துக் கொள்கிறேன். எல்லா சாமிக்கும் சந்தனப் பொட்டும், குங்குமத் திலகமும் இடறபோது, அன்னம்மாவுக்கு மட்டும் நெத்திலே ஏன் திலகம் இடறது இல்லே?'' என்று கேட்டேன்.

''இது தெரியாதாடி உனக்கு? மண்டு! யாரும் சொல்லலியா?'' என்று வியப்போடு கேட்டார் பெரியம்மா. ''அவ துலுக்கப் பொண்ணுடி! துலுக்கப் பெண்கள் நெத்திக்கு இட்டுக்க மாட்டா. ஸ்ரீரங்கத்துல துலுக்க நாச்சியாரை, நீ பார்த்ததில்லே... அவளுக்கு மட்டும் ரொட்டி வெண்ணெய் நைவேத்யம்; பெரிய பெருமாளுக்குச் சர்க்கரைப் பொங்கல்...'' பெரியம்மா சந்தோஷமாகப் பேசிக் கொண்டேயிருந்தாள். அன்னம்மா முகத்தில் திருப்தியான நட்புப் புன்னகை தெரிந்தாற்போலிருந்தது எனக்கு. ●

''என்னது! பணம் வாங்கிட்டு, உங்களுக்குத்தான் வோட்டுன்னு, சாமி படத்து மேல சத்தியம் பண்ணணுமா? யோவ்! நாங்க பகுத்தறிவுக் கட்சி!''

''அப்போ பெரியார் படத்து மேல சத்தியம் பண்ணுங்க.''

- கௌதம்

நீங்கள் கேட்டவை - தராசு

எந்த சானலில் செய்தி பார்ப்பது?

● பி.மகேஷ், திருச்சி

? தலைமை தேர்தல் கமிஷனர்களாகப் பணியாற்றிய சேஷன் - கோபாலசாமி; ஒப்பிட முடியுமா?

! தேர்தல் கமிஷன் என்னும் அமைப்புக்கு உள்ள அதிகாரத்தை உணர்த்தியவர் சேஷன். அதைக் காப்பாற்றியவர் கோபாலசாமி.

● கே.ஏ.நமசிவாயம், பெங்களூரு ❒

? வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்யும்போது காட்டும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைப் பார்க்கும்போது தலை சுற்றுகிறதே! இவ்வளவு வைத்திருப்பவர்கள் எதற்காகத் தேர்தலில் நிற்க வேண்டும்?

! பணம் படைத்தவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்று சட்டம் இல்லை. அத்தகையவர்கள் வென்றால், பணம் சம்பாதிப்பது பற்றிய கவலையின்றி மக்களுக்கு நற்பணி ஆற்ற முடியும். ஆனால், அத்தகைய பெருந்தன்மை மிக்க பணக்காரர்களாக பெரும்பாலோர் அமைவதில்லை. மேலும் மேலும் பணம் பண்ணவே பதவியைப் பயன்படுத்துகிறார்கள். இதனால்தான் வாக்காளரின் பொறுப்பு பன்மடங்காகிறது.

● இழந்த வலிமை!



● உமரி பொ.நாராயணன், மும்பை

? தமிழ்த் தொலைக்காட்சி சானல்கள் எல்லாமே நடுநிலை தவறி கட்சி சார்பாகச் செய்தி வாசிக்கின்றனவே, நடுநிலை அறிய எந்த சானலைப் பார்ப்பது?

! அதான் கல்கி படிக்கிறீங்களே, அதுவே போதுமே!

● பி.ஜெய்பிரகாஷ், சர்க்கார்பதி

? ''அண்டை நாடுகளில் பயங்கரவாதிகளின் கை ஓங்கியுள்ளது. வலுவான அரசால் மட்டுமே பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியும்; எனவே சுயேச்சைகளுக்கு வோட்டளிக்காதீர்கள்'' என்று சோனியா காந்தி கூறியுள்ளது பற்றி...?

! வலுவான அரசால் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியும் - நேர்மையான அரசாகவும் இருந்தால். இல்லாவிட்டால் லஞ்ச-ஊழல் நமது தேசத்தின் பாதுகாப்பையே அடகு வைத்து விடும். குவோட்ரோச்சியைத் தப்ப விட்டதுடன், தேடப்படுவோர் பட்டியலிலிருந்து நீக்கவும் அனுமதித்த ஒருவரை எந்த அடிப்படையில் நம்புவது? சுயேச்சைகளை எப்படிப் புறக்கணிப்பது?

● லலிதா செல்லப்பா, பம்மல்

? பண பலம், ஜாதி வெறி, சிறுபான்மையினரை வைத்து நடத்தப்படும் அரசியல் போன்றவற்றை முதலாகப் போட்டு நடத்தப்படும் அரசியல் வியாபாரத்தில்

● ஓட்டுநர் இன்றியே..!





● புதிய நீதி!

அப்பாவி வாக்காளர்கள் எதைச் சாதித்துவிட முடியும்? வோட்டு போட்டாலும் போடா விட்டாலும் தவறுகள் தானே வெற்றி பெறுகின்றன?

! இறுதியில் நின்றுவிடப் போகிற மூச்சுதானே என்பதால் யாரும் மூச்சு விடாமல் இருப்பதில்லை. சிந்தித்துப் போடப்படுகிற உங்கள் வோட்டுதான் ஜனநாயகத்தின் மூச்சுக்காற்று.

● எல்.பத்மினி, வேங்கைவாசல் ★

? கலைஞர் தமது ஆட்சிக் காலத்தில் பல இலவசங்களைத் தந்தது போல, கலைஞர் டி.வி.யிலும் நேஷனல் ஜியாகிரஃபிக், அனிமல் பிளானட் போன்ற தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகளை வாங்கி இலவச ஒளிபரப்பாக வழங்கலாமே! 'மானாட மயிலாட'வைக் காட்டிலும் இதற்கு வரவேற்பு கிடைக்குமே...?

! கலைஞர் டி.வி. என்ன கடைத் தேங்காயா, வழிப் பிள்ளையாருக்குப் போட்டு உடைக்கிறதுக்கு! அது அரசுத் துறை அல்ல; முழுக்க முழுக்க தனியார் பிஸினஸ். கூடுதலாக, கட்சிப் பிரசாரத்துக்கான புல்டோசர்! 'மானாட மயிலாட' பார்க்கற மயக்கத்துல வோட்டு போடறதுக்கும் உலக நடப்புகளைத் தெரிஞ்சுக்கிட்டு விழிப்புணர்வோட வோட்டு போடறதுக்கும் வித்தியாசமிருக்கில்லே!

● எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

? ''எவரையும் துன்புறுத்துவது நல்லதல்ல'' என்று குவாட்ரோச்சி 'விடுவிப்பை' நியாயப்படுத்துகிறாரே நம் பிரதமர்?

! ஆஹா...! இருபத்தொன்றாம் நூற்றாண்டின் மன்மோகன் நீதி!

● ஆர்.செந்தில்முருகன், பெண்ணாடம்

? கோடைக்கு இதமானது எது?... மோர், இளநீர், நுங்கு, குளிர்பானம்!

! புளிக்கிற கவலை இல்லை; உரிக்கிற வேலை இல்லை; (தொண்டையைப்) பிடிக்கிற அபாயம் இல்லை... என் வோட்டு இளநீருக்கே!

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? ''தமிழ் ஈழத்துக்கு இலங்கையில் இடமில்லை. வேறு இடத்தைப் பாருங்கள்'' என்று ஜெயலலிதாவுக்கு இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தய ராஜபட்சய பதில் சொல்லியுள்ளாரே?

! இதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. 'நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் ஈழத் தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை வலியுறுத்திப் பெற்றுத் தருவோம்' என்று ஜெயலலிதா கூறியிருப்பாரேயானால்

❑ ரூ.150/- பரிசு பெறுபவர் :

கே.ஏ.நமசிவாயம், பெங்களூரு

★ ரூ.75/- பரிசு பெறுபவர் :

எல்.பத்மினி, வேங்கைவாசல்

பதில் பேச்சுக்கே இடமிருந்திருக்காது.

● டி.முருகேசன், திருவாரூர்

? பெரிய கட்சிகளே தேர்தலில் தோற்று விடும்போது, சுயேச்சைகள் எதற்காக நிற்கிறார்கள்?

! ஜனநாயகத்தில் சராசரி மக்களுக்கும் உரிமையும் பொறுப்பும் உள்ளதைப் பதிவு செய்யத்தான்.

● எம்.கே.அருள்ராஜா, முனியங்குறிச்சி

? காதலித்துக் கை கழுவுறது கொலைக்குச் சமம்; காதலிக்காமல் இருப்பது தற்கொலைக்குச் சமம்! காதலிக்கலாமா? வேண்டாமா?



★ அதிகாரத்துக்கு...

! இயல்பாக, தானே மலரும் மெய்க் காதலில் இந்தக் கேள்விகளே எழ மாட்டா. அவ்வாறின்றி, இல்லாத காதலை ஒருவரிடம் வற்புறுத்தி ஏற்படுத்த முயல்வது கொலை முயற்சிக்கு சமம்; வரவழைத்துக் கொள்ளப் பாடுபடுவது தற்கொலைக்குச் சமம்! காதல் தானாக மலராவிட்டால், பிறருடைய காதல் அனுபவத்தின் மணத்தை, தொலைவிலிருந்து முகர்ந்து மகிழுங்கள்.

● கே.தெய்வசிகாமணி, சென்னை-82

? ரேஷன் கடைகளில் மிளகாய்த் தூள், கடலைப் பருப்பு, மல்லித் தூள் போன்றவை மூட்டை மூட்டையாகத் தேங்கி வீணாகப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதே?

★ நாடக வசனம்



! வரிப்பண விரயத்தின் உச்சம்! தொலைநோக்கற்ற நிர்வாகத்தின் இன்னொரு சாட்சியம்!

● உ.குணசீலபாண்டியன், இராஜபாளையம்

? குடிநீர் பிரச்னைக்குத் தீர்வு காணக் கோரி ஒருவர் தொடுத்த பொதுநல வழக்கில், 'மக்களுக்குத் தண்ணீர் வழங்க இயலாத அரசு பதவியில் நீடிக்கத் தகுதியற்றது' என்று சுப்ரீம் கோர்ட் அதிரடியாகத் தெரிவித்துவிட்டதே?

! உச்சநீதிமன்றத் தீர்ப்புகளும் கண்டனங்களும் இன்றைய அரசுகளுக்குத் தண்ணி பட்ட பாடு! கடிக்கற எறும்பை தட்டி விட்டுட்டுப் போகற மாதிரி போய்க்கிட்டே இருப்பாங்க!

★ ...அங்கீகாரம்



● எம்.ஏழுமலை, அக்ரஹாரம்

? லாலு பிரசாத் நிர்வாகத்தில், டிரைவர்கள் இல்லாமலேயே ரயில்கள் ஓடுகின்றன என்று பீஹார் முதல்வர் நித்தீஷ் குமார் சொல்கிறாரே?

! ஆமாமாம்! அதான் பார்த்தோமே, சென்ட்ரல்லேருந்து வியாசர்பாடிக்கு, டிரைவர் அல்லாத ஒரு டுபாகூர் ஆசாமி ரயில் ஓட்டியதை!

● என்.காளிதாஸ், சிதம்பரம்

? ''இலங்கையில் போர் நிறுத்தம் கருணாநிதியின் உண்மையான போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி'' என்கிறாரே திருமாவளவன்?

! புலிகள் பதுங்கியிருக்கும் பகுதி மீதான தாக்குதல் நிறுத்தப்படவே இல்லை என்கிற நிலைமையில், இது ஒரு நாடக டயலாக்தான்.


●



பாசறை தந்த

வேன்களில் இருந்து தண்ணீர் பாக்கெட்டுகளையும் ரெட்டை இலை பிளாஸ்டிக் விசிறிகளையும் விசி எறிந்தார்கள். கூட்டம் தள்ளு முள்ளுக்கு மத்தியில் போராடி அவற்றைப் பெற்றது. கடும் வெயில். தண்ணீரைப் பருகியவாறு விசிறிக் கொண்டார்கள். இதைவிடப் பெரிய கஷ்டம்... பொதுக் கூட்டப் பந்தல் இல்லாததால் நிழலுக்காக நிறைய பேர் பிளாஸ்டிக் சேர்களை குடைகளாகப் பிடித்துக் கொண்டனர்! கரூரில் ஜெயலலிதா பிரசாரம் செய்ய வந்தபோதுதான் இந்தக் கூத்து.

சென்ற ஆண்டு அ.தி.மு.க. துவங்கிய இளைஞர், இளம்பெண்கள் பாசறையிலிருந்து ஆர்வத்துடன் வந்திருந்தனர். அ.தி.மு.க. வளர்ச்சிக்கு மேற்கண்ட பாசறை கூடுதல் பலம்.



மோகன் என்ற தொண்டர் இரட்டை இலைக் காவடியை தலையில் சுமந்து கொண்டு கரூர் நகரை வலம் வந்தபடி இருந்தார். "இதோட எடை முப்பது கிலோ. இரட்டை இலைச் சின்னம் எல்லார் மனசுலயும் பதியணும்னு

இப்படி வலம் வரேன். வித்தியாசமான பிரசார பாணி இது!'' என்றார்.

ஜெயலலிதாவின் ஹெலிகாப்டர் தாழ்வாக வந்ததும் கரகோஷமும், விசில் சப்தமும் விண்ணைத் தொடுகின்றன. ''அம்மா, காலேஜ் கிரவுண்டுல இறங்கப் போறாங்க. இன்னும் பத்து நிமிஷத்துல வந்துடுவாங்க!'' ஆளாளுக்கு ஏதேதோ பேசிக் கொள்கிறார்கள். உச்சி வெயில் நேரத்திலும் சாலையோரங்களிலும் பொதுக் கூட்ட மைதானத்திலும், அந்தப் பெருந்திரள் கூட்டம் கலையாது நிற்கிறது.





பலம்!

வேனிலிருந்து இறங்கி ஜெயலலிதா மேடையேறிய மறு நிமிடமே நிகழ்ச்சி துவங்கி விடுகிறது. மைக் பிடித்து முழங்கத் தொடங்குகிறார். தொகுதி வேட்பாளர் கரம் குவித்து நிற்கிறார். ஒரு இன்ப அதிர்ச்சி: மேடையில் குறிப்பிட்ட மாவட்டத்தின் மேல் மட்டப் பொறுப்பாளர்கள், நாற்காலிகளில் அமர்ந்துள்ளனர்!



ஜெயலலிதா பேச்சிலிருந்து சில துளிகள்:

★ சென்னை விமான நிலையத்தில் நானும், கருணாநிதியும் நேருக்கு நேர் சந்திப்பதைத் தவிர்க்க போலீசார் முயற்சி மேற்கொண்டார்களாம். நாங்கள் ஏன் நேரில் சந்திக்கக் கூடாது? நேருக்கு நேராக கருணாநிதியைச் சந்திப்பதில் எனக்குப் பயமில்லை. என்னைச் சந்திக்க கருணாநிதி தான் பயப்படுகிறார். அது மட்டுமல்ல; மக்களைச் சந்திக்கவே அச்சப்படுகிறார் கருணாநிதி.

★ ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நளினிக்கு, ஆயுள் தண்டனையாகப் பெற்றுத் தந்தார் சோனியா. ஆனால், தந்தையின் கொலையை மறக்க முடியாது என்கிறார் ராகுல்காந்தி. தான் மறந்தாலும் நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள் எனச் சொல்கிறார் பிரியங்கா. முரண்பாட்டின் மொத்த உருவம் காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி.

★ சுவிஸ் வங்கி பணத்தை இந்தியாவுக்குக் கொண்டு வர, அடுத்த ஐந்து ஆண்டுகளில் பத்து கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்க, ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை 150 நாட்களாக மாற்ற, இலங்கையில் தனி ஈழம் அமைய, கச்சத் தீவை மீட்க அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை நாற்பது தொகுதிகளிலும் வெற்றிபெறச் செய்யுங்கள்.

"மக்களைச் சந்திக்கவே அச்சப்படுகிறார் கருணாநிதி!"

'மின் வெட்டினால் வீட்டில் உங்களை நிம்மதியாகத் தூங்க விடாத கருணாநிதிக்கா உங்கள் வோட்டு?' எனக் கேட்கிறார் ஜெ! இதுபோல் ஒவ்வொன்றையும் சொல்லிச் சொல்லி பொதுமக்களைப் பார்த்து ஏற்ற இறக்கங்களுடன் வினா எழுப்புகிறார். இது வாக்காளர்களிடையே அதிக வேகத்தில் சென்று சேர்வதாகவே தெரிகிறது.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

திருச்சி மாநகர் மாமன்ற உறுப்பினர் கிருஷ்ணவேணி மதிவாணன்:

"முரண்பாடுகளின் மொத்த உருவமே ஜெயலலிதாதான். பொது மக்களிடமிருந்து வாக்குகளை வாரிச் சுருட்டிக் கொண்டு போக வேண்டுமென்பதற்காக, திடீர் கரிசனமாக தனி ஈழம், வேலை வாய்ப்பு, கச்சத் தீவு மீட்பு என வாய்க்கு வந்தபடி பேசுகிறார். இதெல்லாம் தேர்தல் நேர நாடகம்!"


சுரேஷ் (பெரியார் நகர் அ.தி.மு.க. பிரமுகர்):

"இந்தியாவில் உள்ள மாநிலக் கட்சிகளிலேயே, தேசியக் கண்ணோட்டத்துடன் தேர்தல் அறிக்கை வெளியிட்டிருப்பது அ.தி.மு.க. மட்டுமே. தொகுதி பிரச்னைகளையும், பொது மக்கள் நலன்களையும் பட்டியலிட்டு அவற்றை நிறைவேற்றித் தருவேன் எனக் கூறி எங்கள் தலைவி வாக்குகள் கேட்பதில் என்ன தவறு? தி.மு.க. - காங்கிரஸ் கட்சியினர் தோல்வி பயத்தில், பேசி வருகின்றனர். ஜெயலலிதாவின் பிரசாரப் பயணத்தில் பொது மக்கள் மத்தியில் புதிய எழுச்சி தோன்றியுள்ளது."

★ கிருஷ்ணவேணி



★ சுரேஷ்



வாசகர் எதிரொலி

சரியாகத்தான் செல்கிறது இந்து மதம்...

கல்கி 10.5.09 இதழில் ''கோயில்கள் என்ற ஆணிவேரில் நிற்பது குறைந்து, குருமார்களின் ஆசிரமங்கள் என்ற சல்லி வேர்களை நம்பி இந்து மதம் நிற்பது சரிதானா?'' என்று கேள்வி எழுப்பி யிருந்தார் ககி.சிவம்.

கோயில்கள் முக்கியத்துவத்தை இழந்ததற்கு பல காரணங்களைக் கூறியிருந்தார். ஆனால் முக்கியக் காரணங்களான இந்துக் கோயில்களை யும், கடவுள்களையும் சாதாரண மனிதன் எளிதில் அணுக முடியாத கோயில் அமைப்பு, தாழ்குல மக்களையும், வேற்று மதத்தினரையும் கோயிலுக் குள் அனுமதிக்காத மறுப்பு, மற்றும் வேற்று மதத்தினர் கோயிலுக்குள் நுழைந்தால் பின்னர் செய்யப்படும் சுத்திகரிப்பு, அர்ச்சனை செய்ய அர்ச்சகரின் தேவை, அர்த்தம் தெரியாமலே ஓதப் படும் மந்திரங்கள் போன்ற பக்தனைக் கடவுளிட மிருந்து பிரிக்கும் இடைவெளிகளைச் சொல்ல மறந்துவிட்டார்.

கோயிலை, கடவுளை நம்பியிருந்த சமூகச் சூழல் இன்று மாறி, இயந்திரத்தனமான மற்றும் கேளிக்கை மிகுந்த சூழலில் சிக் குண்டு இருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான் முழுமையான குரு என்று ஏற்க முடியாத 'நவீன குரு'க்களும் கொஞ்சம் யோகா, கொஞ்சம் பஜனை, கொஞ்சம் மூச்சுப்பயிற்சி என்று மக்களைக் கவரும் இளநிலை ஞானிகளும் முக்கியத் துவம் பெறுகின்றனர். இவர்கள் முயற்சியால் தான் இந்து மதத்துக்கு உள்ளே மூடி மறைக் கப்பட்டு, புதையுண்டு கிடந்த அரிய பொக் கிஷங்கள் விலைமதிப்பற்ற விவரங்கள் புத்தக வடிவிலும், சி.டி. மற்றும் டி.வி.டி. வடிவிலும் வெளியிடப்படுவதால், சிந்திக்கக் கற்றுக் கொண்ட சமூகம், கண்மூடித்தனமாக கடவுளை நம்புவதை விடுத்து, படைப்பின் அதிசயம், படைப்பின் புதிர், உயிரின் ஆரம்பம், இறைத் தன்மை, இறைத்தன்மையை உணர்தல் போன்று, பல ஆன்மிக ஆராய்ச்சிகளில் ஈடுபடுகிறது.

கிறிஸ்தவர்களுக்கு பைபிள்; முகமதியர் களுக்கு குர்ஆன். ஒரு புத்தகத்தில் அடங்கக் கூடியது அல்ல இந்துமதம். இந்துக்களுக்கு பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் உண்டு. கீதை, பதஞ்சலி, சிவசூத்திரம் என நீளும் அந்தப் புத்தகங்களிலிருந்து அரிய தத்து வங்களை, யுக்திகளை பொது மக்களைச் சென்றடையச் செய் பவர்கள்தான் இந்த நவீன குருமார்களும் இளநிலை ஞானி களும். இவர்கள் முதுநிலை ஞானி கள் ஆக பிரகாசமான வாய்ப்பு உண்டு.

என் பார்வையில் இந்துமதம் சரியான பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறது.

- டாக்டர் பி.துளசிதாஸ்,
சென்னை





விறுவிறு

சுழலும் பம்பரமா அல்லது கொட்டும் முரசா? ஒரு ரூபாய் கூட பந்தயம் கட்டாமல் விருதுநகர் தொகுதி வாக்காளர்களிடையே உலவி வரும் உள் மனக் கேள்வி இது. காரணம், அந்த இரண்டு வேட்பாளர்களுமே வாக்காளர்களுக்கு 'பணப் பரிசு' தருகின்ற செயல்பாட்டில், உடன்பாடு இல்லாதவர்கள்.

'செய்தவை... செய்ய நினைப்பவை...' என்கிற தலைப்பில், எட்டு பக்கங்கள் கொண்ட வெளியீடு ம.தி.மு.க. வேட்பாளர் வைகோ சார்பாக தொகுதி முழுவதுமாக வினியோகிக்கப் பட்டுள்ளது. 'மக்களின் தேர்தல் அறிக்கை'யாக பன்னிரண்டு பக்கங்களில் விவரமாகக் குறிப்பிட்டு புத்தகம் வெளியிட்டுள்ளார் தே.மு.தி.க. வேட்பாளர் மாஃபா பாண்டியராஜன். தமிழகத்தின் இதர மக்களவைத் தொகுதிகளுடன் ஒப்பிடுகையில், இது ஒரு 'ஆரோக்கியமான' போட்டியாகவே கருதப்படுகிறது.



புதிய விருதுநகர் மக்களவைத் தொகுதியில் விருதுநகர், சிவகாசி, சாத்தூர், அருப்புக்கோட்டை, திருமங்கலம் மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய ஆறு சட்டப் பேரவைத் தொகுதிகள் அடங்கியுள்ளன. அ.தி.மு.க. கூட்டணியின் ம.தி.மு.க. வேட்பாளர் வைகோ. தனித்தே துணிந்து போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர் பாண்டியராஜன். சிறு சலசலப்புக்குப் பின்னர் காங்கிரஸ் வேட்பாளராக அறிமுகம் பெற்றுள்ள மாணிக் தாகூர், காங். ராஜ்யசபா எம்.பி.யான சுதர்சன நாச்சியப்பனின் அண்ணனின் மகன்! மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளராக ஒய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். கனகராஜ். இவர்களைத் தவிர தாமரை சின்னத்தில் போட்டியிடும் நடிகர் கார்த்திக்.

மொத்தத்தில் ஐந்து முனைப் போட்டியினால், விருதுநகரில் விறுவிறுப்பு கூடியுள்ளது.

தொகுதிக்குள் என்ன பிரச்னைகள்? ''மாவட்டத் தலைநகர்னு சும்மா ஒப்புக்குத்தாங்க. புதுசா ஒரு ஆளு எங்க ஊருக்கு வந்து சைக்கிள் ஓட்டினா, முட்டிக்காலு பேந்து போயிதான் ஊருக்குப் போவாரு. அந்தளவுக்கு ரோடுங்க எல்லாமே மோசம். பேசாம 'விருதுநகர்'ங்கறத 'விருதுப்

விருதுநகர்!

பட்டி'னு மாத்தி வெச்சிடலாம்!'' என்கிறார் கல்லூரி மாணவரான செல்வம்.

''பதினொரு மாதங்கள் விருதுநகர் மாவட்ட கலெக்டராக இருந்தவர், பகுஜன் சமாஜ் வேட்பாளர் கனகராஜ். பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த வோட்டுகளும் அவருக்கே!'' என்பது சேர்வைக்காரன்பட்டி ஜான்மாரி நபி கருத்து.

''வைகோ ஜெயிச்சும் எங்க ஊருக்கு ஒண்ணும் செய்யல. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ஜெயிச்சும் ஒண்ணும் செய்யல. இந்த சிப்பிப்பாறை ரவிச்சந்திரன் ஜெயிச்சும் எங்க ஊருக்கு எதுவுமே பண்ணலை!'' எனக் குறைபட்டுக்கொள்கிறார் குல்லூர் சந்தை கிராமத்தின் ஆண்டி.

* மாஃபா பாண்டியராஜன்



அளவுக்கு உயரிய பண்பாளர். விருதுநகர் தொகுதி வாக்காளர்களின் மனசாட்சி வோட்டு வைகோவுக்கே!'' எனக் கூறுகிறார் பாரதி நகர் சத்யபாமா.

தே.மு.தி.க. வேட்பாளர் மாஃபா பாண்டியராஜனின் தேர்தல் அலுவலகம், ஹைடெக் ஆபீஸ் ஆக இயங்கி வருகிறது. விருதுநகர் மக்களவைத் தொகுதியின் புவியியல் வரைபடம், தேர்தல் பிரசார கள ஆய்வு சார்ட், இளைஞர் பட்டாளம் என விருதுநகர் தொகுதியில் விறுவிறுப்பைக் கூட்டியுள்ளார் பாண்டியராஜன். வெற்றி இலக்கை அவர் எட்டிப் பிடிக்க இயலாமல் தடுத்து நிறுத்தும்



* சத்யபாமா



* ஆண்டி



* செல்வம்



* ஜான் மாரி நபி

தமிழகத்தின் இதர மக்களவைத் தொகுதிகளுடன் ஒப்பிடுகையில், இங்கே இது ஒரு 'ஆரோக்கியமான' போட்டியாகவே கருதப்படுகிறது.

''தொகுதியில பத்து வயதுக்குட்பட்ட 65,000 குழந்தைகளுக்கு தன்னோட சொந்தச் செலவுல, மஞ்சள் காமாலை தடுப்பூசி மூணு தடவை போட்டு விட்டாரு வைகோ. அந்த முகாம்ல தன்னோட கட்சிக் கொடியைக் கட்ட அனுமதிக்கலை. காரணம், ம.தி.மு.க. கொடி கட்டயிருந்தா மத்த கட்சி குடும்பத்துல உள்ளவங்க ஊசி போட்டுக்க வரமாட்டாங்கனு. அந்த

அரண்களாக அமைந்துள்ளன, தொகுதி மக்கள் வைகோமீது கொண்டிருக்கும் அன்பும், மரியாதையும். வைகோவைத் தோற்கடித்தே தீரவேண்டுமென திட்டமிட்டுச் செயல்படும் தி.மு.க.வின் கங்கணம் கரைந்து போகுமென்றே தோன்றுகிறது.

- இருள்நீக்கியான்

கிரேஸியைக் கேளுங்கள்



● குலசேகரன்,
நெல்லை.

அது என்ன வடிகட்டிய பொய்..?

சம்பந்தா சம்பந்தமில்லாமல் வரும் சொப்பன வாழ்க்கை வடிகட்டாத சகட்டு மேனிப் பொய். ஏதோ சம்பந்தம் இருப்பது போல நம்மை ஏமாற்றும் நனவு வாழ்க்கை, வடிகட்டிய பகட்டு மேனிப் பொய். வடிகட்டுபவனைக் கண்டுபிடித்தால், ரமணரைப் போல் கோவணக் கொடி கட்டிப் பறக்கலாம்.

● வசுந்தரா, பெங்களூர்.

கண்டிப்பு, கனிவு எது சிறந்த வழி?

கண்டிப்பாகக் கனிவுதான். கண்டிப்பு வெயிலில் காயவைப்பதற்குச் சமானம். கனிவு நிழற்காற்றில் நாசூக்காக உலர வைக்கும்.

● வைஷ்ணவி, டெல்லி

நான் கட்சி ஆரம்பித்தால் கிரேஸி நீங்கள் 'கொ.ப.செ.'வாக இருப்பீர்களா?

நான் 'கே.ப.சொ.' - கேள்விக்குப் பதில் சொல்பவன்.

● ஆர்.அஜிதா, கம்பம்.

திரிசங்கு சொர்க்கம் என்றால் என்ன?

அது Threeசங்கு சொர்க்கம். அன்னை சங்கில் பாலூட்டுவது முதல் சங்கு. மனைவியின் சங்குக் கழுத்தை அணைத்துக் கிடப்பது இரண்டாம் இடைச்சங்கு. மூன்றாவது இறுதிச் சங்கு ஊத இடு காட்டை அடைவது கடைச் சங்கு. மூன்றிலும் கிடைப்பது சொர்க்கம்தான்.

● எம்.மிக்கேல் ராஜ்,
சாத்தூர்.

வயது ஆக ஆக பெண்களுக்கும் தலையில் வழுக்கை விழுந்தால்...?

Wigகி Wigகி அழுவார்கள். Bold and Beautiful ஆக இருக்கும் பெண்கள் வழுக்கையோடு தைரியமாக Bald and Beautiful ஆக வலம்வருவார்கள். MKT பாணியில் கடலை போடும் ஆண்கள், 'வழுக்கையே சந்திர பிம்பமே' என்று முகஸ்துதியாகப் பாடி, வழுக்கைப் பெண்களின் காதில் பூ வைப்பார்கள்.



● ரா. பிரசன்னா, மதுரை.

தனிக்காட்டு ராஜான்னு சொல் றாங்களே. ராணி இல்லாம தனிக் காட்டுல ராஜாவா இருக்கறதுல என்ன பெருமை?

ராணியும், ராஜ்ஜியமும் இருந்தால் ராஜாவா? ராணியும், ராஜ்ஜியமும் இல் லாமல் தனியா, ராஜாவா இருந்து காட்டு வதுதான் தவம்.

● டி. முரளி நாராயணன், ஆலப்பாக்கம்.

விழலுக்கு இறைத்த நீர் எது?

எல்லா நீருமே விழ லுக்கு இறைத்த நீர் தான். வானத்திலிருந்து கீழே பூமிக்கு விழ லுக்கு (விழுவதற்கு) இறைத்த நீர் மழை. வேகமாக ஓடி கடலுக்குள் விழலுக்கு இறைத்த நீர் நதி. கண்களிலிருந்து கன்னத் தில் விழலுக்கு இறைத்த நீர் கண்ணீர். எழலுக்கு இறைத்த நீர் சுனாமி ஒன்றுதான்.

பி.கு: விழல் என்றால் பொதுவாக நாம் நினைப்பது போல வேஸ்ட் என்று அர்த்த மல்ல; நதி நீரில் விளையும் நாணலுக்கு விழல் என்று பெயர். அதற்கு நீர் இறைத் தல், ஊட்டிக்கு ஜில் வாட்டர் சப்ளை செய் யும் அசட்டுத் தனமாகும்.

● ஆர். ரங்கராஜன், தி.நகர்.

ராமாயணக் கூனி 'கூனிக் குறுகிய' சம்பவம் ஏதாவது உண்டா?

ராமாயணக் கூனிக்கு, கண்ணன் கிருஷ்ணாவதாரத்தில் முதுகில் ஒரு போடு போட்டு அவள் கூனலை நிமிர்த்தி விடுகிறார். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண-பின்னால் நிமிர்த்தி விடல்'.

● மஞ்சுதேவன், அயிரோலி

ஒருவேளை தற்பொழுது 'சிக்கி முக்கிக் கல்' உபயோகிக்க வேண்டியிருந்தால்...?

சிகரெட் lighter, heavierராக இருக்கும்!



ராஜா இல்லாத ராணி!

● ஜே.துரைராஜ், சென்னை.

இப்போது எது கௌரவம்?

இப்போதைக்கு கௌரவம் குக்கரில் தான் (ப்ரஸ்டீஜ்) இருக்கிறது. ●

மின்சார கண்ணன்!



தென் ஆப்பிரிக்க ரசிகர்களுக்கு ஐ.பி.எல். மிகவும் பிடித்துவிட்டது. வருடா வருடம் ஏப்ரல் மாதத்தில் இந்தியாவில் தேர்தல் நடக்கட்டும் என்று ஏக்கப் பெருமூச்சுடன் மைதானத்தில் பேனர் பிடிக்கிறார்கள். சந்தேகமில்லாமல் ஐ.பி.எல். 2 வெற்றிதான். ஆரம்பத்தில் ஆட்டங்களும் சரியில்லை. மைதானத்துக்கு வந்த கூட்டமும் சரியில்லை. ஆனால் ஒரே வாரத்தில் அத்தனை பழுதுகளும் சரிசெய்யப்பட்டுவிட்டன. ஐ.பி.எல். வரிசை அட்டவணையில் தினம் தினம் தென்பட்ட ஏற்ற இறக்கங்கள் பரபரப்புக்கு வித்திட்டன. திடீரென்று ஒருநாள் டெக்கானுக்கு முதலிடம். அடுத்தநாளே அந்த இடத்தில் பஞ்சாப். அதற்கடுத்த நாள் சென்னை. இறுதி இடம் மட்டும்தான் எப்போதும் கொல்கத்தாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

இத்தனைக்கும் மத்தியில் 20-20 உலகக் கோப்பை போட்டிக்கான இந்திய அணிப் பட்டியல் வெளியிடப்பட்டது. கொஞ்சம் பொறுத்திருக்கலாம். சென்னை சூப்பர் கிங்ஸின் திடீர் ஹீரோக்களான தியாகி, ஜகதியைக் காத்திருக்கச் செய்வதில் யாருக்கு நஷ்டம்? ஐ.பி.எல். முடிந்து மீண்டும் இன்னொரு 20-20 போட்டி என்பது கொஞ்சம் அலுப்பு தரக்கூடியதுதான். சீரியல் போல தினமும் கிரிக்கெட் பார்க்கும் நிலைமைக்கு நம்மைக் கொண்டுவந்துவிட்டார்கள்.

20-20 என்றாலே உடனே யூசுப் பதான் நினைவு வந்து விடுகிறது. அவருக்கு ஒரு மைதானம் போறவே போதாது. அவர் ஆடும்போது எல்லைக்கோடுகள் அனைத்தும் அர்த்தமிழந்து விடுகின்றன. நொறுக்கப்படும் ஒவ்வொரு பந்தும்

விளையாட்டு

பூ போடாதீங்க!



வடசென்னை தி.மு.க. வேட்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன் கொளுத்தும் வெயிலில் பிரசாரம் செய்து கொண்டிருந்த போது ஒரு தொண்டர், ''மாடியிலிருந்து பூக்களைக் கொட்டாதீர்கள்'' என்று மைக்கில் சொல்லிக் கொண்டே வந்தார். ''மாடியிலிருந்து கூடை, கூடையாகப் பூக்களை மேலே கொட்டுகிறார்கள். மாலை மற்றும் உதிரிப் பூக்களில் புழு மற்றும் எறும்புகள் இருக்கின்றன. வேர்த்து, விறுவிறுத்து அவஸ்தையோடு இருக்கும் நிலையில் எறும்பும் கடித்தால் கடுப்பின் எல்லைக்கே போய் விடுவோம். எனவேதான், மாலை, 'பூ' என்றால் பயந்து நடுங்குகிறோம்'' என்கிறார் இளங்கோவன்.



- கௌசி

பார்வையாளர் பகுதியில் இருபது வரிசை தள்ளி விழுகிறது. உலகின் சிறந்த 20-20 வீரர்கள் பட்டியலில் பதானின் பெயர் உண்டு. ஆனால் யூசுப் பதானால் டெஸ்ட் கிரிக்கெட் ஆட முடியாது என்று உறுதியாக நம்பப்படுகிறது. யூசுப்பும் டெஸ்ட் அணியில் சீட் பிடிக்க அடித்துக் கொள்வது கிடையாது. சச்சின், லக்ஷ்மண் போல யூசுப் பதான் ஆடும் அழகை நாள் முழுக்கப் பார்க்க முடியாது. ஆனால் யூசுப் பதானிடம் சமரசம் செய்துகொள்ளும் பாங்கு இருக்கிறது. கிரிக்கெட்டை பேஸ்பால் விளையாட்டுப் பாணியில் ஆடுகிறார். பந்து வீச்சுக்கு உகந்த ஆட்டம் என்றில்லாமல் எல்லாப் பந்துகளையும் ஒரு வெறியுடனே எதிர்கொள்ளும் மனப்பாங்கு. (தமிழ் சினிமாவாக இருந்தால் பேட்டுக்குள் மின்சாரம் பாயும்). 'உனக்கு என்ன தேவை, ரன்தானே, வேலையைப் பார்' என்கிற உடல்மொழி அவருடையது. 20-20க்கு இந்த அணுகுமுறை போதும்.



சென்னை சூப்பர் கிங்க்ஸ் பற்றிப் பேசியே ஆகவேண்டும். ஆரம்பத்தில் அணியின் சேர்க்கையில் நிறைய ஓட்டைகள். தியாகி, ஜகதி, விஜய் ஆகியோர் அணிக்குள் பாதி வழியில் நுழைந்தபிறகு தோனிக்கு இருந்த தலைவலிகள் பஞ்சாய்ப் பறந்து விட்டன. காட்ச் பிடிப்பதில்தான் சிறுபிள்ளைத் தனம் தெரிகிறது. கோடிகளையும் லட்சங்களையும் சம்பளமாகப் பெறும் வீரர்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்பும் அர்ப்பணிப்பும் அங்கே இல்லை.

- ச.ந. கண்ணன்

போராடிப் பெற்ற வெற்றி!

'தசாவதாரம்' அமெரிக்கப் படப்பிடிப்பின்போது தமிழ் பேசத் தெரிந்த ஒரு பெண் நடிப்பதற்காக இயக்குநருக்குத் தேவைப்பட, தயாரிப்பாளர், நண்பரின் மகள் ஷம்முவை சிபாரிசு செய்திருக்கிறார். கணநேரமே படத்தில் அவர் வந்து போனாலும், திறமையான நடிப்பால் கே.எஸ்.ரவிக்குமாரிடம் பாராட்டைப் பெற்றுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக அமெரிக்காவிலிருந்து, கோலிவுட்டுக்கு வந்திறங்கி, 'மலையன்' திரைப்படத்தில் கரணுக்கு ஜோடியாகவும் ஆகிவிட்டார். ஆடியோ வெளியீட்டு விழாவில் ஆங்கிலம் கலக்காமல் இவர் தமிழ் பேச, அரங்கத்தில் பலத்த கைத்தட்டல்கள்.

'வெற்றி சிலருக்கு ஈசியாகக்



ஆனந்தக் கண்ணீர்!

மூத்த கதாசிரியரான கலைமணி மற்றும் மணிரத்னம் போன்றவர்களிடம் உதவியாளராக இருந்தவர் முரளி அப்பாஸ். பன்னிரண்டு வருடப் போராட்டங்களுக்குப் பிறகு இவர் இயக்கி

ஜனநாயகக் கடமை!

ஒவ்வொரு குடிமகனும் தேர்தலில் கட்டாயம் வாக்களித்து தங்களின் ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற வேண்டும் எனும்படியான திரைப்படக் காட்சியொன்றில் நடித்திருக்கிறார் 'பத்மஸ்ரீ' விவேக்.

பரபரப்பான அரசியல்வாதிகளில் ஒருவரான ஜல்ஹவுஸ் தியாகு, ஓ.எம்.ஆர். எண்டர்பிரைசஸ் மூலம் தயாரிக்கும் படம்தான் 'இத்தனை நாளாய் எங்கிருந்தாய்?'

நகைச்சுவை வேடங்களில் நடிக்கும் விவேக்குக்கு இந்தப் படத்தில் கதாநாயகனுக்குரிய முக்கியத்துவம் கொண்ட வேடம் அமைந்திருக்கிறது.

பொருளாதார நிலையில் என்னதான் பின்தங்கிப் போனாலும் குடும்ப கௌரவத்தை விட்டுக்கொடுக்காத நெசவாளர் குடும்பத்துப் பெண்ணுக்கு ஏற்படும் காதல். அதனால் ஏற்படுகிற பிரச்னைகள்தான் படத்தின் கதையாம்.

கிடைச்சுடும். சிலர் போராடிப் போராடித்தான் பெற வேண்டியிருக்கும். அப்படி வளர்ந்தவர்தான் கரண்' என்றார் எஸ்.ஏ. சந்திரசேகர்.

'தெரிஞ்சா சொல்லுங்க...', 'கந்தக பூமியிலே...' பாடல்கள் கோடை வெயிலுக்கு இனி இதமாக இருக்கலாம்.




யிருக்கும் படம் 'சொல்லச் சொல்ல இனிக்கும்'. இலக்கிய வட்டத்தில் பிரபலமான தங்கமூர்த்தி (கவிஞர்) இந்தப் படத்தின் மூலமாக பாடலாசிரியராகிறார். இசையமைப்பாளரான பரத்வாஜ், 'பெரிய பட்ஜெட், சிறிய பட்ஜெட் படங்கள் என்று நான் வேறுபாடுகள் பார்ப்பதில்லை, கதையும், இயக்குநரின் அணுகுமுறையும் பிடித்திருந்தால் உடனே இசையமைக்க ஒத்துக் கொள்வேன்' என்றார்.

'இப்பொழுது உள்ள தயாரிப்பாளர்கள் எல்லாம் மார்க்கெட் இருக்கும் இயக்குநர்களைத்தான் படம் பண்ண கூப்பிடுகிறார்கள். திறமையும், தகுதியும் உள்ள புதியவர்களைக் கண்டுகொள்வது கிடையாது. இதையெல்லாம் மீறி எனது சீடன் ஜெயித்திருப்பது சந்தோஷமாயிருக்கு' என கலைமணி பேச, சீடரின் முகத்தில் ஆனந்தக் கண்ணீர்!

சின்னத்திரை தொகுப்பாளரான ஆனந்தக் கண்ணன் படத்தில் கதாநாயகனாக அறிமுகமாக, உன்னுடன், காலமெல்லாம் காதல் வாழ்க படங்களைத் தந்த ஆர். பாலு படத்தை இயக்குகிறார். படத்தின் இரண்டாவது கட்டப் படப்பிடிப்பு நடந்து வருகிறது.

– கிராபியென் ப்ளாக்



பாலிடிக்ஸ் போட்டி - 5











இங்கே ஒரு வாக்காளர் பிளஸ் நான்கு அரசியல் தலைவர்களின் படங்கள் தரப்பட்டுள்ளன. நான்கு பஞ்ச் டயலாக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. எந்த 'பஞ்ச்' யாருக்குப் பொருந்தும் எனக் கண்டுபிடியுங்கள். அத்துடன், மிஞ்சும் ஒருவருக்கு நீங்களே ஒரு பஞ்ச் டயலாக் எழுதி, கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள். சரியான விடை எழுதும் ஐந்து பேருக்கு குலுக்கல் முறையில் தலா ரூ.100/- பரிசு. சிறந்த 'பஞ்ச்' கொடுக்கும் ஒருவருக்கு ரூ.1000/- சிறப்புப் பரிசு. கடைசி தேதி : 22.05.09

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

1. சிங்கம் சிங்கிளாதான் வரும்

ஒரு பஞ்ச் கொடுங்க!

2. எவ்வளவு நாள்தான் வலிக்காத மாதிரியே நடிக்கறது?

3. வரும்; ஆனா வராது

4. ஐ'ம் பேக்

1. .... 2. ....

3. .... 4. ....

நீங்கள் கொடுக்கும் பஞ்ச்

....

என் பெயர் : ....

விலாசம் : ....

....

....

உறைமீது பாலிடிக்ஸ் போட்டி - 5 என்று மறவாமல் குறிப்பிடவும்.

கல்கியில் விரும்பி வாசிப்பது:

....

பரிசு ரூ.1500/—

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி

ஹாலிடே ஸ்பெஷல்



"இந்த வருஷம் நாங்கதான்!"



கதைகள், கவிதைகள், பரிசுப் போட்டி...

கோகுலம்

மே 2009 விலை ரூ.8/-

குழந்தைகளின் குதூகலம்!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.